விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 மாசி 06 திங்கட்கிழமை (18.02.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 061

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# பசியால் வாடிய பர்மியர் 98 பேர் கடலில் மாண்டனர்



## தப்பிய 38 பேர் கிழக்கு கரையில் மீட்பு



(காலி)

**இலங்கையின் கடற்பரப்பில் தத்தளித்துக் கொண்டிருந்த நிலையில் காப்பாற்றப்பட்டுள்ள பர்மிய நாட்டவர்கள், தம்முடன் பயணித்தவர்களில் 98 பேர் வரையில் பசியால் நடுக்கடலிலேயே உயிரிழந்து விட்டதாகத் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவர்களின் சடலங்கள் கடலில் தூக்கி வீசப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.**

கிழக்கு கரையிலிருந்து சுமார் 250 கடல் மைல்கள் தொலைவில் படகொன்றில் தத்தளித்துக் கொண்டிருந்த 32 பேர் இலங்கைக் கடற்படையினரால் நேற்று முன்தினம் சனிக்கிழமை மீட்கப்பட்டனர்.

இவர்களுடன் குறித்த படகில் பயணித்த 98 பேர் உணவு, குடிநீர் இன்றி நடுக்கடலிலேயே உயிரிழந்த நிலையில் அவர்களின் சடலங்கள் கடலில் வீசப்பட்டு விட்ட (20ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ விசாரணையை ஏற்றுக்கொள்ள முடியாது

### நவநீதம்பிள்ளை காட்டம்



(ஜெனிவா)

இலங்கையில் யுத்தம் தொடர்பில் இராணுவத்தினர் நடத்திய விசாரணையை ஏற்றுக்கொள்ள முடியாது என ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இறுதிக் கட்ட யுத்தம் தொடர்பில் இராணுவ நீதிமன்றம் விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக் (20ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதலுக்கு கண்டனம்

(ஜெனிவா)

சண்டே லீடர் பத்திரிகையின் ஊடகவியலாளர் பராஸ்ஸௌவுக்கத்தலி மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளருக்கு இலங்கை அரசாங்கம் பிரத்தியேக பாதுகாப்பு வழங்க வேண்டும் என நவநீதம்பிள்ளை கோரிக்கை விடுத்துள்ளார்.

சனல் 4 தொலைக்காட்சிக்கு வழங்கியுள்ள செவ்வி ஒன்றிலேயே ஐ.நா. (20ஆம் பக்கம் பார்க்க)

## சிங்களம் மற்றும் முஸ்லிம் நல்லுறவில் விரிசலை ஏற்படுத்த முயற்சி!

### கிழக்கு முதலமைச்சர் கவலை



(திருகோணமலை)

ஆயிரத்து 300 ஆண்டுகளாக இருந்து வந்துள்ள சிங்களம் மற்றும் முஸ்லிம் இன நல்லுறவை சீர்குலைக்க பெரும்பான்மை சமூகத்தவர்களில் மிகச்சிறிய எண்ணிக்கையிலான குழு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

தற்போது நாட்டில் இடம்பெற்று வரும் முஸ்லிம் விரோத வெறுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆராயும் விசேட கூட்டமொன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. திருகோணமலை (19ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவின் யோசனையால் இலங்கைக்கு பாரிய அச்சுறுத்தல்

(கொழும்பு)

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரும் யோசனையால் இலங்கைக்கு பாரிய பிரச்சினை ஏற்படும் அபாயம் உள்ளதாக சண்டே டைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் அந்த யோசனையின் படி ஐக்கிய நாடுகளின் போர்க் குற்றம் தொடர்பான விசேட நிபுணர்களுக்கு இலங்கையில் சுதந்திரமான நடமாட்டத்துக்கு கோரிக்கை விடுக்கப்படவுள்ளது.

பேச்சு சுதந்திரம், ஒன்றுகூடும் சுதந்திரம், சித்திரவதைகள் மற்றும் காணாமல்போதல் போன்ற விடயங்கள் தொடர்பில் இந்த நிபுணர்களின் செயற்பாடு அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு பக்கங்களைக் கொண்ட இந்த யோசனையின்படி இலங்கைக்கு யோசனையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த ஒரு வருட அவ (20ஆம் பக்கம் பார்க்க)

## தெல்லிப்பழை தாக்குதல் சம்பவத்துக்கு ஜனாதிபதியே பொறுப்புக்கூற வேண்டும்

### மாவை எம்.பி. முழக்கம்



(யாழ்ப்பாணம்)

தமது வாழ்விடங்களை விடுவிக்கக்கோரி அமைதி வழியில் வலிகாமம் வடக்கு மக்கள் நடத்திய உண்ணா விரதப் போராட்டத்தைக் குழப்பியடிக்க இராணுவத்தினர் முயன்றுள்ளனர்.

சிவில் உடையிலும், இராணுவ உடையிலும் வந்த படையினர் மக்கள் மீதும், ஊடகவியலாளர் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவத்திற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துருசிங்கவுமே முழுப்பொறுப்பு.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரு (20ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவையை 13 ஆக ஜனாதிபதி குறைக்க வேண்டும்

### தேசிய பிக்குகள் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு அமைச்சரவையைக் குறைப்பதற்கு எவ்விதமான பிரச்சினையும் இல்லை. அமைச்சரவையை 13 ஆகக் குறைத்தால் நாட்டில் இடம்பெறுகின்ற ஊழல் மோசடிகள் மற்றும் குற்றச்செயல்களை முடிவுக்கு கொண்டு வரலாம் என்று ஐக்கிய தேசியக் கட்சிக்கு சார்பான ஐக்கிய தேசிய பிக்கு சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே சங்கத்தின் பிரதம செயலாளர் வண. தின்யாவல பாலித்த தேரர் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் இரத்த ஆறு ஓடுவதற்கு காரணமாகவிருந்த யுத்தத்தை நிறை (20ஆம் பக்கம் பார்க்க)

## மத போதகர்களை வெளியேற்ற பொது பல சேனா கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் ஹலால் முறைமை இரத்துச் செய்யப்பட வேண்டும் என்று கடும்போக்கு பௌத்த அமைப்பான பொது பல சேனா அமைப்பு கோரியிருக்கிறது.

ஒரு மாத காலத்துக்குள் இலங்கையில் உள்ள வெளிநாட்டு மத போதகர்கள் வெளியேற்றப்பட வேண்டும் என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

கொழும்பு மகரகமவில் நடந்த அந்த அமைப்பின் வருடாந்தக் கூட்டம் ஒன்றின்போதே அந்த அமைப்பு இந்தக் கோரிக்கைகளை முன்வைத்துள்ளது.

வெளிநாடுகளுக்கு குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு இலங்கைப் பெண்கள் வீட்டுப் பணிப் பெண்களாக அனுப்பப்படுவதை நிறுத்த வேண்டும் என்றும் அந்த அமைப்பு கோரியுள்ளது.

இலங்கையில் பல பிரச்சினைகளுக்கு முஸ்லிம்களின் உலமா சபைகளே (20ஆம் பக்கம் பார்க்க)

## குளத்தில் மூழ்கி சிறுவன் பலி

(யாழ்ப்பாணம்)

குளத்தில் குளிப்பதற்கென சென்ற சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளான்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை பகல் 12.00 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் புளியங்கூடல் வடக்கைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் நிரோசன் (வயது-17) என்ற சிறுவனே உயிரிழந்தவராவார்.

மேற்படி சம்பவம் குறித்து தெரிய வருவது, (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# குருநாகல் முஸ்லிம் வர்த்தகர்களுக்கு காலம் குறித்து கொலை மிரட்டல்

## பயப் பீதியில் வர்த்தகர்கள்

ஹலால் மூலம் மக்களிடம் சுரண்டித் தின்னும் தம்பி, மார்ச் மாதத்துக்குள் கடைகளை விட்டு நீங்கள் வெளியேறாவிட்டால் உங்களுக்கு மரணம் தான்....

இவ்வாறு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு குருநாகல், நாரம்மல பிரதேசத்தில் உள்ள 50 முஸ்லிம் வர்த்தகர்களுக்கு பௌத்த அமைப்புக்களின் ஒன்றியத்தால் துண்டுப் பிரசுரம் அனுப்பப்பட்டுள்ளது.

இதனால் நாரம்மல பகுதிலுள்ள முஸ்லிம் வர்த்தகர்கள் மரணப்பீதியுடன் வாழ்வதுடன், அந்தப் பிரதேசத்தில் பெரும் பதற்றமும் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து குறித்த வர்த்தகர்கள் நாரம்மல பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதுடன், மதம் தொடர்பான பிரச்சினைகளைக் கையாளும் விசேட பொலிஸ் பிரிவினரிடமும் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் குருநாகல் மாவட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளரும் குருநாகல் மாநகர சபை உறுப்பினருமான அப்துல் ஷத்தார் விளக்கமளிக்கையில்,

குருநாகல் நாரம்மல பிரதேசத்தில் கடந்த பல வருடங்களாக முஸ்லிம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இங்கு 50 முஸ்லிம் வர்த்தகர்களுக்கு கடந்த திங்கட்கிழமை தபால் மூலம் 50 துண்டுப்பிரசுரங்கள் கிடைத்தன. அந்த துண்டுப்பிரசுரங்கள் பௌத்த அமைப்புக்கள் ஒன்றியத்தால் அனுப்பப்பட்டிருந்தது. அதில் குறிப்பிடப்பட்டிருப்பவை வருமாறு:

ஹலால் மூலம் மக்களிடம் சுரண்டித்தின்னும் தம்பி மார்ச் மாதத்துக்குள் கடைகளை விட்டு நீங்கள் வெளியேறாவிட்டால் உங்களுக்கு மரணம் தான்... என்று எழுதப்பட்டிருந்தது.

இவ்வாறு 50 துண்டுப்பிரசுரங்கள் அனுப்பப்பட்டிருந்தன. இதையடுத்து முஸ்லிம் வர்த்தகர்களிடமும், பிரதேச மக்களிடமும் மரண பீதி ஏற்பட்டதுடன், பெரும் பதற்றமும் ஏற்பட்டுள்ளது.

இதன் பின்னர் நாம் நாரம்மல பொலிஸ் நிலையத்திலும், மதம் தொடர்பான பிரச்சினைகளைக்கையாளும் விசேட பொலிஸ் பிரிவினரிடமும் முறைப்பாடு செய்துள்ளோம். இது தொடர்பில் விசாரணைநடத்தப்படும் என அவர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை திங்கட்கிழமை இரவு நாரம்மல குருவிக்கொடுவ பகுதியில் உள்ள 6 முஸ்லிம் கடைகளும் சேதமாக்கப்பட்டுள்ளன. அத்துடன், தொழுகைகளுக்காகச் சென்ற இருவரும் இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பிலும் பொலிஸ் முறைப்பாட்டில் நாம் குறிப்பிட்டுள்ளோம்.

எனவே, இது விடயம் தொடர்பில் குருநாகல் மாவட்டதில் உள்ள பௌத்த பிக்குகளுடனும் பேச்சு நடத்த நாம் எதிர்பார்கின்றோம். அத்துடன் பாதுகாப்பு அதிகாரிகளிடம் இது தொடர்பில் பேசி வருகிறோம் என தெரிவித்தார். (எ-8)

# கிணற்றினுள் ஆணின் சடலம்

(காரைநகர்)

காரைநகரில் பாழடைந்த கிணற்றி லிருந்து ஆணின் சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட் டுள்ளது.

இச்சம்பவம் காரைநகர் பாலாவோடை பகுதியில் உள்ள ஆள்நடமாட்டமற்ற பகுதியில் உள்ள பாழடைந்த கிணற்றிலிருந்து நேற்று மாலை இச்சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப சடலம் சுமார் 45 வயது மதிக்கத்தக்க நபருடையதாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

சம்பவ இடத்திற்கு வந்த அப்பகுதி கிராம சேவையாளர் உடனடியாக இது தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் முறையிட்டார்.

உடனடியாக விரைந்து வந்து ஊர்காவற்றுறை பொலிஸார் கண்டுபிடிக்கப்பட்ட ஆணின் சடலம் தொடர்பில் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று நள்ளிரவு வரை சடலம் இனம் காணப்படவில்லை. (எ-8-247)

# வவுனியா நெடுங்கேணியில் குடும்பஸ்தர் குத்திக் கொலை

மாறாஇலுப்பையில் குடும்பஸ்தர் ஒருவர் இனம்தெரியாதோரால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நெடுங்கேணி மாறா இலுப்பை மகிழ மோட்டையை சேர்ந்த 38 வயதான ஆறுமுகசாமி பிரேமசீலன் என்ற 3 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, நேற்று முன்தினம் இரவு 9மணியளவில் கொலை செய்யப்பட்டவரின் தொலைபேசிக்கு அழைப்பொன்று வந்ததாகவும், இதில் உன்னை கொலை செய்வோம் என தெரிவித்திருந்த நிலையில் தனது மனைவியும் அழைத்துச்சென்று இவர்களின் வீட்டிற்கு அருகில்உள்ள இராணுவபொலிஸ்காவலரணில் முறையிட்டுள்ளார்.

அவர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்யுமாறு கூறவே இருவரும் நெடுங்கேணி பொலிஸில் முறைப்பாட்டை மேற் கொண்டிருந்தனர் என உறவினர்கள் தெரிவித்தனர்.

எனினும் நேற்று அதிகாலை இவர்களது வீட்டிற்கு வந்த இனந்தெரியாதோர் கத்தியால் பிரேமசீலனை குத்திக் கொன்றதுடன் கூக்குரல் இட்ட மனைவியின் வாயினுள் துணியை வைத்து அடைத்துள்ளனர்.

இதனையடுத்து பிரேமசீலனை அவரது வீட்டில் உள்ள கிணற்றுக்கு அருகில் கொண்டு சென்று போட்டு விட்டு தப்பியுள்ளனர். இது தொடர்பில் நெடுங்கேணி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர். (எ-250-266)

# கிளிநொச்சி மாவட்ட பட்டதாரி பயிலுநர்களுக்கு சம்பளம் வழங்கப்படவில்லை

(கரணவாய்)

கிளிநொச்சி மாவட்டத்தில் பட்டதாரி பயிலுநர்களாக அண்மையில் நியமனம் பெற்ற பயிலுநர்களுக்கு தை மாதத்துக்குரிய சம்பளக் கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லை என கவலை தெரிவித்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இது பற்றி வினவியபோது, பிரதேச செயலகங்களிடமிருந்து இதுவரை தினவரவு பதிவேடுகள் தமக்கு இன்னமும் வந்து சேரவில்லை என பதிலளிக்கின்றனர்.

வெளிமாட்டங்களிருந்து குறித்த மாவட்டத்திற்கு நியமனம் பெற்ற பட்டதாரிகள் போக்குவரத்துச் செலவுக்குக்கூட பணமில்லாமல் பெரிதும் கஷ்டப்படுவதோடு அதிகாரிகளின் அசமந்தப் போக்கை பார்த்து பெரிதும் விசனம் கொண்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவ்விடயத்தில் உடன் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுப்பார்கள் என அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.(செ-2-74)

# இறுப்பிட்டிக்கு இன்று முதல் போக்குவரத்து சேவை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இறுப்பிட்டி வரையான பேருந்து சேவை இன்று திங்கட்கிழமை மீள ஆரம்பிக்கப்படுவதாக கோண்டாவில் பேருந்துச்சாலை முகாமையாளர் குலபாலசிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து புங்குடுதீவு ஊடாக இறுப்பிட்டி வரையான பேருந்து சேவையே இன்று முற்பகல் 7.மணிக்கு புங்குடுதீவிலிருந்து ஆரம்பிக்கப்படுகிறது.

அண்மையில் புங்குடுதீவில் மக்களுக் கும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவிற்கும் இடையில் இடம் பெற்ற சந்திப்பின்போது புங்குடுதீவு மக்களால் அமைச்சரிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை அடுத்தே இப்பேருந்து சேவை மீள ஆரம்பிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (எ-5)

# வடக்கில் ஆயுத கலாசாரத்தை மீண்டும் ஏற்படுத்தச் சதி!

## அமைச்சர் றிசாத் குற்றச்சாட்டு



வடக்கில் மீண்டும் ஆயுதக் கலாசாரத்ததை ஏற்படுத்தி மக்களை அழிவுப்பாதைக்கு இட்டு செல்ல சில சக்திகள் செயற்படுவதாக அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அப்பாவி மக்களைக் பிழையான வழிக்குச் இட்டுச்செல்லும் வகையில் மக்களை காட்டிக்கொடுத்து தமது அரசியலை இந்த சக்திகள் செய்கின்றன. அதற்கு மக்கள் துணைபோய்விடக்கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நானாட்டான் பிரதேச செயலாளர் சந்திர அய்யா தலைமையில் இந்த வைபவம் முருங்கன் மத்திய கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழ்–முஸ்லிம் மக்கள் மிகவும் ஒற்றுமையுடன் இன்றைய சூழலில் வாழ்ந்து வருகின்றனர். இந்த மக்களுக்கு என்னால் ஆற்றக்கூடிய அனைத்து பணிகளையும் செய்து வருகின்றேன்.

ஏனெனில் இனவாதம், மதவாதம், மொழிவாதம் இல்லை. நானாட்டான் பிரதேச மக்கள் எதனை வேண்டி நிற்கின்றனரோ அதனை இந்த ஜனாதிபதியிடத்திலும் [illegible] களிடத்திலும் இருந்து [illegible] தருகின்றேன் என்று அவர் கூறினார். (எ-11)

# போகம்பரையிலிருந்து கைதி தப்பியோட்டம்

(கண்டி)

கண்டி, போகம்பரை திறந்த வெளிச் சிறைச்சாலையில் இருந்து கைதி ஒருவர் தப்பிச் சென்றுள்ளார்.

பண்டாரகம பிரதேசத்தை சேர்ந்த 28 வயதுடைய கைதியே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

போதைப்பொருள் குற்றச்சாட்டின் பேரில் தண்டனை விதிக்கப்பட்டு போகம்பரை திறந்த வெளிச்சிறைச் சாலையில் தண்டனை அனுபவித்து வந்த கைதியே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார்.

தப்பிச்சென்ற கைதியை தேடும் நடவடிக்கையில் பொலிஸாரும் பல்லேகல திறந்த வெளி சிறைச்சாலை அதிகாரிகளும் மேற்கொண்டு வருகின்றனர்.(எ-8)


**If you want to be a Qualified PHARMACIST**

**மருந்தாளர் (வெளிவாரி) பரீட்சை**

Pharmacists (External) examination conducted every year by the Ceylon Medical College Council, Faculty of Medicine, University of Colombo.

After two years of apprenticeship, the candidate is eligible to sit for the above examination, which qualifies for registration as a Pharmacist.

**Age:-** Not less than 18 years - Not more than - No limit.
(வயது எல்லை இல்லை) அரச, ஆசிரிய, வங்கி மற்றும் தனியார் சேவையில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர் வேறு தொழில் (மருந்தாளர்) செய்ய விரும்புவர்களுக்கு பரீட்சையில் சித்தியடைந்ததும் நல்ல வேலைவாய்ப்பு உண்டு. சம்பளம் மாதாந்தம் ரூபா 25000/= மேல் பெறலாம். மருந் தாளர் சீவிய காலம் முழுவதும் தொழில்புரியக் கூடியதாக இருக்கும்.

**Qualification:** G.C.E O/L Ordinary Pass in English Language
G.C.E A/L Ordinary passes in three Science Subjects Including Chemistry

**Course:-** Saturday and Sundays Morning 8.30 to 4.00 PM. Beginners Course Commence on Saturday 2nd March 2013 for 2015 Exam

**Admission:-** 23.02.2013 & 24.02.2013 Morning 9.00am till 12 noon.

**Venue:** - Jaffna College (Under Graduate dept) 464, Hospital Road, Jaffna,

**Course fees Monthly:-** Rs.1500/= T.P.No:-0776256292

(1763)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## பக்தர்கள் மூன்று விதம்

ஒரு ஊரிலே பெரியவர் ஒருவர் இருந்தார். அவர் ஒரு கோடீஸ்வரர்.

அவர் பல நல்ல காரியங்களைச் செய்து கொண்டிருந்தார்.

அவரைத்தேடி பலர் வருவார்கள். இவரும் தன்னால் முடிந்த உதவிகளை அவர்களுக்குச் செய்து கொண்டு வந்தார்.

ஒருநாள் மூன்று பிச்சைக்காரர்கள் இவரைத் தேடி வந்தார்கள்.

இவரிடமிருந்து ஏதாவது பொருளுதவி பெற வேண்டும் என்று நினைத்துத்தான் அவர்கள் வந்தார்கள்.

ஆனால், இம்மூவரும் ஒரே நேரத்தில் வரவில்லை; தனித்தனியாகவே வருகை தந்தனர்.

முதல் பிச்சைக்காரன் காலையில் வந்தான்.

அவன் கோடீஸ்வரனின் முன்னால் வந்து நின்று; "ஐயா! எனக்கு ஐந்து ரூபா வேண்டும்... தயவு செய்து கொடுங்கள்" என்று கேட்டான்.

இவன் இப்படியாகக் கேட்டதும் அவருக்குக் கோபம் வந்து விட்டது.

"என்ன இது? நான் ஏதோ உன்னிடம் கடன்பட்டிருப்பது போலவும்... நீ அதைத் திருப்பிக் கொடு" என்று கேட்பது போலவும் இவ்வளவு அதிகாரத்தோடு பிச்சை கேட்கிறாயே?... எவ்வளவு துணிச்சல் உனக்கு ஐந்து ரூபா தர முடியாது. இந்தா... இரண்டு ரூபாய்... எடுத்துக்கொண்டு ஓடு" என்று கூறி அவர் இரண்டு ரூபாயைத் தூக்கி எறிந்தார்.

பிச்சைக்காரனும் அதை எடுத்துக்கொண்டு அவ்விடத்தை விட்டு அகன்றான்.

அடுத்தபடியாக பகல்வேளையில் ஒரு பிச்சைக்காரன் வந்தான்.

இவன் கோடீஸ்வரிடம்; "ஐயா... நான் மூன்று நாட்களாக ஒரு வேளை உணவு கூட சாப்பிடவில்லை... தயவு செய்து எனக்கு உதவி செய்யுங்கள்" என்றான்.

"உனக்கு எவ்வளவு பணம் வேண்டும்?" என்று அவர் கேட்டார்.

"நீங்களாகப் பார்த்து எவ்வளவு கொடுத்தாலும் அது எனக்குப் போதும்" என்று பிச்சைக்காரன் கூறினான்.

அவர், "இந்தா பத்து ரூபா... இதை வைத்துக்கொள்... ஏதாவது வாங்கிச் சாப்பிடு" என்றார்.

அவன் அந்த பத்து ரூபாவை வாங்கிக் கொண்டு போய் விட்டான்.

அதன்பின்னர் மாலையில் மூன்றாவது பிச்சைக்காரன் வந்தான்.

இவன் கேட்ட விதம் எப்படி தெரியுமா?

"மகாராஜா! உங்களுடைய உயர்ந்த குணத்தைப் பற்றி நான் நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன். அதனால் உங்களைத் தரிசித்து விட்டுப் போகலாமென வந்துள்ளேன். தர்மவழியில் வாழ்ந்து கொண்டிருக்கும் நீங்கள்தான் கண்கண்ட தெய்வம்" என்றான்.

உடனே அந்தப் பெரியவர் என்ன சொன்னார் தெரியுமா?

"ஐயா! தயவு செய்து அமர்ந்து கொள்ளுங்கள்... நீங்கள் களைத்துப் போய் வந்திருக்கிறீர்கள். முதலில் வயிறார சாப்பிடுங்கள்... ஏனையவற்றை பின்னர் பேசலாம்" என்று கூறி அவனை அமர வைத்து உணவு வழங்கினார்.

அவன் சாப்பிட்டு முடிந்த பின் கோடீஸ்வரர் அவனிடம் "இப்போது சொல்... நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்?" என்று வினவினார்.

அவரது அன்புக்கு அந்தப் பிச்சைக்காரன் மனம் நெகிழ்ந்து, "ஐயா... பசியோடு வந்தேன்... நீங்கள் அறுசுவை விருந்தே படைத்து விட்டீர்கள்... எனக்கு அதுபோதும். நீங்கள் என் மீது காட்டும் அன்பை ஒரு போதும் மறக்கமாட்டேன். உங்களுக்கு எதுவித குறையும் வராது" என்று கூறினான்.

இவனுடைய அன்பான வார்த்தைகள் அரசனுடைய மனதைத் தொட்டன. பிச்சைக்காரன் மீது அரசனின் அன்பு பலமடங்காயிற்று.

அதன் விளைவு என்ன தெரியுமா?

"இதோ பார்... இனிமேல் நீ வெளியில் எங்கேயும் போக வேண்டாம்... இங்கேயே இருந்து விடு" என்று அவர் தெரிவித்தார்.

தனது அரண்மனைக்கு அருகில் ஒரு வீட்டை அமைத்து கடைசி வரையிலும் அன்பாக வைத்து பராமரித்தார்.

இந்தக் கதையின் கருத்து என்ன தெரியுமா?

இறைவன் அந்தக் கோடீஸ்வரர் போன்றவராம். அந்த மூன்று வகை பிச்சைக்காரர்களும் மூன்று வகையான பக்தர்களாம்.

இன்றைக்கு இருக்கும் பக்தர்கள் எல்லோரும் இந்த மூன்று வகையில் ஏதாவது ஒரு வகையைச் சேர்ந்தவர்களாகத்தான் இருப்பார்கள்.

முதல் வகைதான் அதிகமாக இருக்கும். மூன்றாவது வகை மிகவும் அபூர்வம்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# வடக்கு முஸ்லிம்கள் குடியேற்றம் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிப்பு

(மன்னார்)

வடமாகாண முஸ்லிம்களின் மீள் குடியேற்றம் சம்பந்தமான திட்ட வரைபு முதல் நிலை அறிக்கை சமர்ப்பணமும் அங்கீகாரக் கூட்டமும் மன்னார் எருக்கலம்பிட்டி மத்திய மகா வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

வடமாகாணத்திலுள்ள மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் புத்திஜீவிகள் என பலரும் இதன்போது சமுகமளித்திருந்தனர். வடமாகாண முஸ்லிம்களின் மீள் குடியேற்ற செயலணியின் தலைவர் பேராசிரியர் ஹிஸ்புல்லா தலைமையில் இந்த கூட்டம் இடம்பெற்றது.

1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் முஸ்லிம்கள் வாழ்ந்த பிரதேசங்கள் மற்றும் அவர்களது வரலாற்று பதிவுகள் குறித்து இந்த முதற் கூட்டத்தின் போது விரிவாக ஆராயப்பட்டதுடன் தற்போது முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தின் போது இடம்பெறும் தடைகள் குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

அதேவேளை, வடமாகாணத்தில் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் பிழையான இன ரீதியான கருத்துக்களை சில சக்திகள் விதைத்து வருவதாகவும் அது களையப்பட்டு வடமாகாணத்தில் வாழும் அனைத்து சமூகங்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதையும் இந்த செயலணி கவனத்திற் கொண்டு செயற்பட்டு வருவதாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

அதேவேளை, வடக்கில் வாழ்ந்த முஸ்லிம்கள் மீண்டும் தமது தாயக பூமியில் கௌரவத்துடன் வாழ வேண்டும் என்பதை இங்கு சமுகமளித்திருந்த பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

மாந்தை, மடு பிரதேச அபிவிருத்தி குழு இணைப்பாளர் மீரா மொஹிதீன் அமீன், சட்டத்தரணிகளான எம்.சபூர்தீன், சதகத்துல்லா, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ஹுனைஸ் பாருக், வன்னி மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவரும் அமைச்சருமான றிசாத் பதியுதீன் உள்ளிட்ட பெரும் எண்ணிக்கையிலானவர்கள் கலந்து கொண்டனர். (அ)

# செயற்றிட்டமிடல் செயலமர்வு நாளை

(பூந்தோட்டம்)

வடமாகாணத்தில் உள்ள வலயக்கல்வி அலுவலகங்களில் சேவையாற்றும் வழிகாட்டல் ஆலோசனை ஆசிரிய ஆலோசகர்களுக்கும் தொழில் வழி காட்டல் அதிகாரிகளுக்குமான வழிகாட்டல் ஆலோசனை சேவை பற்றிய மீளாய்வும் செயற்றிட்டமிடல் செயலமர்வும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணிவரை வடமாகாண கல்வித் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

வலயங்களில் இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்ட உள சமூக வழிகாட்டல் சேவைகளை மதிப்பிடுவதற்காகவும் திட்டமிடுவதற்காகவும் நடைபெறும் இச்செயலமர்வில் பங்குபற்றும் வழிகாட்டல் ஆலோசனை ஆசிரிய ஆலோசகர்களும் தொழில் வழிகாட்டல் அதிகாரிகளும் கடந்த ஆண்டு தமது வலயத்தில் மேற்கொள்ளப்பட்ட வழிகாட்டல் ஆலோசனை மற்றும் உள சமூக சேவை தொடர்பான தொகுப்பு அறிக்கையினை முன்வைக்குமாறு வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் கே.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (அ-3-266)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 90 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 200 | 250 | 250 |
| தக்காளி | 200 | 100 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 |
| கோவா | 70 | 60 | 60 |
| கரட் | 160 | 140 | 130 |
| பூசணி | 60 | 40 | 50 |
| புடோல் | 60 | 40 | 40 |
| வாழைக்காய் | 80 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 100-120 | 120 |
| பெரிய வெங்காயம் | 110 | 120 | 100 |
| பாகற்காய் | 120 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 60 | 80 |
| பயற்றங்காய் | 120 | 80 | 120 |
| லீக்ஸ் | 160 | 120 | 140 |
| பீற்றூட் | 80 | 80 | 70 |
| கறிமிளகாய் | 160 | 160 | 200 |
| முருங்கைக்காய் | 500 | -- | -- |
| போஞ்சி | 120 | 80 | 80 |
| கத்தரிதம்புள்ள | 15 | 40 | -- |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 30 |
| தேசிக்காய் | 20 | 80 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 55 | 45-50 |
| இராசவள்ளி | 120 | 120 | 140 |
| வெங்காயப்பூ | 120 | 160 | 100 |

# இராசி பலன்

*18.02.2013*
*(மாசி 06, திங்கட்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு*
*அட்டமி பிற்பகல் 5.02 மணிவரை*
*கார்த்திகை பிற்பகல் 1.14 மணிவரை*
*இராகுகாலம் 8.02-9.32 மணிவரை*
*சுபநேரம் 12.32-2.02 மணிவரை*
*அட்டமி- நவமி.*

**மேடம்** யோகமான நாள், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும், வாக்கு மேன்மையுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**இடபம்** பெருமைகள் வந்து சேர பெருமாளை வழிபட வேண்டிய நாள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், உடல் நலம் சிராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை.

**மிதுனம்** அன்பு நண்பர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், எடுத்த செயலை முடிக்க ஒருமுறைக்கு பலமுறை அலைய வேண்டியேற்படலாம், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**கடகம்** வருமானம் அதிகரிக்கும் நாள், மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை நீங்கள் எளிதாகச் செய்து முடிப்பீர்கள், உற்சாகமான நாள், பயணங்கள் கைகூடுவதற்கான அறிகுறி தோன்றும்.

**சிங்கம்** சந்தோசமான சம்பவங்கள் நடைபெறும் நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்கள் மூலம் நல்ல தகவல் வந்து சேரலாம்.

**கன்னி** அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடிவுக்கு வரும், பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர், செய்தொழிலில் மேன்மையுண்டு.

**துலாம்** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, மறதியால் ஒரு சில பணிகளை செய்யாமல் விட்டு விடுவீர்கள், போசன சுகமுண்டு, முயற்சிகளில் சில தாமதங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** பணத் தேவைகள் பூர்த்தியாகும், உடன் பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர், திடீர் பயணங்கள் சிந்திக்க வைக்கும், வருங்கால நலன் கருதி எடுத்த புது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**தனுசு** கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், புகழ் மிக்கவர்களின் மதிப்பு கிடைக்கும், போட்டிகளில் வெற்றி கிடைக்கும், செய் தொழிலில் மேன்மையுண்டு, அரசு வழியில் நன்மையுண்டு.

**மகரம்** எதிர்கால முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பிள்ளைகளின் நீண்ட கால கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**கும்பம்** தாய்வழி உறவினர்களால் நன்மையுண்டு, சுப தகவல்கள் வந்து சேரும் நாள், வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், நீங்கள் தேடிச் சென்று சந்திக்க நினைத்த நபர் உங்களைத் தேடி வரலாம்.

**மீனம்** பகை விலகி பாசம் கூடும் நாள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த சில நல்ல திருப்பங்களைக் காணலாம், கௌரவமான நாள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலீட்டு சபை ஊடாக தனியார் பல்கலைக்கழகம்
## அரசாங்கம் தீர்மானம்

முதலீட்டுச் சபையின் ஊடாக தனியார் பல்கலைக்கழகங்களை அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பத்து வெளிநாட்டு பல்கலைக்கழங்கள் இலங்கையில் தமது கிளை வளாகங்களை அமைக்க அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளன. தனியார் பல்கலைக் கழங்களில் 50 ஆயிரம் வரையான வெளிநாட்டு மாணவர்கள் சேர்ந்து கொள்வர்.

வெளிநாடுகளில் படிக்கச் செல்லக்கூடிய 12 ஆயிரம் வரையான இலங்கை மாணவர்கள் தனியார் பல்கலைக்கழகங்களில் இணைவர் எனவும் இதனால் அந்நிய செலவாணி உழைக்கப்படும் எனவும் மீதப்படுத்தப்படும் எனவும் ஊக்குவிப்பு அமைச்சின் இணையத்தளத்தில் கூறப்பட்டுள்ளது.


இலங்கையில் தற்போது 15 அரச பல்கலைக்கழகங்களும் 6 பட்டப்படிப்பு நிறுவனங்களும் ஒன்பது பட்டம் வழங்கும் நிறுவனங்களும் உள்ளன.

தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவுதல் தொடர்பாக விரைவில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் என உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கூறினார்.

பட்டங்களை வழங்கும் முறையாக செயற்படும் 19 தனியார் பட்டம் வழங்கும் நிறுவனங்கள் உள்ளனவென உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க கூறினார்.

நான்கு அல்லது ஐந்து இலட்சம் ரூபா செலவில் ஒரு முகாமைத்துவ பட்டத்தையும், 10 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு பொறியியல் பட்டத்தையும் பெற்றுக்கொள்ள முடியும்.

பல பல்கலைக்கழகங்கள் அமையும்போது செலவு இன்னமும் குறையுமென அவர் மேலும் குறிப்பிட்டார்.



இலங்கை வங்கி நடைமுறைப்படுத்திவரும் மெகா வாசி சீட்டிழுப்பில் பரிசில்களை வென்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கண்டி சீபேங் ஹவுஸில் இடம்பெற்றது. இதில் முதல் பரிசான ரூ. 65 இலட்சம் பெறுமதியான காரினை கண்டியை சேர்ந்த வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பெண்ணொருவர் பெற்றுக் கொண்டார்.




# ரெலிகொம் சிஇஓவானார் லலித் டி சில்வா



சிறிலங்கா ரெலிகொம் கடந்த 7-ம் திகதி முதல் அமுலுக்குவரும் வகையில் தனது புதிய குழும நிறைவேற்று அதிகாரியாக லலித் டி சில்வாவை நியமித்துள்ளது.

லலித் டி சில்வா மொபிட்டல் (பிறைவேற்) லிமிட்டட் நீங்கலாக அனைத்து சிறிலங்கா ரெலிகொம் குழும கம்பனிகளையும் நிர்வகிப்பார்.

2002-ம் ஆண்டு மொபிட்டலை சிறிலங்கா ரெலிகொம் கையேற்றது முதல் மொபிட்டலின் பணிப்பாளர் மற்றும் நிறைவேற்று அதிகாரியாகவும் இவர் செயற்பட்டார்.

2002 முதல் 2004 வரை சிறிலங்கா ரெலிகொம் தலைவருக்கான ஆலோசகராகவும் கடமையாற்றிய இவர் அதனூடாக குழும செயற்பாடுகளில் அதீத புலமை பெற்றுள்ளார்.

## எக்ஸ்போ லங்காவின் வ.மு. லாபம் ரூ.1,319 மில்.

எக்ஸ்போ லங்கா ஹோல்டிங்ஸ் பிஎல்சி நிறுவனம் நடப்பு நிதியாண்டின் முதல் ஒன்பது மாத காலப் பகுதியில் வரிக்கு முன்னரான இலாபமாக ரூ.1, 319 மில்லியனை பதிவுசெய்துள்ளது.

2012/13 நடப்பு நிதியாண்டின் முதல் 9 மாத காலப் பகுதியில் நிறுவனத்தின் மொத்த வருமானம் 35.02 பில்லியன் ரூபாயாக பதிவாகியிருந்தது.

# கொமர்ஷல் கிரெடிட் நிறுவனத்தின் தொகுதிக்கடன் பத்திரங்கள்
## மிகை விநியோகம்

கொமர்ஷல் கிரெடிட் அன்ட் ஃபினான்ஸ் பி.எல்.சி நிறுவனத்தின் ஒவ்வொன்றும் ரூபாய் 100 பெறுமதியான தொகுதிக் கடன் பத்திர வழங்கலானது மிகை விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

மிகவும் எதிர்பார்க்கப்பட்டிருந்த 2,500,000 தொகுதிக்கடன் பத்திரங்களுக்கான இவ்வழங்கல் கடந்த ஜனவரி 23-ம் திகதி ஆரம்பமானது. மொத்தப் பெறுமதி ரூபா 500 மில்லியனாகும் விதத்தில் மேலும் 2,500,000 தொகுதிக்கடன் பத்திரங்களை வழங்குவதற்கான விருப்பத் தெரிவையும் இந்த வழங்கல் கொண்டிருந்தது.

கொமர்ஷல் கிரெடிட் அன்ட் ஃபினான்ஸ் பி.எல்.சி நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரொஷான் எகொடகே இது குறித்து கூறுகையில்,

இந்த கடன் பத்திர வழங்கலின் சிறப்பான செயற்பாடு தொடர்பில் நாம் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம்.

பிணையற்ற (Unsecured), பிரதியீடான (Subordinated), மீட்கக்கூடிய (Redeemable) விதத்திலமைந்த ஐந்து வருடங்களுக்கான இத்தொகுதிக் கடன் பத்திரங்கள் கொழும்புச் பங்குச் சந்தையின் இரண்டாம் நிலை தளத்தில் பட்டியலிடப்படுவதுடன், காலாண்டு அடிப்படையில் 20% வட்டித் தொகை செலுத்தப்படும்.

இத்தொகுதிக் கடன் பத்திரங்கள் 21.55% வருடாந்த விளைவு வீதத்தை வருமானமாக உழைத்துத்தரும்.

அண்மைக் காலத்தில் வரி விதிப்பு நடைமுறையில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் பயனாக, இந்தத் தொகுதிக் கடன் பத்திரங்கள் மீதான வட்டி வருமானத்திற்கு வருமான வரியிலிருந்து விலக்களிப்புச் செய்யப் படும்.

அதன் காரணமாக நிறுத்தி வைத்தல் வரி (WHT) கழிக்கப்பட மாட்டாது.

தொகுதிக்கடன் பத்திர வழங்கலின் வங்கியியலாளராக ஹற்றன் நஷனல் வங்கி பி.எல்.சி திகழ்வதுடன், இவ்வழங்கலின் முகாமையாளராகவும் பதிவாளராகவும் மேர்ச்சன்ற் பேங்க் ஒஃப் ஸ்ரீ லங்கா (MBSL) திகழ்கின்றது.

அதேவேளை தொகுதிக்கடன் வழங்கலின் பொருளாளராக டொயிச் பேன்க் ஏ.ஜி, கொழும்புக் கிளையானது (Deutsche Bank AG) செயற்படுகின்றது.

RAM ரேட்டிங் லங்கா லிமிட்டெட் இந்த தொகுதிக்கடன் பத்திரங்களுக்கு "BB" என்னும் நீண்டகால தரப்படுத்தலை அளித்துள்ளது.

# சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதில்லை;அரசு தீர்மானம்

2012 யூலையில் சர்வதேச நாணய நிதியத்துடனான துணை நிலை ஒழுங்குகள் நிறைவடைந்தமையினை இட்டு இலங்கைக்கும் நிதியத்திற்குமிடையிலான எதிர்கால உறவு பற்றிய கலந்துரையாடலில் இலங்கை அதிகாரிகளும் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளும் ஈடுபட்டனர்.

இதன்முடிபில், இலங்கையின் பொருளாதார நிலையின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு சர்வதேச நாணய நிதியத்தின் புதிய நிகழ்ச்சித் திட்டங்கள் எதனையும் நாடுவதில்லை எனவும் மற்றைய பல உறுப்பு நாடுகளைப் போன்று நியம ஆலோசனைச் செயற்பாடுகளின் கீழ் நிதியத்துடன் நெருக்கமான உறவு முறைகளை தொடர்ந்து பேணுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

### ஜி.எஸ்.பி வேண்டாம்

ஜி.எஸ்.பி. பிளஸ் வசதியை இழப்பதன் விளைவுகள் தொடர்பில் ஏற்றுமதியாளர்கள் விசனம் தெரிவித்துள்ள போதிலும், அரசு ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகைக்காக மீண்டும் விண்ணப்பிக்கப் போவதில்லை என பிடிவாதமாக உள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஐரோப்பிய ஒன்றியம் செய்த பரிந்துரைகளில் சிலவற்றை அரசாங்கம் மறுத்ததை தொடர்ந்து இலங்கைக்கு வழங்கப்பட்டிருந்த ஜி.எஸ்.பி. பிளஸ் வசதியை ஐரோப்பிய ஒன்றியம் கடந்த 2010 இல் இரத்து செய்தது.

இந்த வசதி காரணமாக ஐரோப்பிய ஒன்றிய சந்தைக்கு முன்னுரிமை அடிப்படையில் இலங்கையில் ஏற்றுமதி செய்ய முடிந்தது. ஆனால் இந்த வசதி இழக்கப்பட்டபின் இலங்கை ஏற்றுமதியாளர்களால், ஜி.எஸ்.பி.பிளஸ் பெற்ற நாடுகளுடன் ஐரோப்பிய சந்தையில் போட்டியிட முடியவில்லை.

# இலங்கையில் வர்த்தக நடவடிக்கையை விரிவுபடுத்த எண்ணியுள்ளோம்
## - இந்தியன் ஓவர்சீஸ் வங்கித் தலைவர்

இலங்கையின் பொருளாதாரத்தில் சிறந்த சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. எனவே எமது வர்த்தக நடவடிக்கைகளை இங்கு விரிவுபடுத்துவதற்கு எதிர்பார்க்கின்றோம் என இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் தலைவரும் நிர்வாக முகாமையாளருமான டாக்டர் எம்.நரேந்திரா தெரிவித்தார்.

இரண்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்திருந்த டாக்டர் எம்.நரேந்திரா கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தெரிவித்ததாவது,

இலங்கையின் பழமையான வங்கிகளில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியும் ஒன்றாகும். 1945ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொழும்பில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக் கிளை ஆரம்பிக்கப்பட்டது.

இந்தியாவில் முதன்முதலாக 1937 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காரைக்குடியில் சிதம்பரம் செட்டியார் என்பவரால் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஆரம்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சென்னையில் நிறுவப்பட்டது. இன்று இந்த வங்கியின் கிளைகள் இந்தியாவிலும் உலக நாடுகளிலும் பரந்தளவில் காணப்படுகின்றன. இந்தியாவிலும் சர்வதேச நாடுகளிலும் மொத்தமாக 3 ஆயிரம் கிளைகள் உள்ளன.

இலங்கையில் எமக்கு இரண்டு




கிளைகள் உள்ளன. இங்கு இலங்கையைச் சேர்ந்த 25 உத்தியோகத்தர்கள் பணிபுரிகின்றனர்.

எனது இலங்கை விஜயத்தின்போது இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், பிரதியமைச்சர் உள்ளிட்ட பல அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினேன். பல்வேறு விடயங்களைப் பற்றிப் பேசினோம். இலங்கையில் எமது சேவைகளை விஸ்தரிக்குமாறு அவர்கள் குறிப்பிட்டனர்.

இலங்கையில் துறைமுகம், விமான சேவை, சுற்றுலாத்துறை போன்றவற்றில் முதலீடு செய்வதற்கு சிறந்த சந்தர்ப்பங்கள் உள்ளதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அத்தடன் இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் சிறந்த முறையில் உள்ளது.

இந்த மாநாட்டில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் இலங்கைக்கான தலைமை அதிகாரி டி.பழனிசாமியும் கலந்து கொண்டார்.

இதேவேளை, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி யாழ்ப்பாணத்தில் தனது கிளையை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

# பங்குச் சந்தை விபரம்
## (வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5,850.67 | 5,830.26 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,271.25 | 3,274.25 ⇧ |

விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 3,074.111

[illegible], மேர்.றெஸ்.ஹோல்.(25.20), செரன்டிப் லான்ட்(1,775.00), ஹேலீஸ் டையர்(33.80), கொம். லீசிங் &பினான்(4.20), ஓரியண்ட் பினான்ஸ்(15.60).

[illegible] சலிமர்(804.00), என்வெயர் றிசோசஸ்(W)(2.70), சிலோன் பிறிண்டர்ஸ்(1,280.00), அபான்ஸ் பினான்சியல்(31.00), ரேசன் லங்கா(W)(1.70).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்
## (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 125.01 | 128.26 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 193.37 | 199.30 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 166.41 | 172.20 |
| சுவிஸ் பிராங் | 134.63 | 140.03 |
| கனேடிய டொலர் | 124.18 | 128.89 |
| அவுஸ்திரேலிய டொலர் | 128.58 | 133.70 |
| சிங்கப்பூர் டொலர் | 100.59 | 104.25 |
| ஜப்பான் யென் | 1.33 | 1.38 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.34 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 34.44 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீரங்கி குண்டுகளை விட இலங்கையின் குடும்பப் பிணைப்பு பலமானது

## ஜனாதிபதி மஹிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

பீரங்கி வெடிகுண்டுகளை விட இலங்கையில் நிலவும் குடும்பப் பிணைப்பு பலமானது எனவும் உலகமே இதனை வியப்பதாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். மேற்கத்தேய அழுத்தங்களுக்கு அடிபணிபவர்களால் நாட்டிலுள்ள குடும்பப் பிணைப்பும் எமது பெருமைக்குரிய கலாசாரமும் சீர்குலையும் அபாயம் உள்ளது. இவற்றைக் கட்டிக்காப்பது அனைவரதும் பொறுப்பும் கடமையுமாகுமெனவும் குறிப்பிட்டார்.

கொழும்பு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். நாட்டின் சகல பகுதிகளிலும் அபிவிருத்திப் பணிகள் நடைபெறுகின்றன. அதற்குத் தேவையான ஆட்சேர்ப்பு நடக்கின்றது. இதற்கிணங்க உலகம் அபிவிருத்தியில் கட்டியெழுப்பப்பட்டு வரும் நிலையில் உருவாகும் தொழில்வாய்ப்புகளை நாம் இனங்காண்பது முக்கியம். அதற்கேற்ப எமது கல்வி முறை அமைய வேண்டும். அதனால் விரைவாக எமது கல்வி முறையில் மாற்றம் ஏற்படுத்தப்படுவது அவசியம்.

தேசிய ரீதியில் மட்டுமன்றி சர்வதேச ரீதியான தொழில்வாய்ப்புகளுக்கு ஏற்ப எமது கல்வி முறையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். பாடசாலைக் கல்வியில் மட்டுமன்றி பல்கலைக்கழக கல்வி முறையிலும் விரைவாக மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டியது முக்கியமாகும்.

கடந்த காலங்களில் பிள்ளைகள் அச்சத்துடனும் ஒருவருக்கொருவர் சந்தேகத்துடனும் பாடசாலைகளில் செயற்படும் நிலை இருந்தது. அந்த நிலையை மாற்றி நாம் சகல மாணவர்களும் மக்களும் அச்சமின்றி வாழும் நிலையை ஏற்படுத்தியுள்ளோம்.

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க கல்லூரியிலும் சகல துறைகளிலும் திறமையடைந்த மாணவர்கள் உருவாகி வருகின்றனர். அதனை நேரடியாகக் காண முடிகின்றது.

பெண்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வருகின்றபோதும் இந்த நாட்டின் கலாசாரத்தைப் பாதுகாப்பதில் அவர்களுக்குப் பாரிய பங்கு உண்டு. இந்த நாடு பாதுகாக்கப்பட்டுள்ளது. எமது கலாசாரமும் பாதுகாக்கப்பட வேண்டும்.

1815 இல் இலங்கையை ஆக்கிரமித்திருந்த ஆங்கிலேயரும் இந்நாட்டின் குடும்பப் பிணைப்புக்களை கண்டு வியந்துள்ளனர்.

பிரட்ரிக் போன்ற ஆணையாளர்கள் சிங்களவர்களின் குடும்பங்கள் மத்தியிலுள்ள பிணைப்பு மனித குலத்தின் பெருமை மிக்கது என கூறியிருந்தனர்.

இவற்றைச் சீர்குலைத்து சிதைக்க முயற்சிக்கும் சிலரும் உள்ளனர். இதைப்போன்ற பிள்ளைகளே இப்போது வயதான அப்பாவைக் கூட்டி வந்து களனி விஹாரையிலும் அநாதை இல்லங்களிலும் விட்டு விட்டுப் போகின்றதைக் காண முடிகின்றது. இது வெளிநாடுகளிலிருந்து தொற்றிக் கொள்ளும் பழக்கவழக்கங்களாகும்.

உலகின் மிகப்பெரும் செல்வந்தரான பில்கிரேட் அவரது மகள்மாருக்கு 16 வயதிற்குப் பின்பே கைத்தொலைபேசி வழங்கியுள்ளார். அனைத்து செல்வங்கள் இருந்த போதும் தமது பிள்ளைகள் நல்வழியில் செல்ல வேண்டும் என்பதை இலட்சியமாக அவர் கொண்டிருந்தார்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகள் தொடர்பில் எவ்வாறு அக்கறையுடன் இருக்க வேண்டும் என்று பாருங்கள் என்றார். (அ-2)

# சந்திர வட்டக்கல்லின் தொன்மை குறித்து ஆராய நடவடிக்கை

லண்டனில் ஏலத்தில் விடப்பட்டுள்ள சந்திரவட்டக்கல்லின் தொன்மை குறித்து ஆராய்வதற்காக அதன் மாதிரியை பெற்றுக்கொண்டுள்ளதாக தொல்பொருள் திணைக்களம் குறிப்பிடுகின்றது.

பிரித்தானியாவின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் கலாநிதி பட்டப் படிப்பில் ஈடுபட்டுள்ள றுகுணு பல்கலைக்கழகத்தின் தொல்பொருள் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் விஜேரத்ன போஹிங்கமுவவினால் அதன் மாதிரி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் கலாநிதி செனரத் திசாநாயக்க தெரிவித்தார்.

குறித்த மாதிரியை எதிர்வரும் தினங்களில் நாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளதாக அவர் கூறினார்.

அத்துடன் லண்டனினுள்ள சந்திர வட்டக்கல்லிலும் இலங்கையிலுள்ள சந்திர வட்டக்கல்லிலும் காணப்படுகின்ற தன்மைகளை ஆராயவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெரும்பாலும் இந்த இரண்டு சந்திர வட்டக்கற்களும் ஒன்றுக்கொன்று ஒத்த உருவ அமைப்பைக் கொண்டிருக்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# நேர்மையான அரசியல்வாதிகள் நாட்டுக்குள் இல்லை-சந்திரிகா

நேர்மையான அரசியல்வாதிகளை தற்போதைய சமூகத் தில் தேடிக்கண்டு பிடிக்க முடியாது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார். நேர்மையான, தைரியமான அரசியல்வாதி கள் தற்போது கிடையாது.

விஜயகுமாரணதுங்க போன்ற அரசியல்வாதிகள் நேர்மை யாக நாட்டுக்காக உழைத்தார்கள். அவ்வாறு மக்களுக்காக உழைக்க வேண் டுமென்ற எண்ணமுடைய அரசியல்வாதிகள் தற்போது கிடையாது. சுயலாப நோக்கங்களுக்காகவே பலர் இன்று அரசியலில் ஈடுபடுகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# மின்சாரத் தூண்டுதல் மூலம் புரிதல் உணர்வு அதிகரிப்பு

## மந்த புத்திக்கான காரணம் கண்டுபிடிப்பு

புரிதல் மற்றும் கற்பதில் சிலர் மிக மெதுவாக இருப்பதற்கு அவர்களின் மூளைகளில் தகவல்களை பிரித்தறியும் செயல் போதுமான அளவு நடைபெறாததே காரணம் என ஜேர்மனியை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

மற்றவர்கள் உடனடியாக புரிந்து கொள்ளும் விடயங்கள் சிலருக்கு புரியாமல் போவது ஏன் என்பதை அறிய ஜேர்மனியின் ஹம்போல்டு பல்கலைக்கழகம் மற்றும மேக்ஸ் பிளாங்க் நிறுவனம் உள்ளிட்ட நிறுவனங்களை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு ஒன்றை மேற்கொண்டனர்.

மூளையில் கற்றலுக்கு துணை செய்யும் பிரித்தறியும் செயல் பகுதியான நுதற் சோனைப் பகுதி செயற்படும் விதத்தை பொறுத்தே மனிதர்களின் புரிந்து கொள்ளும் ஆற்றல் உள்ளது. இதற்கு மூளையில் உள்ள அல்பா அலைகளில் ஏற்படும் மாறுதல்கள் துணை செய்கின்றன.

இந்த ஆய்வில் கலந்து கொண்டவர்களின் தொடு உணர்வை அதிகரிக்க அவர்களின் கைகளில் 30 நிமிடங்கள் மின்சார தூண்டுதல் வழங்கப்பட்டது. இதன் மூலம் மூளையின் அல்பா அலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. மூளையில் அல்பா அலைகள் அதிகரித்த சமயத்தில் ஆய்வில் கலந்து கொண்டவர்களின் புரிந்து கொள்ளும் திறன் அதிகமாக இருந்தது கண்டறியப்பட்டுள்ளது.

இவர்களில் வழங்கப்பட்ட மின்சாரம் சாதாரணமாக நாம் பயன்படுத்தும் மின்சாரம் அல்ல என்பது குறிப்பிடத்தக்கது. (அ-5)

# பயிற்சிப் பட்டறை

(கும்பளை)

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் இலத்திரனியல் சமுர்த்தி கருத்திட்டத்தின் கீழ் கருத்திட்டம் மற்றும் நிகழ்ச்சித் திட்ட முகா மைத்துவ தொகுதிக்கு தகவல்களை உட்ப டுத்தும் நடவடிக்கைகள் தொடர்பில் விளக் கமளிக்கும் பயிற்சிப் பட்டறை நாளை காலை 9 மணிக்கு சமுர்த்தி அதி கார சபையின் தகவல் தொழில்நுட்ப பிரி வில் நடத்தப்படவுள்ளது.

இதற்கு யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலக பிரிவுகளில் இருந்து மனித வள முகாமைக்கு பொறுப்பான இலத்திரனியல் தகவல்களை பதிவு ஏற்றம் செய்யும் உத்தியோகத்தர்களை கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-19)

யாழ் கலாலயா பயிற்சியகம்
Yaarl Kalaalayah Academy
Jaffna

கடந்த ஆண்டின் பிரிவு III மாணவிகளின் பரீட்சைகள் காரணமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த 3 மாத கால கேக் ஐஸிங், உணவு தயாரித்தல், உடை தயாரித்தல், கூந்தல் அலங்காரம், Facial அழகுக்கலை பயிற்சிகளுக்கான சனி-ஞாயிறு மற்றும் கிழமை நாள் பிரிவுகளில் சேர விரும்பும் புதிய மாணவிகளுக்கான அனுமதி வழங்குதல் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

முன்னர் யாழ். பெருமாள் கோயிலுக்கு அண்மையாக இயங்கி வந்த மேற்படி பயிற்சி நிலையம் தற்போது தனது ஆரம்ப கால இடமாகிய யாழ். போதனா வைத்திய சாலைக்கு பின்புறமாகவுள்ள விக்ரோறியா வீதியில் இயங்குகிறது என்பதனையும் அறியத் தருகின்றேன்.

-இயக்குநர்-

இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கார்த்திகை 2<br>உயரம்: 6'<br>கி.பா: 62<br>தகைமை/தொழில்: O/L (வியாபாரம்)<br>தொ.இ: B -1218 | பிறப்பு: 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 2<br>உயரம்: 5'2"<br>கி.பா: 43.5 , 8 இல் செவ்<br>தகைமை/ தொழில்: BBA, HNDA முதலீட்டு ஆலோசகர் (நிரந்தரம்)<br>தொ.இ: G -1226 |
| பிறப்பு: 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>உயரம்: 5'6"<br>கி.பா.:- 55<br>தகைமை/தொழில்: Doctor MD (Russia)<br>தொ.இ: B -1219 | பிறப்பு: 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: புனர்பூசம் 4<br>உயரம்: 5'7"<br>தகைமை/ தொழில்: வங்கியாளர்<br>தொ.இ: G-1230 |
| பிறப்பு: 1967 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: விசாகம் 3<br>உயரம்: 5'6"<br>கி.பா: 35, 4இல் செவ்<br>தகைமை/ தொழில்: O/L, வியாபாரம் (தோட்டம்)<br>தொ.இ: B -1221 | பிறப்பு: 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 1<br>உயரம்: 5'7"<br>கி.பா: 17.5, 1 இல் செவ்<br>தகைமை/ தொழில்: O/L ஆங்கில ஆசிரியை<br>தொ.இ: G -1232 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்:விசாகம் 4<br>உயரம்: 5'<br>கி.பா: 15, 1 இல் செவ்<br>தகைமை/தொழில்: A/L, கணனி (அரச)<br>தொ.இ: B -1222 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 4, 1இல் செவ்<br>தகைமை/ தொழில்: சுருக்கெழுத்தாளர் (அரச)<br>தொ.இ: G -1236 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ சான்றிதழ் பரிசீலனை

(யாழ்ப்பாணம்)


வடமாகாண கல்வித் திணைக்களத்தால் அண்மையில் இடமாற்றம் தொடர்பாக மருத்துவ சான்றிதழ் சமர்ப்பித்த ஆசிரியர்களின் மருத்துவசபை பரிசீலனைகள் கட்டம் கட்டமாக நடத்தப்படவுள்ளதாக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

ஒரு தடவையில் 20 ஆசிரியர்கள் பரிசீலிக்கப்படவுள்ளனர். முதற்கட்டமாக யாழ்ப்பாண வலயப் பாடசாலையைச் சேர்ந்த 18 ஆசிரியர்களும் வலிகாமம் வலயத்தினைச் சேர்ந்த 2 ஆசிரியர்களுமாக மொத்தம் 20 ஆசிரியர்கள் மருத்துவ சபை பரிசீலனைக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அவர்களின் மருத்துவ சான்றிதழ், நோய் நிர்ணய அட்டை தொடர்புடைய ஏனைய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இதற்கமைய தெரிவு செய்யப்பட்ட ஆசிரியரின் பெயர் விபரம் வருமாறு,

திருமதி.வி.தயாபரன் (யா/அச்சுவேலி சரஸ்வதி வித்.), பி.பாலமுகுந்தன் (யா/செங்குந்தா இந்துக் கல்லூரி), திருமதி.வி.சந்திரகோபன் (யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்.), ஜே.எட்வின் (யா/கனகரட்ணம் ம.ம.வி), கே.தயாபரன் (யா/கோண்டாவில் இ.ம.வி), திருமதி எஸ்.தனபாலசிங்கம் (யா/கொட்டடி நமசிவாய வித்.), திருமதி ஜே.சத்தியேந்திரா (யா/சிறுப்பிட்டி இ.த.க.பா), செல்வி எஸ்.செல்வரூபா (யா/அச்சுவேலி ஆ.பா), திருமதி தி.கண்ணதாஸ்(யா/ஆனைப்பந்திமெதடிஸ்தமிசன்வித்)

திருமதி.எஸ்.ஆர்.ஜோன்கொலின் (யா/கொழும்புத்துறை புனித ஜோசெவ் வித்.), திருமதி.கே.நிமாதி (யா/கல்வியங்காடு இ.த.க.பா), திருமதி.வி.டி.ஆ.ரூபாபதி (யா/புனித றோக்ஸ் வித்), திருமதி.வை.சாந்தகுமார் (யா/கோண்டாவில் இ.ம.வி), திருமதி ஆர்.சைலஜா (யா/நல்லூர் தெற்கு ஸ்ரீவிக்னேஸ்வரா வித்.), கே.குமரபரன் (யா/அத்தியார் இந்துக் கல்லூரி), திருமதி ஜே.ராஜேஸ்வரன் (யா/ கனகரட்ணம் ம.ம.வி), திருமதி ரி.வளர்மதி (யா/நாவாந்துறை றோ.க.த.க.பா), திருமதி என்.விஜயகாந்தன் (யா/இந்து மகளிர் கல்லூரி), திருமதி.ப.மகேந்திரன் (யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை), பி.முருகதாஸ் (யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை). (அ-2)




நன்றி: ஐலண்ட்




## மருந்தாளர் பயிற்சிக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

கொழும்பு மருத்துவசபை வருடந்தோறும் நடத்திவரும் மருந்தாளர் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு வயது கட்டுப்பாடில்லை. இதற்கான தகைமைகளாக க.பொ.த சாதாரண தரத்தில் ஆங்கிலப் பாடம் உட்பட ஏனைய பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞான பாடத்தில் இரசாயனவியல் பாடம் உட்பட 3 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

இவர்களுக்கான வகுப்புக்கள் யாழ்ப்பாணக் கல்லூரி, இல.464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன. (அ-2)

# பலாலி விமானத்தளத்துக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது

## மக்களை மீள்குடியமர்த்துங்கள்- ரணில்

(தும்பளை)

பலாலி விமான நிலையத்திற்கு எவ்வித பாதுகாப்பு இடையூறும் இல்லாமல் இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதே தனது வருகையின் நோக்கமென எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவிலுக்கு நேற்று 9 மணியளவில் வருகை தந்து விசேட பூஜையுடன் நடைபெற்ற ஆலய வழிபாட்டினை தொடர்ந்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பலாலி விமான நிலையத்திற்கு எவ்வித இடையூறும் ஏற்படுத்தாது பாதுகாப்பினை வழங்கி இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதே எனது நோக்கமாகும்.

இது தொடர்பாக தெல்லிப்பழையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு தமிழ்தேசியக் கூட்டமைப்பின் ஒத்துழைப்புடன் நடந்த உண்ணாவிரதத்தின் போது சிலர் திட்டமிட்டே உண்ணாவிரதத்தை குழப்பும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

எனது யாழ். மாவட்ட இந்த விஜயத்தின் நோக்கத்திற்கு எதிராக கொழும்பில் உள்ள ஐலண்ட், டெய்லிமிரர் ஆகிய பத்திரிகைகள் எனக்குஎதிராககருத்துக்களை தெரிவித்திருந்தன.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு போன்ற தமிழ்க்கட்சிகளுடன் இணைந்து பலமானதொரு எதிர்க்கட்சியினை நிர்வகித்துஅரசிற்கு எதிராக செயற்படுவது மட்டுமல்ல நடைபெற்றுக்கொண்டிருக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதே எனது நோக்கமாகும்.

கடந்த 2005 ஒஸ்லோ உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த நான் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டிருந்தேன்.

இதேவேளை எனது கட்சியுடனான பேச்சுவார்த்தையை முறித்து கொண்ட விடுதலைப் புலிகள்மஹிந்தராஜபக்சவுடன்உடன்படிக்கையை செய்து கொண்டனர் என்றார். (அ-3-19)

# மின்விளக்குகள் மாயமாக மறைந்த மாயமென்ன?

(உடுப்பிட்டி)

பருத்தித்துறை பிரதேச சபையினரால் தொண்டைமானாறு கெருடாவில் தெற்கு பகுதியின் வீதிகளில் பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகள் மாயமாகியுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக அவ்வீதி இருளில் மூழ்கியுள்ளதாகவும் இதனால் இரவுகளில் இவ்வீதியில் பயணிக்க முடியாத நிலைமை காணப்படுவதாகவும் பெரும் அசௌகரியங்களிற்கு உள்ளாவதாகவும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

பிரதேச சபையினரால் பொருத்தப்பட்ட இம் மின்விளக்குகளை யார் அகற்றியதென்று தமக்கு புரியவில்லை என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை அச்சம் தரும் இவ்வேளையில் இவ் இருளடைந்த வீதியால் மக்கள் பயணிக்க பயப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. எனவே உரியவர்கள் உடனடியாக இதில் கவனமெடுத்து மின் விளக்குகளை பொருத்த வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-5-52)

# மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்தம் மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடம்நகர்த்த வேண்டியிருப்பதாலும் புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு வேலைகளுக்காகவும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணி வரை மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய குஞ்சர்கடையின் ஒரு பகுதி, நவிண்டி, பொலிகண்டி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு, உடுப்பிட்டி, வல்லிபுரம் பிரதேசம், அம்பன், ஆனைக்கோட்டை, காக்கைதீவு, அட்டகிரி, சாவற்கட்டு, வராகி அம்மன் கோவிலடி, ஆனைக்கோட்டை குளப்பிட்டி வீதி ஆகிய இடங்களிலும்,

நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணி வரையும் நெல்லண்டை, மாதனை, மாலுசந்தி முதல் இரும்பு மதவடி மடத்தடி வரையான பிரதேசம், மாவடி, சித்தன்கேணி, மாவடி மூளாய் வீதி, டச்சு வீதி ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படுமென யாழ்.பிரதேச மின்பொறியியலார் அறிவித்துள்ளார். (அ)

# பூவரசம் திட்டி மயானத்தை புனரமைக்க கோரிக்கை

(கரணவாய்)

கரணவாய் மண்டான் கிராமத்திலுள்ள பூவரசம் திட்டி இந்து மயானம் பற்றைக் காடாக காணப்படுவதால் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இம் மயானத்திற்கு செல்வோர் பற்றைகளைக் கடந்தே செல்ல வேண்டியுள்ளதுடன் இம்மயாணமானது சுகாதாரசீர்கேடு நிறைந்த இடமாக காணப்படுகின்றது.

மேலும் இம்மயானத்திற்கு கொட்டகை அமைக்கப்படாமையால் பெரும் சிரம நிலை காணப்படுகிறது. இதனை அமைப்பதற்கு பிரதேச சபையினர் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு பற்றைகளை துப்புரவு செய்வதோடு கொட்டகை ஒன்றும் இம்மயானத்திற்கு அமைத்து தரவேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-74)



யாழ்.வேம்படி உயர்தரப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப்போட்டி நேற்று முன்தினம் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வின்போது விருந்தினர்கள் மாணவிகளின் அணிவகுப்பு மரியாதையினைப் பார்வையிடுவதையும் மாணவிகளின் அணி வகுப்பு நடை இடம்பெறுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் வெற்றியீட்டிய இல்லத்திற்கு கேடயம் வழங்கி வைப்பதையும் அருகில் பாடசாலை அதிபர் திருமதி வேணுகா சண்முகரட்டினம் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை. மாணவர்களுக்கு விசேட கடன் வசதி திட்டம்

## அமைச்சர் எஸ்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் உயர் கல்வியை தொடர விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும் கடன் வசதிகளை பெற்றுக் கொடுப்பதற்கு ஏதுவான புதிய சட்டமொன்றை உயர்கல்வி அமைச்சு அறிமுகப்படுத்தவுள்ளதாக அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மருத்துவத்துறை, பொறியியல் துறை, கணக்கியல்துறை உள்ளிட்ட வேறு உயர் கல்வியில் மேலதிகமாக கல்வியைத் தொடருவதற்கு தேவையான பணத்தைக் கடனாகப் பெற்றுக் கொடுக்கவே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மனித வள அபிவிருத்தி முதலீட்டு நிதிய சட்டம் என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்படவுள்ள இத்திட்டம் தொடர்பாக சட்டவரைபு சட்டவரைஞர் திணைக்களத்திலிருந்து கிடைத்தவுடன் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் நடைமுறைப்படுத்தப்படும்.

வியிணிதி, வியிணி, திவிவிதி மற்றும் இலங்கையிலுள்ள தனியார் பல்கலைக்கழகங்கள், பொறியியல் கல்லூரிகளில் கல்வி கற்க மேலதிகமாக கட்டணம் செலுத்த வேண்டிய நிலை ஏற்படும் பட்சத்தில் இக்கடன் வசதிகளுடன் ஊடாக கல்வியை தொடர முடியும்.

வர்த்தக வங்கிகளின் ஊடாக இக்கடன் வசதிகள் பெற்றுக் கொடுப்பதுடன் கடனை மீள செலுத்துவதற்கு நிபந்தனைகளும் விதிக்கப்பட்டுள்ளன. உயர் கல்வியை முடித்த பின்னர் அவர் வெளிநாடு செல்வதாயின் கடனை மீளச் செலுத்துவதற்கு உத்தரவாதமளிக்க வேண்டும். வெளிநாடு செல்லாமல் இலங்கையில் தொழில்வாய்ப்பை பெற்றுக் கொண்டால் தொழில் வழங்குநர் அவரது கொடுப்பனவுகளிலிருந்து கடனை மீளச் செலுத்துவதற்குப் பொறுப்பேற்பவராக இருப்பாரென்றும் அவர் தெரிவித்தார். (அ-2)

## தே.எண்ணெயில் கலப்படம்

தேங்காய் எண்ணெயில் பல்வேறு எண்ணெய் வகைகள் கலக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றமை தொடர்பில் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

சந்தையிலுள்ள எண்ணெய் வகைகளின் மாதிரிகளை பெற்று அவற்றை பரிசோதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதேச நடவடிக்கைகள் தொடர்பான பிரதிப் பணிப்பாளர் அசேல பண்டார குறிப்பிட்டுள்ளர். பல்வேறு வர்த்தக நிலையங்களிலிருந்து 14 வகையான மாதிரிகளை சேகரிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிடுகிறார். தேங்காய் எண்ணெயுடன் அதிகளவில் விலை குறைந்த மரக்கறி எண்ணெயே கலக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# முதலமைச்சர் வேட்பாளராக அனோமா பொன்சேகா?

மேல் மாகாணசபை கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்பட்டால், ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக அனோமா பொன்சேகாவை நிறுத்த அக்கட்சி தயாராகி வருவதாக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து கட்சி மட்டத்தில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாக ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

மேல் மாகாணசபை விரைவில் கலைக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த பிரசன்ன ரணதுங்கவே மேல் மாகாண முதலமைச்சராக உள்ளார்.

மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைகளை எதிர்வரும் மார்ச் 8 ஆம் திகதி கலைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் ஹசனலி தெரிவித்துள்ளார்.

இந்த இரு மாகாண சபைகளுக்கும் மே மாதத்தில் தேர்தல் நடைபெறும். ஏற்கனவே அரச மற்றும் எதிர்க்கட்சியின் வேட்பாளர் தெரிவு குறித்து கவனம் செலுத்த குழுக்களை அமைத்துள்ளன. (அ-2)

# இருபது இலட்சம் நாய்களில் 60 வீதமானவை கட்டாக்காலிகள்

## சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டு

நாட்டில் சுமார் 20 இலட்சம் நாய்கள் உள்ளதாகவும் இவற்றில் 60 வீதமானவை கட்டாக்காலி நாய்களாக இருக்கின்றன. இதனால் அதிகளவில் நீர்வெறுப்பு நோய் (விசர்) ஏற்பட வாய்ப்புள்ளதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

ஒவ்வொரு வருடமும் விசர் நாய்க்கடியினால் ஏற்படும் நீர் வெறுப்பு நோயினால் 40 தொடக்கம் 50 பேர் வரை உயிரிழக்கின்றனர். இவர்களுக்கு மிகவும் மோசமான பின் விளைவுகளை சந்தித்த பின்பே மரணமாக வேண்டிய நிலை உருவாகின்றது.

இலங்கையில் வாழ்பவர்களின் எட்டுப் பேரில் ஒருவருக்கு ஒரு நாய் வீதம் உள்ளது என கணக்கெடுப்பின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. நீர் வெறுப்பு நோய்த் தடுப்பு வேலைத்திட்டத்தின் பணிப்பாளர் பாக்டர் ஹரிச்சந்திர தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு வருடத்திற்கு 112 இலட்சம் நீர்வெறுப்பு தடுப்பூசிகள் நாய்களுக்காக பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. மூன்று மாதங்களுக்கு ஒருமுறை தடுப்பூசிகளை நாய்களுக்கு கொடுக்க வேண்டும்.

நீர்வெறுப்பு நோய் மிக விரைவில் உடல் முழுவதும் பரவக்கூடியதென்பதால் நாய்க்கடிக்கு உள்ளான ஓரிரு நிமிடங்களிலேயே சிகிச்சை பெற வேண்டும். இந்த நோய் உடலில் பரவும் போது நரம்பு மண்டலத்தை பாதித்து மூச்சுத் திணறலை ஏற்படுத்தும். துடித்தல், எச்சில் வடிதல் போன்றன நோயின் அறிகுறிகளாகும்.

இறுதியில் நாயைப் போன்றே நடந்து கொள்வதுடன் பேச்சு வராமல் வெறும் சத்தம் மட்டுமே வெளிவரும் நிலை உருவாகி பல சோதனைகளை அனுபவித்து மரணிக்கும் நிலை ஏற்படும்.

நோயாளியின் அருகில் இருப்பவருக்கும் தடுப்பூசி போட வேண்டும். உலகில் நாயை மிக செல்லப்பிராணியாக வளர்ப்பதுடன் அதனை மிக பாதுகாப்பான முறையில் வளர்த்து வருகின்றனர். (அ-2)

# விண்ணில் இருந்து விழுந்த மர்மப்பொருட்கள்

(மாத்தறை)

மாத்தறை மாவட்டம், அக்குரஸ்ஸ பகுதியில் கடந்த 15 ஆம் திகதி இரவு முதல் அடையாளம் தெரியாத பைபர் போன்ற பொருட்கள் வானில் இருந்து வீழ்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த பொருட்கள் 2012 டிஏ 14 வால் நட்சத்திரம் பூமிக்கு அருகில் நேற்று முன்தினம் பயணித்தமையால் ஏற்பட்ட நிகழ்வாக இருக்கலாம் என்று ஆர்தர் சி கிளார்க் நிலையத்தின் ஆய்வாளர் சந்தன ஜெயரட்ன தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவிலும் வீழ்ந்த விண்கற்களை போன்றதாக இது இருக்கலாம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அக்குரஸ்ஸயில் வீழ்ந்த பொருட்களின் மாதிரிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# ரணில் தலைமையிலான குழுவினர் இன மோதலை தூண்ட முயற்சி

## பாதுகாப்பு செயலாளர் குற்றச்சாட்டு

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினர் இன மோதல்களைத் தூண்ட முயற்சித்து வருவதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளதாக இணையத்தள செய்திகள் தெரிவிக்கின்றன. அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது.

குறிப்பாக யாழ்ப்பாண குடாநாட்டில் வாழ்ந்து வரும் தமிழ் மக்களின் இன உணர்வுகளைத் தூண்டி அதன் மூலம் அரசியல் நடத்த ரணில் குழு ஆயத்தமாகி வருகிறது.

யுத்தத்தின் பின்னர் படையினரும் அரசாங்கமும் மேற்கொண்டு வரும் அபிவிருத்திப் பணிகளை மறந்து ரணில் தரப்பினர் குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றனர்.

தந்திரோபாய மற்றும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலைகளிலிருந்து படையினர் வாபஸ் பெற்றுக்கொள்ளப்படமாட்டார்கள் எனவும் அரசியல் அழுத்தங்களுக்கு அடிபணிய போவதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வன்னி முன்னரங்கப் பகுதிகளில் படையினர் புலிகளுக்கு எதிராக போராட்டத்ததை நடாத்தமலிருந்தால் ரணில் தரப்பினர் தெல்லிப்பழையில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியிருக்க முடியாது.

தமிழீழ விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டின் கீழ் குறித்த பிரதேசங்கள் காணப்பட்ட போது மக்கள் எவ்வாறான நெருக்கடிகளை அனுபவித்து வந்தார்கள் என்பதனை அனைத்து தரப்பினரும் மறந்து விட்டார்கள்

ரணில் நண்பரான சார்லி மகேந்திரனின் வீட்டை புலிகள் பயன்படுத்தி வந்தார்கள். அந்த வீட்டை இராணுவத்தினர் பின்னர் பயன்படுத்தினார்கள் எனவும் குறித்த பூர்வீக வீட்டை மீட்டுத் தருமாறு ரணில் தம்மிடம் கோரியதாகவும் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமது பணிப்புரைக்கு அமைய படையினர் அவ் வீட்டை விட்டு வெளியேறியதாகவும் இவ்வாறு புலிகள் இல்லாது ஒழிக்கப்பட்டது மூலம் ரணிலும் அவரது சகாக்களும் பல நன்மைகளை அடைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்க்கட்சியின் ஒரு தரப்பினர் அரசாங்கத்துக்கு எதிரான பிரசாரங்களை முன்னெடுப்பதில் தீவிரம் காட்டி வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

# வாழ்க்கையின் ஒளிக்கதிர்களாக அன்பை வெளிப்படுத்துவோம்

## தவக்கால சிந்தனை



அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது. இல்வாழ்க்கை பண்புடையதாகவும் பயனுடையதாகவும் விளங்குவதற்கு அன்பான உள்ளமும் அதையொட்டிய நல்ல செயல்களும் தேவை. கணவன் தன் தாய், தந்தையை விட்டுவிட்டுத் தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான். இருவரும் ஒரே உடலாய் இருப்பர்.

என் மனதிற்கு பிடித்தவை மூன்று. அவை ஆண்டவர் முன்னும் மனிதர் முன்னும் அழகுள்ளவை. அவை உடன்பிறப்புக்களிடையே காணப்படும் ஒற்றுமை, அடுத்திருப்பாரோடு ஏற்படும் நட்பு, தங்களுக்குள் ஒன்றி வாழும் கணவன் மனைவியர்.

குடும்பங்கள் மூவொரு இறைவனின் அழகைச் சிந்தித்து அதனை வார்த்தைகளால் அல்ல மாறாக அன்பை வாழ்வதில் ஒளிக் கதிர்களாக வெளிப்படுத்த அழைக்கப்படுகிறது.

ஓர் ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையே நடைபெறும் திருமணத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும் குடும்பமும் மூன்று ஆட்களாக இருக்கும் ஒரே கடவுளின் சாயலாக திகழ்வதற்கு அழைக்கப்படுகிறது. நாம் திருமணத்தை வாழும் போது ஒருவருக்கொருவர் ஏதோ குறிப்பிட்ட ஒரு பொருளை அல்லது செயலை வழங்குவதில்லை. ஆனால், எங்களது முழுவாழ்வையுமே வழங்குகின்றோம். எங்களது ஆசை கள் ஒருவர் மற்றவர் விருப்பத்தை நிறைவேற்றல், கொடுப்பதிலும் பெறுவதிலும் நாங்கள் அனுபவிக்கும் மகிழ்ச்சி ஆகியவற்றால் எங்களது அன்பு, எங்களது பிள்ளைகளை பொறுப்புடனும் தாராள மனத்துடனும் பெற்றெடுத்து அவர்களது நலனில் அக்கறை காட்டி ஞானம் நிறைந்த கல்வியை அளிப்பதிலும் அக்கறை காட்ட வேண்டும்.

மனிதரை மதித்தல், நன்றி மனப்பான்மை, நம்பிக்கை, பொறுப்பு, ஒத்துழைப்பு, ஒருமைப்பாடு போன்ற சமூகப் பண்புகளின் முதல் கல்விக்கூடமாகவும் குடும்ப வாழ்வு


ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

அமைந்துள்ளது. தொழில்நுட்பத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட இன்றைய உலகில் எங்களது பிள்ளைகள் மீது கண்ணும் கருத்துமாய் இருந்து சலனமற்ற மனநிலை மற்றும் நம்பிக்கையோடு வாழ்வதற்கான அர்த்தங்களையும் விசுவாசதத்தின் வல்லமையையும் அவர்களுக்கு எடுத்துச் சொல்வோம். உயர்ந்த இலட்சியங்களைச் சுட்டிக்காட்டி அவர்களது பலவீனங்களில் அவர்களுக்கு ஆதரவாக இருப்போம். உரையாடலை வளர்த்து ஒருவர் ஒருவரின் கண்ணோட்டத்தை மதித்து சேவை செய்வதற்குத் தயாராக இருந்து பிறர் தவறும் போது பொறுமை காத்து பிறரை மன்னித்து, மன்னிப்புக் கேட்டு, மோதல்கள் ஏற்படும் போது அறிவு மற்றும் பணிவால் அவற்றைச் சமாளித்து, பிற குடும்பங்களுக்குத் திறந்த மனதாக இருந்து ஏழைகள் மீது அக்கறைக்காட்டி சமுதாயத்தில் பொறுப்புள்ளவர்களாய் வாழ்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வீரா, சினம் அறியான்!



அவனுக்கு பெற்றோர் வைத்த பெயர் வீரா. ஆனால் அவனுக்கும், வீரத்திற்கும் சம்பந்தமேயில்லை. வீரா அமைதியே உருவானவன். கோபம் என்றால் என்னவென்றே தெரியாதவன்! எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் கோபப்படாதவன். அவனுடைய சாந்த குணத்தை மற்றவர்கள் தங்களுக்கு சாதகமாக எடுத்துக்கொண்டனர்.

வீராவை நன்றாக வேலை வாங்கி விட்டு கையில் உள்ள பணத்தைக் கூலியாகக் கொடுப்பார்கள். கூலி எதுவானாலும் வீரா வாங்கிக்கொள்வான். சிலர் பணம் தராமல் மிஞ்சிய சோற்றைத் தருவார்கள். சிலர் அரிசி தருவார்கள். ஆனால் வீரா யாரிடமும் இது குறைவு. இன்னும் வேண்டும் என்று எதுவும் கேட்காமல் எது கொடுத்தாலும் வாங்கிக்கொள்வான். வீரா வேண்டுமானால் அப்படியிருக்கலாம். ஆனால் அவன் மனைவியும் அப்படியிருக்கவேண்டும் என்று கட்டாயமா என்ன? ஆரம்பத்தில் இருந்தே வீரா வாயைமூடிக் கொண்டு கிடைத்த கூலியை ஒப்புக் கொள்வது அவளுக்குப்பிடிக்கவில்லை. அவனுக்கு எந்த நிலையிலும் வராத கோபம் அவளுக்கு அவன் மீது பல மடங்காகப் பொங்கி வருவது வழக்கம்.

இப்படித் துப்புக்கெட்ட ஆணுடன் என்னால் எப்படிக்குடும்பம் நடத்தமுடியும்? என்று அவள் அவனுடன் தினமும் பயங்கரச் சண்டையிடுவாள். இத்தனை கம்மியாக சம்பாதித்தால் குடும்பம் ஓடாது என்று கூச்சல் இடுவாள். அதற்கெல்லாம்

## அம்புலிமாமா கதைகள்

பதிலாக வீரா மூலையிலிருந்த குடிநீர் குடத்தைக்காட்டி இதில் ஆற்றில் இருந்து கொண்டுவந்து நிரப்பினாலும் சரி! கடலில் இருந்து கொண்டு வந்து நிரப்பினாலும் சரி! அந்தக்குடத்தில் எவ்வளவு கொள்ளுமோ அவ்வளவுதானே நிரப்பமுடியும் என்று சமாதானம் கூறுவான்.

அவனுடைய தினசரி விளக்கம் அவள் கோபத்தை ஆயிரம் மடங்காகத் தூண்டுவது வழக்கம்! ஒருநாள் கண்மண் தெரியாமல் கோபமுற்ற அவள் அந்தக் குடத்தை அவன் தலையில் போட்டு அடித்தாள். அவன் மண்டை உடைந்து இரத்தம் ஆறாக ஓடியது. அப்போதும் வீரா தன் மனைவி மீது கோபப்படவில்லை. பேசாமல் தன் காயத்திற்குத் தானே ஒரு கட்டுப் போட்டுக் கொண்டான். பின்பு எதுவுமே நடக்காதவன் போல் மனைவியைப் பார்த்து எனக்கு இன்று குடத்தால் அடிபட்டு மண்டை உடைய வேண்டும் என்று விதி! அதில் இருந்து தப்பமுடியவில்லை என்று சிரித்துக் கொண்டே



சொன்னான்.

இந்தக்காட்சியை ஜன்னல் வழியாக வெளியே இருந்து இருவர் பார்த்துக் கொண்டேயிருந்தனர். அவர்கள் மிக முக்கியமான நபர்கள். ஒருவர் அந்நாட்டு மன்னர்! மற்றவர் மந்திரி! மாறுவேடமணிந்து குடிமக்களின் குறைகளை அறியும் வழக்கங்கொண்ட மன்னருக்கு அன்று சினம் என்றால் என்னவென்றே அறியாத வீராவைப் பார்க்கும் சந்தர்ப்பம் உண்டாயிற்று.


அதற்குள் நாட்டாமையின் ஆள் ஒருவன் வீராவின் வீட்டுக்கு வந்து மழை தண்ணீர் தேங்கிவிட்டது. மராமத்து வேலை செய்ய உன்னை நாட்டாமை அழைத்துவரச் சொன்னார் என்று கூறி வீராவை அழைத்துச் சென்றான்.

அங்கிருந்து உடனே அகன்ற மன்னர் மந்திரியிடம் வீட்டுக்குள் நடந் ததை கவனித்தீங்களா? அந்த ஆளுக்கு ரோஷம், சூடு, சுரணை எதுவும் கிடையாதா? மனைவி குடத்தால் அடித்து மண்டையை உடைத்த போதும் அவளைக் கோபிக்காமல் சும்மா நிற்கிறானே! இவனை ஜடம் என்பதா? பைத்தியம் என்பதா? என்றார்.


பிரபு! வீராவை நாட்டாமை கூப்பிட்டிருக்கிறார். அவனைப் பற்றி அவருக்குத் தெரிந்திருக்கும். அவரிடமே வீராவைப் பற்றிக்கேட்டு விடலாம் என்று மந்திரி சொல்ல இருவரும் நாட்டாமையிடம் சென்றனர். மன்னரும் மந்திரியும் மாறுவேடத்தில் இருந்ததால் நாட்டாமைக்கு அவர்களை அடையாளம் தெரியவில்லை.

மன்னர் நாட்டாமையிடம் வீராவைப் பற்றித் தன் சந்தேகத்தைக் கேட்டார். அதற்கு நாட்டாமை உங்களுக்கு அவனைப் பற்றித் தெரியாது. அவன் ஒரு வேதாந்தி! ஞானியை ஒத்தவன்! எல்லாம் இறைவன் சித்தப்படியும் விதிப்படியுமே நடக்கும் என்று நம்புபவன்! சம்சாரத்தில் ஈடுபட்ட சந்நியாசி. ஆகையால் அவன் உணர்ச்சிகளை வென்றவன்! கோபத்துக்கு ஒருபோதும் அடிமையாவதில்லை. பேராசை கிடையாது என்று அடுக்கிக் கொண்டே போனார்.

அதைக்கேட்டு சிரித்தராஜா நீங்கள் அவனைப்பற்றி மிகவும் உயர்வாக நினைக்கிறீர்கள். ஆனால் அவன் அதற்கு தகுதியற்றவன். அவன் ஒரு கிறுக்கு என்றும் வாயில்லாப்பூச்சி என்றும் நினைக்கிறேன் என்றார். இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட மன்னர் சரி! ஒரு பந்தயம்! வீராவை என்னுடன் அழைத்துச் சென்று சோதிக்கிறேன்.



நீங்கள் கூறியது சரியானால் நான் உங்கள் கிராமத்தின் முன்னேற்றப் பணிகளுக்கு மன்னரிடம் சிபாரிசு செய்வேன் என்று சொல்லி விட்டு வீராவை தன்னுடன் அழைத்துப் போனார்.



அரண்மனைக்குப் பின்னால் இருந்த தரிசு நிலத்தில் அவனைக் குடிசை போட்டுக்கொள்ள அனுமதித்தபின் அந்த நிலத்தை உழுது பண்படுத்தி நெல் பயிரிடச் சொன்னார். வேண்டுமென்றே வீராவுக்குப் பயிரிட தானியம் கிடைக்காமல் செய்தார். வேலையாட்கள் கிடைக்காமல் செய்தார். ஆனால் வீரா சற்றும் மனம் தளரவில்லை. வேண்டுமென்றே மன்னர் இடைஞ்சல்கள் செய்வது தெரிந்தும் சிறிதும் கோபமடையவில்லை. தன்னந்தனியாகப் போராடி நெல் பயிரிட்டான். பாதிப்பயிர் வளர்ந்த போது மன்னர் நெல்லுக்குப் பதிலாக கடலை பயிரிடச் சொன்னார்.

சற்றும் தயங்காமல் வீரா நெல்லை அப்புறப்படுத்திவிட்டு கடலை பயிரிட்டான். மறுபடியும் அவனுக்கு மன்னர் ஏகப்பட்ட இடையூறுகளை உண்டாக்கினார். ஆனால் மனம் தளராத வீரா தன் கருமமே கண்ணாக இருந்தான். இறுதியில் அவன் பொறுமையைக் கண்டு மன்னருக்குத்தான் கோபம் ஏற்பட்டதே தவிர வீராவுக்கு ஏற்படவில்லை.

திடீரென ஒருநாள் வீராவை அழைத்து, நீ கடலை பயிரிட்டது போதும். அவற்றை அகற்றிவிட்டு பட்டாணி பயிரிடு என்றார். இந்த முறையும் வீரா கோபமடையாமல் மன்னரின் கட்டளைக்கு அடிபணிந்தான். முன்போலவே மிகவும் சிரமப்பட்டு தனியாக உழைத்துப் பட்டாணி பயிரிட்டான். அதற்கு மேல் அவனைச்சோதிக்க மன்னருக்கே பொறுமை இல்லை.

அவனை நேரில் அழைத்த மன்னர் வீரா! பொறுமையின் சிகரமே! நீ எப்படி கோபமே இல்லாமல் இருக்கிறாய்? என்றார். அதற்கு வீரா பணிவுடன் பிரபு! அந்த நிலத்தில் நெல் அறுவடை ஆக வேண்டுமென்ற விதியிருந்தால் நெல் விளைந்திருக்கும். அதுபோல கடலை தான் உண்டாக வேண்டுமென்று விதித்திருந்தால் அப்படியே நடந்திருக்கும். பிரபு நமக்குப் பணி செய்யத்தான் அதிகாரம் உண்டு.நான் இதைச்செய்தால் இதை அடைவேன் என்று தடடிக்கேட்கும் உரிமை நமக்கில்லை. பலனை அளிப்பவன் இறைவன் ஒருவனே நமக்கு எப்போது எது தர வேண்டுமென்று அவனுக்குத் தெரியும் என்றான்.

அதைக்கேட்ட மன்னர் பிரமித்துப் போனார். வீரா ஒரு அசாதாரணப் பிறவியென்று அறிந்தான். வெறும் வாய்ப்பேச்சாக வேதாந்தம் பேசும் பண்டிதர்களை மட்டுமே பார்த்திருந்த மன்னருக்கு உண்மையான வேதாந்தியாக வாழும் வீரா ஒரு தவயோகியாகவே தோன்றினான். தன் சவாலில் தோற்றுப் போனதாக ஒப்புக்கொண்ட மன்னர் நாட்டாமையிடம் சென்று தான் வாக்களித்தபடியே கிராமத்து முன்னேற்றப் பணிகளுக்கு ஏராளமாகப் பொருள் வழங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலகப்போர்

## 49 மானுடத்திற்கான திட்டக்கண்ணீர்!



சோழவந்தான்ல கட்டிக் கொடுத்தாக ராணிய. அலங்காநல்லூர் சல்லிக்கட்டுல மாடு புடிக்கிறவன் தான் மாப்பிள; பேரு கொம்புராமன்; ஏழேநாள்ல அவனத் தூக்கியெறிஞ்சிட்டு ஊருக்கு ஓடி வந்துட்டா ராணி. அலங்காநல்லூர்க் காளைய அடக்குனவனுக்கு அட்டணம்பட்டிப் பசுவை அடக்க முடியல பாவம்.

ஏண்டா! பொம்பளைய அடக்க முடியாத பொண்டுகனா நீயி? ன்னு ஊரே அவனக் காறித்துப்புது.

வாழாவெட்டியா வந்தவ ஒரு கவலயும் இல்லாம ஊரு சுத்திக்கிட்டே திரியிறா.

பொம்பளப் புள்ளைக கூடத் தோப்பு- துரவு போறது, ஆம்பளைகள லந்து ரகளை பண்றதுமாப் போகுது அவ பொழுது. யாரை வம்புக்கு இழுத்தாலும் அவதான் செயிக்கணும். அதுதான் அவளுக்கு ஒரே குறி. ஒரு நாளைக்கு ஒரு ஆம்பளையாவது அவகிட்ட மூக்கு அறுபடாமப் போறதில்ல. கடைசியா மாட்டுனவரு கருத்தமாயி.

☆☆☆☆☆

மத்தியான வெய்யில்ல வத்திப் போன கெணத்துல கருத்தமாயி தண்ணி இறைச்சுக்கிட்டிருந்தப்ப, சேறுஞ்சகதியுமா சாலோட வந்துருச்சுக ரெண்டு மூண வெரால் மீனுக. மத்தியானக் கஞ்சி கொண்டுவாரேன்னா சிட்டம்மா. அதுக்கு முன்ன வெரால் மீனக் கொண்டு போயி வீட்டுல கொடுத்திரலாமுன்னு கமலையைக் கழத்தி விட்டாரு. விளைஞ்ச கோரைய எடுத்துச் செவுளுக்குக் கீழ குத்திக் கோர்த்து வெரால் மீனுல கை படாமக் கோரையில மட்டும் வெரல் சேத்துக் கொண்டு வந்துக்கிட்டுருக்காரு வீட்டுக்கு.

புளியந்தோப்பு வைக்கப்படப்புல கன்னுக்குட்டிக்கு வைக்க உருவிக்கிட்டுருக்கா கெழங்குராணி. வாய் நெறயா வெத்தல போட்டுக் கத கதன்ன மென்னுக்கிட்டுருக்கா. வழியோட போற ஆள இப்ப வம்புக்கு இழுக்கிறா.

ஏ மாமு! என்னாது அது கையில புடிச்சிட்டுப்போறது?

மீனு

ஊறுன வெத்தல எச்சிய ஒரு ஓரமாத் துப்பிட்டுக் கேக்குறா: வெரல் படாம வெரால் மீனு கொண்டு போற மாமு... நாக்குப் படாம என் நாக்குல வெத்தல எடுப்பீகளா?

வேணாமடி ஆத்தா. உன் விவகாரத்துக்கு நான் வல்ல.

தோத்துப் போனேன்னு சொல்லு. ஒன்னிய விட்டுர்றேன்.

ஆமடியம்மா... தோத்துத்தான் போனேன்.

பொட்டச்சிக்கிட்டத் தோத்த ஆளுக்கு வெட்டருவா மீச எதுக்கு? எனக்குச் சந்தேகமா இருக்கு.

என்னா சந்தேகம்?

சிட்டம்மா பெத்த பிள்ள ஒனக்குத் தான் பெறந்ததான்னு...

சுர்ருன்னு சுட்டுருச்சு கருத்தமாயிக்கு. இவ திமிர அடக்காமப் போறதா?

சொல்லுடி சொரட்டச் சிறுக்கி...

என்னாடி ஒம் பந்தயம்?

அப்பிடிவா வழிக்கு. நான் போட்ட வெத்தலய நான் தெரட்டி வைப்பேன் என் உள் நாக்குல. என் நாக்குல உன் நாக்குப் படாம உன் நாக்கால நீ எடுக்கணும்.

வாயத் தொறடி.

வைக்கப்படப்புல அவளச் சாச்சுக்கிட்டு, அவள மிசுங்கவிடாம ரெண்டு பக்கமும் ரெண்டு கைய வச்சு, அணவு கட்டிக்கிட்டு அவ நாக்குல தெரட்டி வச்ச வெத்தல உருண்டையைத் தன் வாய்க்கு எடம் மாத்துற வேலையக் கண்ணுங் கருத்துமாச் செஞ்சிக்கிட்டிருக்காரு கருத்தமாயி. நாக்குல நாக்குப் படாம நுனிநாக்குல தள்ளி வாராரு வெத்தல உருண்டைய.

இந்தா... இந்தா... வருது...

வருது... வந்துருச்சு. கடைசியா ஒரு தள்ளுத் தள்ளுனா அது அவ வாய் விட்டு இவரு வாயில வந்து விழுந்திரும். வெளிய வந்து விழுகுற வெத்தலயத் தன் நாக்குல ஏந்துறதுக்கு பயந்து பயந்து பந்தோபஸ்து பண்ணிக்கிட்டுருக்காரு. இந்தக் கள்ளக் கழுதை கடைசியில நாக்க உள்ள இழுக்காம இருக்கணுமே... அதப் பேசவும் முடியாது இப்ப. ஒன்ன செயிச்சுட்டு வச்சுக்கிறேண்டி.

நாக்கு நுனி கடைசித் தள்ளுத் தள்ளுறப்பத் தடால்னு ஒரு சத்தம் கேக்குது.

இடுப்புல இருந்த பிள்ளையத் தரையில எறக்கித் தள்ளிட்டுப் படார்னு கஞ்சிச் சட்டியக் கல்லு மேல வீசிட்டுப் பேய் எறங்கி ஆடற பொம்பளையா வெறியெடுத்து நிக்கிறா சிட்டம்மா.

ஏண்டி எடுபட்ட சிறுக்கி! எத்தன நாளா நடக்குது இந்தக் கூத்து? இதுக்காகத்தான் கட்டுன புருசன விட்டுட்டுக் கள்ளப் புருசனத் தேடி வந்தியா? நீ விளங்க மாட்டடி... அடி மாண்டு போயிருவா.



கருத்தமாயும் கெழங்குராணியும் படீர்னு வெலகிப் பேச்சு வராமப் பித்துப் புடிச்சு நிக்குறாக.

அய்யா என் புருசா! ஒன்னிய ஏகபத்தினி ராமன்னு நெனச்சேன் பாரு! எம் புத்தியச் செருப்பால அடிக்கணும். •

ஏ சிட்டம்மா! என்னியப் பேசவிடு

பேசாதய்யா பேசாத. உனக்குத்தான் நான் பிள்ள பெத்தேன்ங்கறது உண்மையானா என் சீவன் அத்துச்சென்மம் முடியிற வரைக்கும் பேசாத. நானும் ஒங்கூடப் பேசமாட்டேன்.

தரையில கெடந்த வெரால்மீன ஒரு கையில புடிச்சுக்கிட்டுக் கல்லுல சிந்தி விழுந்த பருக்கையப் பெறக்கித் தின்னுக்கிட்டிருந்த சின்னப்பய முத்துமணிய ஓங்கி முதுகுல ஒரு அடி அடிச்சு இழுத்து இடுப்புல வச்சுப் புறப்பட்டுப் போய்ட்டா. பேசமாட்டேன்ங்கறதுதான் அவ பேசுன கடைசி வார்த்த.

☆☆☆☆☆

# முடிச்சுல தண்ணி விழுந்த மாதிரி அவ முடிவு இறுகிப் போச்சு...

அந்தச் சம்பவம் முடிஞ்ச பத்தாம் நாளு நடந்ததுதான் பயங்கரம். உள்ளூருல ஏச்சுப் பேச்சுப் பொறுக்க முடியாத கொம்புராமன் ரெண்டு முரட்டுத் திருநங்கைகளக் கூட்டிக்கிட்டு ஒரு ராத்திரியில அட்டணம்பட்டிக்குள்ள புகுந்து பொண்டாட்டி வீட்டுக் கதவத் தட்டிட்டான். அவ கதவத் தொறந்ததும் பொசுக்குன்னு புகுந்துட்டாங்க மூணுபேரும். அப்பனைத் தூக்கித் திண்ணையில எறிஞ்சாக.

ரெண்டு முரட்டுத் திருநங்கைகளும் கெழங்குராணி கையையும் காலையும் அமுக்கி மிசுங்கவிடாம இறுக்கிப் புடிச்சது மட்டும்தான் தெரியும்; அப்பறம் சாத்திருச்சு கதவு.

விடிஞ்சு தொறந்து பாத்தா தன் நீளமான கூந்தல் முடியில தன் கழுத்தத் தானே சுத்தித் தூக்குல தொங்குறா கெழங்குராணி.

புருசன் கெடுத்துட்டான்னு பொணமாப் போயிட்டா பாவிமக. ஊரே வேடிக்கை பாக்குது. ஒரு ஆளும் இறந்து போனவள எறக்கல. கடைசியா ஓடி வாராரு கருத்தமாயி. வெத்தல விளையாட்டுக் காமிச்ச நாக்கும் அவள மாதிரியே தொங்கிக் கிட்டிருக்கு. கருத்தமாயி ஒருத்தராப் பொணத்த எறக்குனாரு; அவருதான் எரிக்கவும் எரிச்சாரு.

சிட்டம்மாளுக்கு இருந்த அரைகுறைச் சந்தேகமும் அதுல தீந்துச்சு. இந்தாளு அவள வச்சிருக்காம இருந்தா இந்த சாங்கியம் பண்ணியிருப்பாரா?

முடிச்சுல தண்ணி விழுந்த மாதிரி அவ முடிவு இறுகிப்போச்சு. இன்னைக்கி வரைக்கும் பேசல.

சொல்லி முடித்த சின்னப்பாண்டியின் கண்ணில் ஒரு மெல்லிய நீர்ப்படலம் நின்றது.

சகிப்புத் தன்மையே... உன் பெயர்தான் இந்தியாவா? நீடித்த நிலைப்பாடே... உன் பெயர்தான் இந்தியப் பெண்ணா?

எமிலியின் உதடுகள் முணுமுணுத்தன. இப்போதுபுரிந்துகொண்டாள். அவள் வளர்த்த ஆடு, மாடு, கோழிகள் வெறும் பிராணிகள் அல்ல. குடும்ப வாழ்வின் ஊடகங்கள்.

(தொடரும்)

பாடம்



எரிமலை தும்மியது
ஐம்பது கிலோ மீட்டர்
அக்கினிக் குழம்பு
எந்தக் குடிமகனும்
இடம் பெயரவில்லை
அக்கினிக் குழம்பின்
ஆறிய சாம்பலில்
உழுது பயிரிட்டதில்
ஆறு மடங்கு
அமோக விளைச்சல்
எரி மலை சொன்னது:
"எந்தவொரு தீமையிலும்
இன்னோர் நன்மை உண்டு"

-வைரமுத்து-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நாவில் இலங்கை மீதான பிரேரணையை இந்தியாவே முதலில் கொண்டு வர வேண்டும்

## பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்தல்

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை ஆணையகத்தில் இலங்கை மீதான விசாரணை யோசனையை இந்தியாவே முதலில் கொண்டு வரவேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் டாக்டர் எம்.ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.**



இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

அதற்கான முயற்சிகளை வேறொரு நாடு மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கக்கூடாது. எதிர்வரும் 25 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள மனித உரிமைகள் ஆணையத்தின் 22 ஆவது பேரவை அமர்வில் இந்தியா முன்னின்று செயற்பட வேண்டும்.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறைகளை நிறுத்தும்படி இலங்கை அரசாங்கத்திற்கு இந்திய மத்திய அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இலங்கையில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்களை கொடூரமான முறையில் படுகொலை செய்த இலங்கை அரசை போர்க்குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இச் சூழலில் இலங்கை நிலைவரம் குறித்து ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் தலைவர் நவநீதம்பிள்ளை வெளியிட்டுள்ள விசாரணை அறிக்கை இந்த கோரிக்கைக்கு வலுசேர்க்கும் வகையில் அமைந்துள்ளது.

இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்கள் குறித்து நேர்மையான விசாரணை நடத்தி தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கை அரசை வலியுறுத்தி கடந்த ஆண்டு மார்ச் மாதம் ஜெனீவாவில் நடைபெற்ற மனித உரிமை ஆணையத்தின் 19 ஆவது கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன்பின் ஓராண்டு ஆகிவிட்ட நிலையில் இலங்கையில் மனித உரிமைச் சூழலை மேம்படுத்தவோ அல்லது போர்க்குற்றங்கள் குறித்து விசாரணை நடத்தவோ ராஜபக்ஷ அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மாறாக இலங்கையில் மனித உரிமை மீறல் தொடருவதை ஐ.நா. மனித உரிமை ஆணையர் நவநீதம்பிள்ளை அவரது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் மனித உரிமை சூழலை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நவநீதம்பிள்ளை அளித்த பரிந்துரைகளையும் இலங்கை அரசு ஏற்க மறுத்துவிட்டது. இப்படிப்பட்ட அரசிடமிருந்து ஈழத்தமிழர்களுக்கு நீதியும் நியாயமும் கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

எனவே, ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் தலைவர் நவநீதம்பிள்ளையின் விசாரணை அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டவாறு இலங்கை மீது சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடத்துவதுதான் சரியான நடவடிக்கையாக இருக்கும்.

இதற்கான முயற்சிகளை ஏதோ ஒரு நாடு எடுக்கும் என்று எதிர்பார்த்திருக்காமல் இலங்கை மீது சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடத்தக் கோரும் தீர்மானத்தை எதிர்வரும் 25 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் 22 ஆவது கூட்டத்தில் இந்தியாவே கொண்டு வர வேண்டும்.

அதுமட்டுமின்றி இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதியில் இருந்து இராணுவத்தை விலக்கிக் கொள்ள வேண்டும். தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறைகளை நிறுத்தும்படி இலங்கை அரசுக்கு கடுமையான நெருக்கடியை மத்திய அரசு கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன் என்றும் அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# புலிகளை சட்ட ரீதியான இயக்கமாக்க முனைப்பு

## நவிப்பிள்ளையை சாடுகிறது அரசு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை சட்ட ரீதியான இயக்கமாக மாற்றுவதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை முயற்சித்து வருவதாக இலங்கை அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கை தொடர்பில் அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கையானது புலிகளுக்கு சார்பாக அமைந்துள்ளது. அதில் தமிழீழ விடுதலைப்புலி போராளிகளுக்கு அஞ்சலி செலுத்த இடமளிக்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் புலிகளை சட்ட ரீதியான இயக்கமாக மாற்ற நவநீதம்பிள்ளை முயற்சித்துள்ளார். இந்த அறிக்கையானது நாட்டின் தேசியப் பாதுகாப்பு விவகாரத்தில் தலையீடு செய்தலாகும். இந்த அறிக்லகயின் 63-3 பிரிவில் படையினருக்கு எதிராக போர்க்குற்றச்சாட்டு சுமத்தி படையினரை சர்வதேச நீதிமன்றில் ஆஜர்படுத்த முயற்சிக்கப்பட்டுள்ளது.

போர் தொடர்பில் விசாரணை செய்யும் நோக்கில் வரும் எந்தவொரு ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரதிநிதியையும் நாடுகள் அனுமதிக்கப் போவதில்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# ஜனநாயகத்தை நிலை நிறுத்த அமைதி வழியில் போராட்டம்

## மாவை எம்.பி அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வடபகுதி மக்கள் தொடர்ந்தும் போராட வேண்டியதன் அவசியத்தினை யாழ். விஜயத்தின் மூலம் பொது எதிரணியினர் உணர்ந்திருப்பர் என தமிழ்தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

நாம் மக்களை அணிதிரட்டி ஜனநாயக ரீதியாக அமைதிப் போராட்டத்தினை தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டும்.

நாட்டின் பிரதான எதிர்க்கட்சி உள்ளடங்கலாக பொது எதிரணிக் கூட்டணியின் யாழ். விஜயத்தின் மூலம் எமது மக்களின் துன்பத்தினை அவர்கள் அறிந்துள்ளனர்.

துயருற்றிருக்கின்ற எமது மக்கள் தம்முடைய பிள்ளைகளினை இழந்துள்ள சோகத்தினையும், காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள், கடத்தப்பட்டவர்களின் உறவுகள் படும் துன்பத்தினையும் இப் பொது எதிரணி கூட்டணி உணர்ந்து கொண்டிருக்கும்.

இன்றுள்ள அரசியல் சூழ்நிலையில் இந்த அரசு இராணுவ ஆட்சியினை நடத்தி வருகின்றது.

போரில் இடம்பெயர்ந்த மக்கள் மீள் குடியேற்றப்பட்ட வேண்டிய நிலையில் அவர்களுடைய காணிகள் அபகரிக்கப்படுகின்றது.

வடக்கில் மட்டுமல்லாது கிழக்கிலும் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக துன்பங்களினையும் சோகக் கதைகளையும் சுமந்த வண்ணமே உள்ளனர்.

இவர்கள் வாழ்வில் விடியலினை பெறவாவது நாம் ஒன்றுபட்டு போராட வேண்டும். போராடுவோம் என்றார் அவர். (அ-4)

# 2009 இல் ஜெயா என்ன சொன்னார் இன்று என்னத்தை சொல்கிறார்?

## கலைஞர் கருணாநிதி அறிக்கை

ஈழப்பிரச்சினையில் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா நாடகமாடுகிறார் என தி.மு.க. தலைவர் கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளார். இது தொடர்பாக நேற்று முன்தினம் அவர் வெளியிட்டுள்ள அறிக்கை,


கடந்த ஆண்டுநடைபெற்றஐ.நாவின்மனித உரிமைக் குழுக்கூட்டத்தில் இலங்கை க்கு எதிராக அமெரிக்கா தீர்மானம் கொண்டு வந்தது.

அப்போது அந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக மத்திய அரசு வாக்களிக்க வேண்டுமென்று பிரதமரிடம் தான் (முதல்வர் ஜெயலலிதா) வலியுறுத்தியதாகவும் முதலில் அதை ஆதரிப்பது பற்றி எதுவும் தெரிவிக்காத இந்திய அரசாங்கம் தனது தொடர் வலியுறுத்தலால் ஆதரித்தது என்று பேரவையில் முதல்வர் கூறியுள்ளார்.

ஆனால் இதே முதல்வர்தான் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை உடனடியாக இலங்கை அரசு கைது செய்து இந்திய அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என்று பேரவையில் வலியுறுத்தினார்.

அதைப்போல 17.01.2009 அன்று ஜெயலலிதா விடுத்த அறிக்கையில் இலங்கைத் தமிழர்களைக் கொல்ல வேண்டுமென்று இலங்கை இராணுவம் எண்ணவில்லை. ஒரு யுத்தம்-ஒரு போர் நடக்கும் போது அப்பாவி மக்கள் கொல்லப்படுவது சகஜம்தான் என்றும் குறிப்பிட்டார்.

இதையெல்லாம் ஈழத் தமிழர்கள் மறந்திருப்பர் என்று அவர்களுக்கு ஆதரவாக இருப்பது போல முதல்வர் ஜெயலலிதா நாடகமாடுகிறார் என்று கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளார். (அ-2)






யா/ஸ்கந்தவரோதயா ஆரம்ப பாடசாலையின் இல்லமெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையினை பார்வையிடுவதையும் மாணவர்கள் அணி நடையில் செல்வதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாட்டின் அபிவிருத்திக்காக 14 இலட்சம் அரசாங்க ஊழியர்கள் பணிபுரிகின்றனர்

## ஜனாதிபதி பெருமிதம்

(கொழும்பு)

அரசதுறையில் 14 இலட்சம் பேருக்கு சம்பளம், இதர கொடுப்பனவுகளை அரசாங்கம் வழங்கி வருகின்ற போதும் நாட்டின் அபிவிருத்தியைத் தடையின்றி முன்னெடுத்து வருவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தபால் துறைக்கு புதிதாக ஆயிரத்து 86 அதிகாரிகளை நியமிக்கும் நிகழ்வு அலரி மாளிகையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

வரலாற்றில் முன்னொரு போதும் இல்லாதவாறு தபால் துறை முன்னேற்றத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தபால் துறைக்கு முன்னொரு போதும் இல்லாதவகையில் பெருந்தொகை நிதியை அரசாங்கம் செலவிட்டு வருகின்றது.

கடந்த வரவு செலவுத்திட்டத்தில் 600 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் புதிதாக தற்போது இணைத்துக் கொள்ளப்படுகின்றனர்.

நாட்டில் பயங்கரவாத யுத்தம் உக்கிரமாக இருந்த காலத்திலும் தபால் துறை பின்னடையவில்லை. தபாலகங்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்ட யுகம் ஒன்று இருந்தது. மீள அந்த யுகம் வராது. அதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

அரச சேவையை இல்லாதொழிக்க முற்பட்ட யுகத்தைப் போலல்லாது நாம் அரச துறையை முன்னேற்றி 14 இலட்சம் வரை அரச உத்தியோகத்தர் தொகையை அதிகரித்துள்ளோம். மேலும் 53 ஆயிரம் பட்டதாரிகளை இக்காலங்களில் இணைத்துக் கொண்டுள்ளோம்.

அவர்களுக்கான சம்பளம், ஏனைய கொடுப்பனவுகள் என பாரிய நிதியினை அரசாங்கம் செலவிட்டு வருகின்றது.

இத்தகைய சுமைகள் இருந்த போதும் நாட்டின் அபிவிருத்தியை நாம் ஒருபோதும் நிறுத்தவில்லை. வடக்கு, கிழக்கு மற்றும் சகல பகுதிகளிலும் அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. திறைசேரி மூலமே இவற்றுக்கான நிதி ஒதுக்கப்படுகின்றது. இதனைக் கருத்திற் கொண்டு அரச அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் மக்கள் சேவையை வழங்க வேண்டும்.

சகல துறைகளிலும் ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில் நுட்பம் உட்புகும் காலம் இது. இன்று புதிய நியமனம் பெறும் இளையோர் தமது அறிவை தபால் துறை பதவியோடு மட்டுப்படுத்திக் கொள்ளக்கூடாது. அறிவைப் பல்வேறு துறைகளுக்குமாக பெருக்கிக்கொள்ள வேண்டியது அவசியம் என்றார். (அ-2)

# மாலைதீவு நிலைமைகளை ஆராய்ந்தார் ஜனாதிபதி

மாலைதீவு சமகால நிலைமைகள் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் வாஹிட் ஹசனுடன் தொலைபேசியில் உரையாடியுள்ளதாக அரசாங்கத்தின் ஊடகப் பிரிவு தகவலை வெளியிட்டுள்ளது. மாலைதீவில் கடந்த காலங்களில் அரசியல் நெருக்கடிகள் தோற்றியிருந்தன.

அதிகாரத்தில் இருந்து வீழ்த்தப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஜீட் தற்போது மாலே நகரில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரகத்தில் தஞ்சம் புகுந்துள்ளார். இருந்த போதும், முன்னாள் ஜனாதிபதி நஜீட்டை கைது செய்யும் எண்ணம் தமக்கில்லை என்று வாஹிட்டின் அரசாங்கம் தெரிவித்துள்ளது. (அ-2)

# ஜெனீவா மனிதஉரிமை சபையில் ஏழு உபமாநாடுகள் இடம்பெறும்

(கொழும்பு)

ஜெனீவா-ஐ.நா மனித உரிமைச்சபையில் இம்முறை இலங்கை தொடர்பில் ஏழு உப மாநாடுகள் இடம்பெற இருப்பதாக தெரிய வருகின்றது.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் உட்பட பல தமிழர் அமைப்புகளும் பல சர்வதேச மனித உரிமை நிறுவனங்களும் இந்த உபமாநாடுகளை ஏற்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை தொடர்பில் அமெரிக்கா இன்னுமொரு பிரேரணையொன்றினை சமர்ப்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் இலங்கையை மையப்படுத்திய அனைவரது கவனமும் ஜெனீவாவினை நோக்கி திரும்பியுள்ளது.

புலம்பெயர் தமிழர் அரசியல் சக்திகளும் இலங்கை அரசுக்கு அழுத்தத்தினை கொடுப்பதற்கான தங்களது செயற்பாடுகளை ஜெனீவாவினை நோக்கி தீவிரமாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# புதுமுறிப்பு குளத்தின் கீழ் 498 ஏக்கரில் சிறுபோகம்

(சிவநகர்)

புதுமுறிப்பு குள பகுதியில் பங்குனி மாதமளவில் 498 ஏக்கர் சிறுபோக நெற்செய்கை ஆரம்பிக்கப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புதுமுறிப்புக்குளத்தின் கீழ் இவ் வருடத்திற்கான சிறுபோகப் பயிர்ச் செய்கை குறித்த ஆலோசனைக் கூட்டம் கடந்த 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கரைச்சி உதவி அரச அதிபர் கோ.ஞானேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற போதே மேற்படி முடிவு எட்டப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

காலபோக நெல் அறுவடை செய்வதில் விவசாயிகள் மிகவும் சிரமத்தை எதிர்கொள்வதாகவும் இருப்பினும் குளம் மற்றும் வாய்க்கால் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியான பின்னரே சிறுபோக பயிர்ச் செய்கைக்கான கால அட்டவணையைச் செயற்படுத்த வேண்டிய அவசியம் உள்ளதாக கருத்து தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை குளத்தின் தற்போதைய நிலை மற்றும் காணிகளின் விதைப்பிற்கான ஒதுக்கீடுகள் தொடர்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் விளக்கமளித்ததோடு ஒதுக்கப்பட்டுள்ள காணிகளினதும் கடைப்பிடிக்க வேண்டிய கால அட்டவணையும் தெரிவிக்கப்பட்டது.

இதன்படி புதுமுறிப்பு மத்திய வகுப்பு 20 காணிகளுக்கு தலா 6 ஏக்கர் வீதமும் கீழ் மத்திய வகுப்பின் 18 காணிகளுக்கு தலா 3 ஏக்கர் வீதமும் ஜெயந்தி நகரின் 124 காணிகளுக்கும் சிவநகரின் 236 காணிகளுக்கும் தலா ஒரு ஏக்கர் வீதமும் மொத்தமாக 498 ஏக்கர் சிறுபோகச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதேவேளை குளத்தின் அபிவிருத்திக்கான வேலைகள் முழுமையாக பூர்த்தி செய்வதற்கு ஏற்றதாக பங்குனி மாதத்திலேயே பயிர்ச் செய்கையை மேற்கொள்ளவும் முடிவெடுக்கப்பட்டது. (அ-25)




★ *1229-* புனித உரோம் பேரரசின் மன்னன் இரண்டாம் பிரெடெரிக் எகிப்திய மன்னன் அல்-கமீல் உடன் 10 ஆண்டு போர் நிறுத்தத்துக்கு உடன்பட்டான்.

★ *1478-* லண்டனின் நான்காம் எட்வேர்ட்டிற்கு எதிராக சதி முயற்சியில் இறங்கியதற்காக அவனது சகோதரன் ஜோர்ஜ் (கிளாரன்ஸ் இளவரசன்) தூக்கிலிடப்பட்டான்.

★ *1797-* ட்ரினிடாட் பிரித்தானியர்களிடம் வீழ்ந்தது.

★ *1832-* இலங்கையின் பல இடங்களில் ஓர் அசாதாரண எரிமீன் (meteor) தோன்றியது.

★ *1861-* அலபாமாவில் ஜெபர்சன் டேவிஸ் அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்புக்கு தலைவரானார்.

★ *1865-* அமெரிக்க உள்நாட்டுப் போர்: வில்லியம் ஷேர்மன் தலைமையிலான கூட்டுப் படைகள் தென் கரோலினாவின் மாநில அவையைத் தீயிட்டுக் கொளுத்தினர்.

★ *1911-* முதலாவது அதிகாரபூர்வமான விமான அஞ்சல் சேவை இந்தியாவில் அலகாபாத்தில் ஆரம்பமானது.

★ *1929-* முதற்தடவையாக ஒஸ்கார் விருது அறிவிக்கப்பட்டது.

★ *1930-* கிளைட் டொம்பா ஜனவரியில் எடுத்த புகைப்படங்களை ஆராய்கையில் புளூட்டோவைக் கண்டுபிடித்தார்.

★ *1932-* சீனக் குடியரசிடம் இருந்து மன்சூகுவோவின் விடுதலையை ஜப்பான் மன்னர் அறிவித்தார்.

★ *1957-* கென்யாவின் போராளித் தலைவர் டெடான் கிமாத்தி பிரித்தானிய குடியேற்ற அரசினால் தூக்கிலிடப்பட்டார்.

★ *1959-* நேபாளத்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

★ *1965-* காம்பியா ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை அடைந்தது.

★ *1979-* தெற்கு அல்ஜீரியாவில் சகாரா பாலைவனத்தில் முதற் தடவையாக பனிமழை பெய்தது.

★ *1991-* லண்டனில் தொடரூந்து நிலையங்களில் இரண்டு குண்டுகள் வெடித்தன.

**பிறப்புக்கள்**

★ *1745-* வோல்ட்டா, இத்தாலிய இயற்பியலாளர் *(இ.1827)*

★ *1836-* ஸ்ரீராமகிருஷ்ணர், இந்தியாவின் ஆன்மீகவாதி *(இ.1886)*

★ *1860-* மா. சிங்காரவேலர், இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தந்தை *(இ.1946)*

★ *1926-* வ.ஐ.சுப்பிரமணியம், மொழியியல் அறிஞர் *(இ.2009)*

★ *1931-* டொனி மொறிசன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க எழுத்தாளர்.

**இறப்புக்கள்**

★ *1546-* மாட்டின் லூதர், ஜேர்மனிய சமய சீர்திருத்தவாதி *(பி.1483)*

★ *1564-* மைக்கலாஞ்சலோ புவோனரோட்டி, இத்தாலிய ஓவியர் *(பி.1475)*

★ *1967-* றொபேட் ஒப்பன்ஹெய்மர், அணுகுண்டைக் கண்டுபிடித்தவர் *(பி.1904)*



**ஸ்ரீ ராமகிருஷ்ணர்** பரமஹம்சர் எனப் பரவலாக அறியப்படும் கதாதர் சாட்டர்ஜி 19 ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் தலைசிறந்த ஆன்மீகவாதிகளுள் ஒருவர். இவர் விவேகானந்தரின் குருவாவார். அனைத்து மதங்களும் ஒரே இறைவனை அடையும் வெவ்வேறு வழிகளே என்பதை தன் அனுபவங்கள் மூலம் உணர்ந்து அதையே வலியுறுத்தியவர்.

**இளமை**

இவர் கதாதர், குதிராம்-சந்திரமணி தம்பதியினருக்கு நான்காவது குழந்தையாக மேற்கு வங்காளத்திலுள்ள கமார்புகூர் எனும் சிறிய கிராமத்தில் பிறந்தார்.

சிறு வயதில் ஆடல் பாடல்களிலும் தெய்வங்களின் படங்கள் வரைவதிலும் களிமண்ணில் சிலைகள் செய்வதிலும் ஆர்வமாயிருந்த கதாதருக்கு கணிதம் பிடிக்காத பாடமாய் இருந்தது.

இவர் இயற்கையை இரசிப்பதிலும் பக்திப் பாடல்கள் பாடுவதிலும் புராணநண்பர்களுடன் விளையாடுவதிலும் பொழுதைக் கழித்தார். சிறு வயதிலேயே ஆன்மீக விடயங்களில் ஆழ்ந்த ஞானம் உடையவராயிருந்தார். ராமகிருஷ்ணரின் கடைசி நாட்களில் தொண்டைப் புற்றுநோய் அவரைத் தாக்கியது. அவருடைய சீடர்கள் அவரை கொல்கத்தாவின் அருகில் உள்ள காசிப்பூர் என்ற இடத்தில் வைத்து வைத்தியம் செய்தனர். ராமகிருஷ்ணரின் உயிர், 1889 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி அவர் உடலை விட்டு பிரிந்தது.


**175 ஆவது ஜெயந்தி விழா**

ராமகிருஷ்ணரின் 175 ஆவது ஜெயந்தி விழா, 2012 ஆம் ஆண்டு பெப்ரவரி 22 முதல் பெப்ரவரி 26 வரை சென்னை மயிலாப்பூரில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் கொண்டாடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ராஜீவ் காந்தி கொலை வழக்கு கைதிகளில் ஒருவரான...



தூக்குத்தண்டனை கைதிகளின் கருணை மனுக்கள் குடியரசுத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படுவது தொடர்பாக பல சர்ச்சைகள் இன்று அடிபடுகின்றன. சில கருணை மனுக்கள் குடியரசுத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதற்கான பல காரணங்கள் உள்ளன.

அப்படியான காரணங்களில் ஒன்று ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன் விடயத்திலும் உண்டு.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன் எழுதிய நீண்ட விளக்கக் கடிதத்தை இங்கு தருகிறோம்.

.... பின்னர் மல்லிகை அலுவலகம் அழைத்து வந்த பின்பு காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் இரகோத்தமன் என்னிடம் நீதிமன்ற வளாகத்தின் வெளியே கூடியிருந்த கூட்டம் யார்? 200, 300 பேர் இருந்தனரே அவர்கள் யார்? நீ வரச் சொன்னாயா? என்றார்.

எனக்குத் தெரியாது. எனது உறவினர்களாக இருக்கலாம். என்னால் சரியாகப் பார்க்க அவகாசமில்லாததால் கூற முடியாது என்று சொன்னேன். மேலும் கடந்த ஒருமாத காலத்திற்கும் மேலாக என்னை உங்கள் காவலில் வைத்திருந்திருக்கும்போது நான் எவ்வாறு வரச் சொல்ல முடியும் என்று கேட்டேன். அதற்கு அவர் ஆத்திரமுற்று எனது கன்னத்தில் அறைந்தார். பக்கத்தில் இருந்த ஆய்வாளர்களிடம் என்னை அடிக்குமாறு கூறினார். எனது உறவினர்கள் எனக்கு ஆதரவாக வந்தது கூட பொறுக்காமல் துன்புறுத்தினார்.

மூன்றாம் முறையாக நாங்கள் அடைக்கப்பட்டு துன்புறுத்தப்பட்ட பூவிருந்தவல்லி தனி கிளைச் சிறையிலேயே நீதிமன்ற அமர்வு நடந்தது. அந்தக் கிளைச் சிறை வளாகம் சி.பி.ஐ. துறையினரால் தத்தெடுக்கப்பட்டு எங்களை அடைத்து வைத்துத் துன்புறுத்தப் பயன்படுத்தப்பட்டது. என்னை மல்லிகையிலிருந்து 03.08.1991 அன்று கொண்டு சென்று பூவிருந்தவல்லி கிளைச் சிறையில் அடைத்தனர். அன்று காவற்துறை துணை கண்காணிப்பாளர் இராமகிருஷ்ணன் தான் பொறுப்பிலிருந்தார். தினமும் அதிகாரிகள் முறைவைத்து துன்புறுத்துவர்.

அங்கிருந்த அலுவலகத்தில் (அப்போது அது சித்திரவதைக் கூடம்) வைத்துதான் சாட்சி 52 காவற்துறை கண்காணிப்பாளர் தியாகராசன் என்னைத் துன்புறுத்தி எழுதிய பல பக்கங்களில் பல நாட்களைக் குறிப்பிட்டுக் கட்டாய கையெழுத்துக்கள் பெற்றார்.

அப்போது உடன் சில ஆய்வாளர்களும் துன்புறுத்தினர். அதில் என்ன இருக்கிறது எனப் படித்தறிய அனுமதிக்கவில்லை. கையெழுத்திட்டால் என்னை விட்டுவிடுவதாகக் கூறினர். எனக்கும் தடா சட்டம் தெரியாது. எனக்கு மட்டுமன்று, தமிழகத்திற்கே அன்று தடா சட்டம் புதிதானது. இந்த நிலையில் துன்புறுத்தல் தாங்காமல் எனது உயிரைக் காத்துக் கொள்ளும் பொருட்டு அவர்கள் கூறியபடி கையொப்பமிட்டேன்.

ஆனால், பரிதாபம் என்னவெனில், அவருக்கும் தடா பற்றி ஏதும் தெரியாது. சாதாரண சட்டமுறைகளை அறிந்தவர் என்ற ரீதியிலேயே அவர் கூற்று இருந்தது. எந்த அறையில் என்னைத் துன்புறுத்திக் கையெழுத்துப் பெற்றனரோ அதே அறையில் 16.08.1991 அன்று நீதிபதி அமர்வு நடத்தினார்.

முழுக்க முழுக்க சி.பி.ஐ.யினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதி அது. நீதிபதி முன்பு ஆஜர்படுத்துமுன் காவல் துறை துண்ண கண்காணிப் பாளர் இரகோத்தமன் மற்றும் அதிகாரிகள் இவ்வாறு என்னை எச்சரித்தனர்: நீ ஏதும் துன்புறுத்தியது பற்றிக் கூறினால் மீண்டும் உன்னைக் கொடுமைப் படுத்துவோம், சுட்டுக் கொன்றுவிட்டு, தப்பி ஓடியதால் சுட்டோம் என்றுகூட கணக்குக் காட்டிவிடுவோம் என்று மிரட்டினர்.

இவ்வாறான மிரட்டல்களுக்கு அஞ்சியும் கிளைச் சிறை இருந்த சூழலும் அச்சமும் சட்ட அறியாமையும் எனது வாயை அடைத்துவிட்டன. அன்றே நானும் ராபர்ட் பயஸும் செங்கல்பட்டு கிளைச் சிறையில் அடைக்கப்பட்டோம். அங்கு தண்டனைச் சிறைவாசிகள் அணியும் வெள்ளுடை தரப்பட்டது. வேறு எந்த உடையும் பொருட்களும் அனுமதிக்கப்படவில்லை. ஓலைப்பாயும் தலையணையும் போர்வையும் மட்டுமே தரப்பட்டன.

இவை அனைத்தும் ஒரு மரண தண்டனை சிறையாளிக்கான நடத்தை விதிகள் என்பதை பின்னரே அறிந்தோம். அப்போது எமக்கு சிறை விதிகள் தெரியாது. சி.பி.ஐ. அதிகாரியான காவற்றுறை துணைக் கண்காணிப்பாளர் இரகோத்தமன் ஒவ்வொரு விசாரணை சிறைவாசியைக்கொண்டு வரும் போதும் எமது அடைப்பிற்கு வந்து வழக்கு பற்றி விசாரணை மேற்கொள்வார். அப்போது எமக்கு அவ்வாறு விசாரிக்க பொலிஸ் அதிகாரிக்கு அதிகாரமில்லை என்பது தெரியாது. எனவே, சி.பி.ஐயின் காவலில் இருப்பது போன்ற உணர்வு இருந்தது. சிறை என்ற உணர்வே இல்லை.

இந்தக் கொடுமைகள் கொடுத்த அதிர்ச்சியிலிருந்து மீண்டு வருவதற்கே நீண்ட நாட்கள் பிடித்தன. அவ்வாறு மீண்டு தடா சட்டம் பற்றி வாக்குமூலங்கள் பற்றி அறிய நேர்ந்த போது நான் கையெழுத்திட்ட முறையை எனக்கு நேர்ந்த துன்புறுத்தல்களை விளக்கி 11.02.1992 திகதியிட்டு மனு கொடுத்து அது கு.ப. மனு எண் 137/92 என தடா நீதிமன்றத்தில் விசாரிக்கப் பட்டுள்ளது.


குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு எமக்கு ஒப்புதல் வாக்குமூலங்கள் என்பனவற்றின் பிரதிகள் தரப் பட்டவுடனே மனு ஒன்றைச் சமர்ப்பித்தேன். அதிலும் துன்புறுத்திக் கையெழுத்துப் பெற்ற விபரத்தையும் எனவே, அவற்றை ஏற்கக் கூடாது எனக் கோரியும் கொடுத்தேன். இது 26.08.1992 ஆம் திகதியில் என்னால் தரப்பட்டு கு.ப. மனு எண் 582/92 என தடா நீதிமன்றத்தால் விசாரிக்கப் பட்டுள்ளது.

இந்த இடத்தில் ஒரு வருத்தத்திற்குரிய விடயத்தை குறிப்பிட விரும்புகிறேன்: உச்சநீதிமன்ற நீதியரசர் வாத்வா அவர்கள் பக்கம் 87 இல்- ஏதேனும் வலுவந்தம், அச்சுறுத்தல் அல்லது எவ்வகையிலும் மூன்றாம் தரமுறையை பயன்படுத்தியதால்தான் அல்லது எதிரியின் உளவியலை பாதிக்கச் செய்ததால்தான் ஒப்புதல் வாக்குமூலம் தரப்பட்டது என்று வழக்கை விசாரித்த நீதிமன்றத்தின் முன் முறையீடு ஏதும் செய்யப்படவில்லை என்று தெள்ளத் தெளிவாகவே நாம் புகார் கூறவில்லை என்று கூறுகிறார்.

உண்மையில் 11.02.1992 மற்றும் 26.08.1992 ஆகிய திகதிகளில் மனுக்களாகவும் சாட்சி 52 காவற்றுறை கண்காணிப்பாளர் தியாகராசனிடம் குறுக்கு விசாரணை செய்யும்போதும் 313 குற்றவியல் நடைமுறைச் சட்டம் கேள்விகளின் போதும் எவ்வாறு துன்புறுத்தி கட்டாயப்படுத்தி கையெழுத்துப் பெற்றனர் என்பதைக் கூறியுள்ள நிலையில் நீதியரசர் இவற்றைக் கவனத்தில் கொள்ளாமை எமக்கு மிகுந்த வேதனை தருகிறது.

01.09.1991 அன்று எனது மூத்த சகோதரியின் திருமணம் நடந்தது. அதில் கலந்துகொள்ள என்னை அனுமதிக்க வேண்டும் எனக் கூறி சிறப்பு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தேன். ஒரே சகோதரனான எனது தேவை மிகுதியாக இருந்தும் அனுமதி மறுக்கப்பட்டது. வேதனைகளை சுமந்துதான் அவரது திருமணம் நடந்தது.

எம்மைப் பொறுத்தவரையில் சிறையில் நாம் சாதாரண சிறைவாசிகளாக பார்க்கப்படவில்லை. எமது சிறை நடவடிக்கைகள் எதுவும் கணக்கிலெடுக்காமல் வழக்கில் இறந்துபோன நபர்களின் சமூக அந்தஸ்து மட்டுமே கணக்கிலெடுக்கப்பட்டது. எமக்காக புதிய விதிகள் இயற்றப்பட்டன.



உதாரணமாக இன்றளவும் நாம் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளது, ஒரு மரண தண்டனை சிறை வாசியைக்கூட தனிமைப்படுத்தி விடக்கூடாது என்று உச்சநீதிமன்ற ஆணைகள் இருந்தும்கூட ஏற்கனவே தனிமைச் சிறையில் இருந்த ஒரே காரணத்தினால் மரண தண்டனை இரத்து செய்யப்பட முன்னுதாரணங்கள் உள்ள நிலையிலும் நாம் மட்டும் கடந்த எட்டரை ஆண்டுகளாக தனி அடைப்பில் தனிமைச் சிறையில் வதைக்கப்படுகிறோம்.


(தொடரும்)

# பேரறிவாளனின் கடிதம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசி மாத இராசி பலன்கள்

# 13.02.2013 - 13.03.2013



## கும்பம்

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

**அர்ச்சனைகள் செய்வதன் மூலம் பிரச்சினைகளிலிருந்து விடுபட இயலும்! எதையும் அலசி ஆராய்ந்து பார்த்து அதன் பின்னரே ஒப்புக் கொள்ளும் கும்ப இராசி நேயர்களே!**

மாசி மாதக் கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே உங்கள் இராசிநாதன் சனி வக்ரம் பெறுகிறார். இப்பொழுதுதான் குரு வக்ர, நிவர்த்தியானார் என்று நினைத்துக் கொண்டிருந்த நேரத்தில் சனி வக்ர இயக்கத்தை மீண்டும் தொடர்ந்து விட்டார். எனவே, ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

அடிக்கடி உங்களுக்கோ, உங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கோ தொடர்ந்து வரும் தொல்லைகளால் மனநிம்மதி குறைவு ஏற்படலாம். மாற்றுக்கருத்துடையோரின் எண்ணிக்கையைக் கூட்டிக்கொள்ளாமல் பார்த்துக் கொள்வது உங்கள் புத்திசாலித்தனமாகும். குரு பார்வை 10 ஆம் இடத்தில் பதிவதால் மூடிக் கிடந்த தொழிலுக்கு திறப்புவிழா நடத்துவீர்கள். முன்னேற்றப் பாதையில் இருந்த இடையூறுகள் அகலும்.

கேது 3 ஆம் இடத்தில் சஞ்சரிக்கின்ற பொழுது சகோதர வழியில் சங்கடம் தரும் செய்தியொன்று வந்து சேரலாம். அதை நிவர்த்தி செய்ய ஒரு தொகையை செலவிடும் சூழ்நிலையும் உருவாகும். மாதக் கடைசியில் செவ்வாய், சனியின் பார்வையும் இருப்பதால் கூடுதல் விழிப்புணர்ச்சியோடு செயற்பட்டால் தான் கொடுக்கல்- வாங்கல்களில் ஏமாற்றங்களை சந்திக்காதிருக்க இயலும். குடும்பத்திலும் பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்கும்.

பிரச்சினைகள் அதிகம் வந்தால் அவை விலக அர்ச்சனைகள் செய்ய வேண்டியது அவசியமாகும். குறிப்பாக ஆஞ்சநேயருக்கு அர்ச்சனை செய்து அதன் அருளுக்கு பாத்திரமானால் வாஞ்சையுடன் பழகியவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். வாகன மாற்றம் செய்ய உகந்த நேரமிது.

காண்போர் வியக்கும் வண்ணம் காரியங்களை செய்ய வேண்டும் என்று நினைக்கும் நீங்கள் இம்மாதத்தில் சற்று பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். சனி வக்ர நிவர்த்தியான பின்னர் இனிக்கும் காரியங்கள் ஏராளமாக நடைபெறும்.

**கும்பச் சுக்கிரனின் சஞ்சாரம்!**

பெப்ரவரி 22 ஆம் திகதி உங்கள் இராசியிலேயே சுக்கிரன் சஞ்சரிக்கப் போகிறார். இது யோகம்தான். 4,9 இற்கு அதிபதி உங்கள் இராசியில் சஞ்சரிக்கும் பொழுது பயணங்களால் பலன் கிடைக்கும். பங்காளி பகை மாறும். அரசு வழி சலுகைகள் எதிர்பார்த்தபடி வந்து சேரும். ஆதாயம் தரும் விதத்தில் உங்கள் ஒவ்வொரு செயற்பாடுகளும் அமைந்திருக்கும்.

**மீன செவ்வாயின் சஞ்சாரம்!**

மார்ச் 2 ஆம் திகதி மீன இராசியில் சகாய ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியான செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். இது நன்மை தான். தன ஸ்தானம் வலுவடைகிறது. சகோதர ஒத்துழைப்போடு பல நல்ல காரியங்களை செய்து முடிப்பீர்கள். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். கிளைத் தொழில்கள் தொடங்கும் வாய்ப்பு ஒரு சிலருக்கு உருவாகும். இடம், பூமியின் விற்பனையில் எதிர்பார்த்ததை விட அதிக இலாபம் கிடைக்கும்.

**செவ்வாய், சனி பார்க்கும் காலம்!**

பகைக் கிரகங்களின் பார்வை பதியும் நேரத்தில் கூடுதல் விழிப்புணர்ச்சியுடன் நாம் செயற்படுவதே நல்லது. அப்பொழுதுதான் சிக்கல்களிலிருந்து ஓரளவாவது நாம் விடுபட இயலும். அந்த அடிப்படையில் மார்ச் 2 ஆம் திகதி முதல் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் செவ்வாயின் பார்வை 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் வக்ர சனியின் மீது பதிகிறது. எனவே, பயணங்களைத் தள்ளி வைக்க நேரிடும். பங்காளிப் பகைகளை சந்திக்க வேண்டிய சூழ்நிலை அமையும். பூர்வீக சொத்துக்களைப் பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்படலாம். இக்காலத்தில் ஸ்தல வழிபாடுகளை தேர்ந்தெடுத்து மேற்கொள்வது நல்லது.

இம்மாதம் வடக்கு நோக்கிய அம்மன் வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.

இம்மாதம் உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு கிடைக்கும் மாதமாகும். உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். வீடு வாங்கும் யோகம் அல்லது கட்டும் யோகத்தை வரவழைத்துக்கொடுக்கும் விதத்தில் கிரகங்கள் சாதகமாக இருக்கின்றன. மாதத் தொடக்கத்தில் தொழிலில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். மாற்றினத்தவர்கள் மகிழ்ச்சிக்குரிய தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர். கணவன்- மனைவிக்குள் கனிவு கூடும். குடும்ப பெரியவர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். எல்லோர் மனதிலும் இடம் பிடிக்கும் சூழ்நிலை உருவாகும். செவ்வாய் சனி பார்வை காலத்தில் உடன்பிறப்புகளை அனுசரித்து செல்வது நல்லது. வேலவன் வழிபாடு வியக்கும் விதத்தில் வாழ்வை அமைத்துக் கொடுக்கும்.

### எல்லோர் மனதிலும் இடம்பிடிக்கும் சூழ்நிலை உருவாகும் குடும்பப் பெரியவர் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர்

## சிவல்புரி சிங்காரம்



## மீனம்

**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

**கவலைகள் தீர கடவுள் வழிபாடு தேவை!**

**விருந்தினர்களை வியக்கும் விதம் உபசரிக்கும் மீன இராசி நேயர்களே!**

மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பாக்கும் பொழுது அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் ஒருபுறமும் விரய ஸ்தானத்தில் சூரிய, செவ்வாய், புதன் சேர்க்கையும் இருப்பதால் எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்து செய்வதே நல்லது. அருகில் இருப்பவர்களிடம் அன்பு காட்டுவது, அனுசரித்து செல்வதன் மூலமே இன்பங்களை வரவழைத்துக் கொள்ள முடியும்.

தொழில் ஸ்தானாதிபதியாகவும் குரு விளங்குகிறார். அவர் இப்பொழுது வக்ர நிவர்த்தியாகிவிட்டார். எனவே, தொழிலை பொறுத்தவரை சீராகவே இருக்கும். வருமானம் தொடர்ந்து வந்து கொண்டே இருந்தாலும் விரயங்கள் அடிக்கடி எதிர்பாராத விதத்தில் வந்து சேரும். எனவே, வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களையும் அத்தியாவசியப் பொருட்களையும் வாங்குவது நல்லது. மின்சாதனப் பொருட்களை கையாளுவதில் கவனம் தேவை.

மிக சிக்கலான பிரச்சினைகளைக் கூட எளிதில் தீர்த்து வைக்கும் உங்களுக்கு இந்த மாதத்தில் புதுப் புது பிரச்சினைகள் கூட தலைதூக்கலாம். இருப்பினும் இராசிநாதன் குரு என்பதால் மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும். மன மகிழ்ச்சி தினமும் கிடைக்கவும் மக்கள் செல்வாக்கைத் தக்க வைத்துக் கொள்ளவும் வாரந்தோறும் விரதமிருந்து குரு வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

முல்லைப் பூமாலை அணிவித்து மஞ்சள் வஸ்திரம் சாற்றி அர்ச்சனைகள் செய்து குரு தட்சிணாமூர்த்தியை வழிபட்டால் அனைத்து காரியங்களிலும் இருந்த தடைகள் அகலும். அதுமட்டுமல்ல சனிக்கிழமை தோறும் விநாயக் பெருமானையும் அனுமனையும் சனீஸ்வரரையும் விடாது வழிபட்டு வருவதன் மூலம் அஷ்டமத்துச் சனியின் கெடுபிடியிலிருந்து தப்ப இயலும். பொதுவாக வாக்கு ஸ்தானத்தில் கேது இருப்பதால் யாருக்கும் வாக்குக் கொடுக்கமுன் யோசிப்பது நல்லது. அப்பொழுது தான் கொடுத்த வாக்கை காப்பாற்ற இயலும்.

மாதத்தின் முதல் பகுதியில் வருமானம் திருப்திகரமாக இருக்கும். கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும். மாதத்தின் மையப் பகுதியில் சொத்துக்கள் வாங்கும் அமைப்பும் சொந்த பந்தங்களின் பாராட்டும் கிடைக்கும். மாதத்தின் கடைசிப் பகுதியில் கொஞ்சம் கூடுதல் கவனத்துடன் செயற்படவேண்டிய நேரமாகும்.

**கும்பச் சுக்கிரனின் சஞ்சாரம்!**

பெப்ரவரி 22 ஆம் திகதி கும்ப இராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக சில நல்ல பலன்களும் உங்களுக்கு வந்து சேரலாம். பெண்வழி ஒத்துழைப்புகள் கிடைக்கும். பிரச்சினைகளிலிருந்து விடுபட இயலும். மண், பூமி சம்பந்தப்பட்ட வகையில் என்றைக்கோ வாங்கிப்போட்ட இடம் இப்பொழுது நல்ல விலைக்கு போகும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள்.

**மீன செவ்வாயின் சஞ்சாரம்!**

மார்ச் 2 ஆம் திகதி மீன இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். 2,9 இற்கு அதிபதியான செவ்வாய் இராசியில் சஞ்சரிக்கும் பொழுது பணப்புழக்கம் அதிகரிக்கும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். சகோதர ஒத்துழைப்பு அதிகரிக்கும். சச்சரவுகள் மாறி சமாதானத்தை நோக்கிச் செல்ல முன்வருவீர்கள்.

**செவ்வாய், சனி பார்க்கும் காலம்!**

மார்ச் 2 ஆம் திகதி முதல் செவ்வாயின் பார்வை சனியின் மீது பதிகிறது. உங்கள் இராசியைப் பொறுத்தவரை சனி விரயாதிபதியாகவும் இருப்பதால் இலாபாதிபதியாகவும் இருப்பதால் வரவும் செலவும் சமமாகும். வருமானம் வரும் முன்னதாகவே செலவு காத்திருக்கும். பெரிய முதலீடுகளைச் செய்து கவலையை வரவழைத்துக் கொள்ள வேண்டாம். குடும்பத்தில் ஒருவரை மாற்றி ஒருவருக்கு ஆரோக்கிய பாதிப்புகள் ஏற்பட்டு அகலும். நீண்டதூர பயணங்களை தள்ளி வைப்பது நல்லது. வீடு மாற்றங்கள் நற்பலனை தரும்.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் சனிபகவான் வழிபாட்டை மேற்கொள்வதோடு சர்ப்ப தோஷத்தின் பிடியிலிருந்து விலக சர்ப்ப சாந்தியை செய்து கொள்வது நல்லது.

இம்மாதம் எதையும் நேசித்தும் இறைவனை பூஜித்தும் காரியங்களை செய்தால் வெற்றி கிடைக்கும். மாதத் தொடக்கத்தில் நூதன பொருட் சேர்க்கை உண்டு. மங்கள காரியங்களில் கலந்து கொள்வீர்கள். குல தெய்வ வழிபாட்டில் ஆர்வம் கூடும். மாதத்தின் மையப்பகுதியில் கொடுக்கல்- வாங்கல்கள் சிறப்பாக இருக்கும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். மாதக் கடைசியில் குடும்பச் சுமை கூடும். விரயங்கள் அதிகரிக்கும். வழிபாட்டால் வளர்ச்சியில் உள்ள தடைகளை அகற்றிக்கொள்வீர்கள். 2இல் கேது, 8 இல் இராகு இருப்பதால் கால சர்ப்ப தோஷ பரிகாரம் செய்தால் கனிவான வாழ்க்கை அமையும்.

(முற்றும்)

### இராசிநாதன் குரு என்பதால் மலைபோல வந்த துயர் பனிபோல் விலகும்; மங்கள காரியங்கள் நிகழும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம்பரிய முறையில் உலோக படைப்புக்களை உருவாக்கி வரும் கெங்காதரன் ஆச்சாரியார்



பழைய காலத்து வீடுகளின் வாசல் மிகவும் தாழ்வாகவே காணப்படும். உள்ளே செல்ல வேண்டுமென்றால் குனிந்துதான் செல்ல வேண்டும்.

ஏன் அவ்வாறு எமது முன்னோர்களால் அமைக்கப்பட்டது என ஆராயும்போது சமூகத்தில் ஒரு மனிதன் எவ்வளவுதான் பணம், புகழ், பொருள் என செல்வச் செழிப்புடன் வாழ்ந்தாலும் வீட்டினுள் நுழையும் போது தலை குனிந்தே வரவேண்டும். வாழ்க்கை என்பதை மனிதனுக்கு உணர்த்துவதற்காகவே எமது முன்னோர்கள் அவ்வாறு வீடுகளை அமைத்திருக்கிறார்கள்.

கே.கே.எஸ். வீதியில் ஓர் அற்புத உலோகக் கலைஞரின் வீடு இப்போதும்கூட அந்த பழைமையினை புலப்படுத்தியபடியே காட்சிதருகின்றது.

தனது 15 ஆவது வயதில் உலோகக் கலையினை தனது தந்தையிடம் முறைப்படி கற்றுத்தேர்ந்து நாடு பூராகவும் ஒரு சிறந்த உலோகக் கலைஞராக திகழும் கலாபூஷணம் லெ. கெங்காதரன் ஆச்சாரியார் அவர்கள் இன்று அறுபத்தி ஒன்பது வயதினை காண்கின்றார்.

வெள்ளி, பித்தளை, செப்பு போன்றவற்றை பயன்படுத்தி நுட்பம் மிளிரும் கலைப் பதிப்புக்களை உருவாக்குவதில் வல்லவரான இவரை தெரியாது எனக் கூறுபவர்களே இருக்கமாட்டார்கள். பட்டங்களைச் தேடிச் செல்லாமல் பட்டங்களே தேடி வந்தன எனக்கூறும் அளவிற்கு இவரின் திறமை மிகச் சிறப்புடையதாகும்.

உலோகத் தொழிலதிபர் (UNA), உலோகத் தொழில் விற்பன்னர், உலோகக் கலை மாணி, உலோகத் தொழில் நிபுணர், மரபு கலைச்சுடர், கலாபூஷணம், யாழ்ரத்னா, ஆளுநர் விருது என அவர் பெற்ற பட்டங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம்.

இவரினால் செய்யப்பட்ட கலைநுட்பம் வாய்ந்த கோபுரக் கலசங்கள், வாகனங்கள் என்பன இல்லாத கோயில்களே இல்லை எனும் அளவிற்கு மிகச் சிறப்பான முறையிலே நேர்த்தியாக செய்வதில் வல்லவர்.

**இன்று 68 வயதினை பூர்த்தி செய்யும் உலோகக் கலைஞர் கலாபூஷணம் லெ.கெங்காதரன் ஆச்சாரியார் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

ஓர் இந்துவாக பிறந்திருந்தாலும் கிறிஸ்தவ மதத்தவர்களால் பெரிதும் மதிக்கப்படுகின்றவர். கிறிஸ்தவ தேவாலயப் பொருட்களையும் மிக நுட்பமான முறையிலே வடிப்பதில் கைதேர்ந்தவர். 2001 ஆம் ஆண்டு பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் அவர்களால் அருளாசிச் சான்றிதழைப் பெற்றமையை அவர் இன்னும் ஒரு பாக்கியமாக கருதுகின்றார் என்பது இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டு.

பல விருதுகளையும் பாராட்டுதல்களையும் பெற்ற போதிலும் தனது அரிய கலைப் படைப்புக்களால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் பாராட்டுப் பெற்றுக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

ஒவ்வொரு கலைப்படைப்புக்களையும் ஒரு கலைஞன் உருவாக்கும் போது அக் கலைப்படைப்புடன் ஒன்றித்து அதற்கு உயிர்ப்பு கொடுக்கின்றான். அவ்வாறு மேற்கொள்ளும் போதே அக்கலைப் படைப்பு உண்மையான, உயிரோட்டமான கலைப்படைப் பாக வெளிக் கொணரப்படும்.

இன்றைய காலத்தில் நம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கும் கலாபூஷணம் லெ.கெங்காரதன் ஆச்சாரியார் அவர்களின் கலைப்படைப்புக்களில் உண்மையான, உயிரோட்டமான அந்தப் பண்பினை காணக்கூடியதாக இருக்கின்றது.

இன்று நவீன முறைகளில் பல சாதனங்கள் வந்த போதிலும் பாரம்பரிய முறையிலான கலைப்படைப்புக்கள் இன்னும் உயிர் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றது என்பது அக் கலைஞர்களின் திறமைகளை எடுத்துக் காட்டுகின்றன.

கலைப்படைப்புக்களை உருவாக்கும் புதிய இளம் கலைஞர்கள் உருவாக வேண்டும்.

அடுத்த சந்ததியினருக்கு எமது பண்பாடு, கலாசாரங்களை கையளிக்க இக் கலைப்படைப்புக்கள் வழி சமைக்கும். இன்னும் புதிய புதிய கலைஞர்கள் உருவாக வேண்டும், உருவாக்கப்பட வேண்டும் என புன்னகை மலர்ந்த முகத்துடன் கூறி முடித்தார் அந்த அற்புதக் கலைஞர்.

மனிதன் எவ்வளவு பணம், பொருள், புகழோடு வாழந்தாலும் சமூகத்தில் சாதாரண மனிதனாகவே வாழ வேண்டும் எனும் பொருளை உணர்த்தும் அந்த வீட்டின் வாசல் வழி தலைகுனிந்து விடைபெற்றோம்.

**மாவை.நா.கஜேந்திரன்**

# தனியார் அரைச்சொகுசு பேருந்து சேவையை நிறுத்த தீர்மானம்

## போக்குவரத்துத்துறை அமைச்சர் அதிரடி

(கொழும்பு)

கைத்தொலைபேசிகளில் உரையாடிய வாறு பேருந்தைச் செலுத்துதல், வேகக்கட்டுப்பாட்டை மீறல் மற்றும் குறித்த இலக்கை குறித்த நேரத்திற்குச் சென்றடையாமை ஆகிய வற்றை உடனுக்குடன் கண்டுபிடிக்கும் ஜி.டி.எஸ்.முறைவிரைவில் நடைமுறைக்கு கொண்டு வரப்படவுள்ளதாக தனியார் போக்குவரத்துத் துறை அமைச்சர் சி.பி.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரைச்சொகுசு பேருந்துகளை முற்றாக சேவையிலிருந்து நீக்குவதற்கு தீர்மானித்திருப்பதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

இதன்மூலம் எதிர்காலத்தில் சாதாரண மற்றும் அதிசொகுசு பேருந்துகள் மாத்திரமே சேவையிலீடுபடுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.தூர இடங்களுக்குச் செல்வோர் விரைவில் குறித்த இடத்தை அடைய வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காகவே அரைச் சொகுசு மற்றும் அதிசொகுசு பேருந்துகளை விரும்புகின்றனர். அரைச்சொகுசு எனும் பெயரில் சாதாரண பேருந்து விலையிலும் ஒன்றரை மடங்கு பணம் வசூலிக்கும் பேருந்து உரிமையாளர்கள் யன்னல்களுக்கு திரைச் சீலைகளை மட்டும் போட்டுவிட்டு சொகுசு என்பதன் அர்த்தத்திற்குரிய எந்தவொரு வசதியையும் பெற்றுக்கொடுப்பதில்லை.

இறுதியாக வீதியிலுள்ள தூசி முழுவதும் பேருந்தில் பயணிக்கும் பயணிகள்மீது காணப்படும். பணத்தையும் கொடுத்து பயணிகள் பாரிய சிரமங்களுக்கு முகம்கொடுத்து வருவது குறித்து நிறைய முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

பயணிகளின் வசதியே எமக்கு முக்கியம். ஆகையால் இந்த அரைச்சொகுசு பேருந்துச் சேவையை முற்றுமுழுதாக நிறுத்திவிட தீர்மானித்துவிட்டோம். விரைவில் இதன் அனைத்து சேவைகளையும் இரத்துச் செய்வோம் என்றும் அமைச்சர் கூறினார்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவில் பொருத்தப்பட்டிருக்கும் இத்தொழில் நுட்பத்தினூடாக நாட்டின் தூர இடங்களுக்குச் செல்லும் அனைத்துப் பேருந்துகளிலும் நடைபெறும் குறைபாடுகள் உடனுக்குடன் கண்டறிய முடியும். தவறு இழைக்கப்படும் பட்சத்தில் குறித்த இடத்திலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்குவதன்மூலம் அவ்விடத்திலேயே தண்டப்பணம் அறவிடுதல் உள்ளிட்ட சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

இச்செயற்றிட்டம் இன்னும் சில தினங்களுக்குள் அமுல்படுத்தப்படுமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.மேலும் பயணிகள் எதிர்நோக்கும் மிகுதிப்பணம் வழங்காமை பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் மார்ச்மாதம் முதல் பர்பெயிட் கார்ட் முறை நடைமுறைக்கு வருமெனவும் அமைச்சர் கூறினார். (அ-2)

# வெளிநாட்டு பெண்களுக்கு இலங்கையில் தொந்தரவு

## தனது மக்களை எச்சரிக்கிறது பிரித்தானியா

இலங்கைக்கு வரும் பெண் சுற்றுலாப் பயணிகள், தாம் வீதிகளில் செல்லும் போது தொந்தரவுக்கு உள்ளாக்கப்படுவதாக பொலிஸ் நிலையங்களில் முறையிட்டு வருகின்றனர். இந்த முறைப்பாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாககுற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் கொழும்பின் கறுவாக் காட்டுப் பகுதிக்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் வந்த கலிபோர்னியாவைச்சேர்ந்த பெண் ஒருவர் தாம் காலையில் நடைப்பயிற்சிகளை மேற்கொள்ளும்போது தம்மைச் சிலர் கையடக்கத் தொலைபேசியில் படம் எடுப்பதாகவும் பிரச்சினைகளை ஏற்படுத்துவதாகவும் பொலிஸில் முறையிட்டுள்ளார்.

இதேவேளை நோர்வேயிலிருந்து இலங்கைக்கு வந்துள்ள பெண் ஒருவரும் நீர்கொழும்புப் பகுதியில் தொந்தரவுக்கு உள்ளானதாக முறையிட்டுள்ளார். பிரான்ஸிலிருந்து வந்திருந்த ஒருவர் தாம் பாலியல் ரீதியான தொந்தரவுகளுக்கு உள்ளானதாக குறிப்பிட்டுள்ளார். இதற்கிடையில் சிகிரியா மலைக்குச் செல்லும்போது அங்கு சிலர் தம்மிடம் சுமார் 3 ஆயிரம் ரூபா வரையான பணத்தை அறவிடுவதாக வெளிநாட்டுப் பெண்கள் முறையிட்டுள்ளனர்.

இவ்வாறு நடைபெறுவதால் பிரித்தானிய சுற்றுலா பயணிகள் இலங்கைக்குச் செல்லும் போது அவதானமாக நடந்து கொள்ளுமாறு அந்தநாடு எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாலியல் குற்றங்கள் தொடர்பில் கவனமாக செயற்படவேண்டும் எனவும் சிறுவர்களைக் கவனமாக கொண்டு செல்லவேண்டும் போன்ற எச்சரிக்கைகள் பிரித்தானிய சுற்றுலா பயணிகளுக்கு விடுக்கப்பட்டுள்ளன. (அ-2)

# பாடசாலை அபிவிருத்தி

கரவெட்டி ஸ்ரீ நாரதா வித்தியாலயத்தின் நலன் கருதி, ஐரோப்பிய பழைய மாணவர் சங்க ஒன்றியம் பல இலட்சம் ரூபா செலவில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய பாடசாலையின் பெயர் பொறித்த முன்வளவு ஒரு இலட்சம் ரூபா செலவிலும் இதனை விட வாயில் பகுதிக்கு இரும்புக் கேற்றும் பொருத்தியதுடன், இப் பாடசாலையில் கல்வி கற்கும் 98 மாண வர்களின் நலன்கருதி அவர்களுக்கான பாதணிகளும் அன்பளிப்புச் செய்யப்பட்டிருப்பதாக, பழைய மாணவர் சங்க செயலாளர் வே. யோகராசா தெரிவித்துள்ளார். (அ)

# துப்பாக்கிகளுடன் மூவர் கைதாகினர்

நானு ஓயா பகுதியில் துப்பாக்கிகளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

தெரதெல்ல கொட்மக பகுதியிலிருந்து நானுஓயா நோக்கி பயணித்த சந்தேகத்திற்கு இடமான வானொன்று சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போதே இந்த துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த சந்தேக நபர்களிடமிருந்து மேலும் பல ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள நுவரெலிய பகுதியைச் சேர்ந்த மூன்று சந்தேக நபர்களும் நீதிமன் றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (அ-2)

# நீரில் மூழ்கி இளைஞன் மரணம்

நிலாவெளி கடற்பரப்பின் குச்சவெளி பகுதியில் நீராடச் சென்ற ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். இந்த அனர்த்தம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பேராதனை பகுதியைச் சேர்ந்த 21 வயது இளைஞர் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். சடலம் மீதான பிரேத பரிசோதனைகள் இன்றைய [illegible] ம்பெறவுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துடுப்பாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் அணிகளுக்கிடையிலான துடுப்பாட்டம்

(மானிப்பாய்)

இலங்கைதுடுப்பாட்டச்சங்கத்தின்ஏற்பாட்டில் 19 வயதுபிரிவு பாடசாலை அணிகளுக்கி டையில் மட்டுப்படுத்தப்படாத பந்துப்பரிமாற்றங் கள் கொண்ட இரண்டு நாட்கள் கொண்ட துடுப் பாட்ட போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியினை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி முதலில் களத்தடுப்பாட தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய மானிப்பாய் இந்து அணி 34:4 பந்து பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 141 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் அதிக பட்சமாக பிரதீபன் 51 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில் யாழ். மத்தி சார்பாக அலன்ராஜ், ஹரிகரன் ஆகியோர் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாட களமிறங்கிய யாழ்ப்பாணம் மத்தி அணி அலன்டிலான்-டர்வினின் இணைப்பாட்டம் சிறப்பாக அமைய 101.5 பந்து பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 272 ஓட்டங்க ளைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக டர்வின் 80, அலன்டிலான் 63, நிரோஜ் 24, நிரூபன் 23 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் மானிப்பாய் இந்து கல்லூரி சார்பாக பிரதீபன் 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.

131 ஓட்டங்கள் பின்னிலையில் தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய மானிப்பாய் இந்து கல்லூரி அணி 49.1 பந்து பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 166 ஓட்டங்களைப் பெற்றது. இரண்டாவது நாள் ஆட்டமும் முடிவுக்கு வந்த நிலையில் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

துடுப்பாட்டத்தில் குகபிரசாத் ஆட்டமிழக்காமல் 70 ஓட்டங்களையும் சேந்தன் 35 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி சார்பாக ஹரிகரன் 3 இலக்கு களையும் கைப்பற்றினார். (அ-23)

## மீட்கப்பட்ட மண்டையோடுகள் இந்தியாவுக்கு அனுப்பப்படும்

மாத்தளை வைத்தியசாலை வளாகத்திலிருந்து கண்டெடுக்கப்பட்ட மனித மண்டை ஓடுகள் மற்றும் எலும்புக்கூடுகள் மேலதிக பரிசோதனைக்காக இந்தியாவிற்கு அல் லது [illegible]திய இராச்சியத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்று மாத்தளை மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி அஜித் ஜயசேன தெரிவித்தார்.

மாத்தளை வைத்தியசாலை வளாகத்தில் மனித எலும்புக்கூடுகளை வெளி எடுக்கும் நடவடிக்கை கடந்த நவம்பர் மாதம் 26 ஆம் திகதி முதல் 2013 பெப்ரவரி 12 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்டது. இக்காலப் பகுதிகளில் 154 மனித எலும்புக்கூடுக ளுக்கு 141 மனித மண்டையோடுகளும் முழுமையாக அல்லது பகுதியளவில் கண்டெடுக்கப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ-2)

## சண்டே லீடர் ஊடகவியலாளர் மீது தாக்குதல்; பிரித்தானியா அதிர்ச்சி

பிரித்தானியக் குடியுரிமை பெற்ற சண்டே லீடர் வார இதழின் புலனாய்வு ஊடகவியலாளர் ஃபராஸ் சௌக்கத் அலி தாக்கப்பட்டமைக்கு பிரித்தானியா கடும் அதிர்ச்சி மற்றும் கவலை வெளியிட்டுள்ளது.

இது குறித்து பிரித்தானிய வெளிவிவகாரப் பணியக மற்றும் கொமன்வெல்த் விவகார அமைச்சர் அலிஸ்ரெயர் பேர்ட் கடும் அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கும் குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்தவும் சாத்தியமான அனைத்தையும் செய்ய வேண்டும் என்று இலங்கை அரசைக் கேட்டுக் கொள்வதாகவும் அலிஸ்ரெயர்பேர்ட் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

இதேவேளை பாதிக்கப்பட்டவரின் குடும்பத்தினருடன் இணைந்து நாமும் பிரார்த்திக்கின்றோம். எமது தூதரக அதிகாரிகள் வைத்தியசாலைக்குச் சென்று அவரைப் பார்வையிட்டனர்.

தேவைப்பட்டால் அவருக்கு மேலதிக உதவிகளை வழங்கத் தயாராகவே உள்ளோம். ஊடகவியலாளர் என்பதனால் தான் அவர் மீது இந்தக் கொடூரத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதா என்பது இன்னமும் தெளிவாகவில்லை. இலங்கை அதிகாரிகள் உடனடியாக குற்றவாளிகளை கண்டுபிடித்து நீதியின் முன் நிறுத்த வேண்டும்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்கு சாத்தியமான எல்லா நடவடிக்கைகளையும் இலங்கை அரசாங்கம் எடுக்க வேண்டும் என்றும் குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துவதற்கான பொறுப்பை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் கேட்டுக் கொள்வதாகவும் அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

## இல்ல மெய்வல்லுநர்போட்டி

யாழ்/உயரப்புலம் குணபாலன் வித்தியாலயத்தில் அமரர் சரஸ்வதி சுப்பிரமணியச் செட்டியார் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணங்களுக்கான வருடாந்த மெய் வல்லுநர் திறனாய்வுப்போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மாணிக்கபாக்கியம் விளையாட்டு அரங்கில் பாடசாலை அதிபர் நா.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கந்தசாமி, சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலயம் உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி.கோசலை குலபாலசிங்கம், கௌரவ விருந்தினராக முன்னாள் ஆசிரியர் திருமதி. லீலா சிவமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

✦ ✦ ✦ ✦ ✦

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கலாசாலை விளையாட்டு மைதானத்தில் கலாசாலை அதிபர் வி.கே. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபொ௱ும.இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ். உதயகுமார் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (அ-2)

✦ ✦ ✦ ✦ ✦

(மானிப்பாய்)


மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலய இல்லமெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டியும் மைதானத் திறப்பு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (அ-2-23)

✦ ✦ ✦ ✦ ✦

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை பிற்பகல் 1.30 மணியளவில் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பிரித்தானிய பழைய மாணவர் சங்க செயலாளர் செல்வத்துரை தேவராஜா கலந்து கொள்வார். பிரதம விருந்தினரின் பாரியார் நந்தினி தேவி தேவராஜா பரிசில்களை வழங்கி கௌரவிப்பார். (அ-23)





யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா அண் மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் விருந்தினா்கள நிற்பதையும் கஷ்ட நிலை யிலுள்ள மாணவி ஒருவருக்கு துவிச்சக்கர வண்டி வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

## 50 வருடங்களாக புனரமைக்கப்படாத முல்லைத்தீவு நகர மைதானம்

முல்லைத்தீவு நகர பொது விளையாட்டு மைதானம் 50 வருடத்திற்கு மேலாக புனரமைக்கப்படாமல் உள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இம்மைதானமானது பற்றைகளுடனும் முட்புதர்களுடனும் காணப்படுவதால் டெங்கு நோய் பரவக் கூடிய அபாய நிலை காணப்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

விளையாட்டு நிகழ்ச்சிகள், கலை நிகழ்வுகள் எவையும் நடத்த முடியாத நிலையில் இம்மைதானம் காணப்படுகின்றது. உரிய தரப்பினரிடம் இம்மைதானம் தொடர்பாக பல முறைகோரிக்கை விடுத்தும் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

மணல் திட்டுக்களாக இம்மைதானம் காணப்படுகின்றது. எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-287)

## நவிப்பிள்ளையின் முனைப்புக்கு தமிழ் அமைப்புக்கள் வரவேற்பு

இலங்கையின் மனித உரிமை மீறல் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை காட்டி வரும் முனைப்புக்களுக்கு பல புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் தமது வரவேற்பை வெளியிட்டுள்ளன.

பிரித்தானிய தமிழர் பேரவை, கனேடிய தமிழ் காங்கிரஸ் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் தமிழ் அரசியல் நடவடிக்கை சபை என்பன இந்த வரவேற்பை வெளியிட்டுள்ளன.

இலங்கை அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்தாமை குறித்த இந்த அமைப்புக்கள் இலங்கை அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டை சுமத்தியுள்ளன.

எனவே நவநீதம்பிள்ளையின் அறிக்கையை ஏற்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கை விடயத்தில் சர்வதேச விசாரணைக்குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்று ஐக்கிய அமெரிக்காவின் தமிழ் அரசியல் நடவடிக்கைக்குழுவின் பேச்சாளர் யோசோ நற்குணம் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் மருத்துவத்துறையை அறிமுகப்படுத்தியது ஈழம்தான்

## சென்னை பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்

**எப்படி தமிழகம் தமிழர்களுக்குச் சொந்தமானதோ அப்படியே ஈழம் ஈழத் தமிழர்களுக்குச் சொந்தமானது.**

**இவ்வாறு சென்னை பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் இந்தியாவின் மூத்த மொழியியல் மற்றும் ஆய்வுப் பேராசிரியருமான பொற்கோ தெரிவித்துள்ளார்.**



சென்னையில் தமிழ் நாடு அரசின் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அயல்நாட்டுத் தமிழ் இலக்கியம் என்ற மாநாட்டை அண்மையில் நடத்தியது.

குறித்த நிகழ்வின் நிறைவு விழாவில் கலந்து கொண்டு பேருரை ஆற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

ஈழத்தில் மீண்டும் எழுச்சி வெடிக்கும். ஏனென்றால் அது உயிருடைய தன்மை. ஆனால், எப்படி வெடிக்கும்? எப்பொழுது வெடிக்கும்? என்று யாராலும் சொல்ல முடியாது. நான் 1970 ஆம் ஆண்டு லண்டனில் இருந்த பொழுது தமிழர்களுக்கு எதிராக இலங்கையில் கொண்டு வரப்பட்ட சட்டம் ஒன்றை எதிர்த்து புலம்பெயர் தமிழர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டேன்.

ஈழத்தில் அன்று அல்ல அதற்கு முன்பே அமைதி போய்விட்டது. ஆனால், அங்கு மீண்டும் அமைதி திரும்பும் என்று நான் நம்புகிறேன். ஏனெனில் ஈழத் தமிழர்கள் எங்களைப் போன்றவர்கள் அல்ல. அவர்கள் எங்களை பல இடங்களில் விஞ்சிய தமிழர்கள்.


தமிழகத்திலிருந்து தமிழ் மக்கள் பல்வேறு விடயங்களினால் தூக்கி வீசப்பட்டிருக்கிறார்கள். மலேசியா, சிங்கப்பூர் உட்பட பல நாடுகளில் தமிழகத் தமிழர்கள் புலம்பெயர்ந்து சென்று வசிக்கிறார்கள். ஆனால், ஈழத் தமிழ் மக்கள் ஈழத்தினை பூர்வீகமாகக் கொண்டவர்கள். அவர்கள் மற்றைய தமிழர்களைப் போல இல்லை.

அவர்களிடம் தனித்துவமான பண்பாடு, பேச்சு நடை, இலக்கிய நடை என்பன உள்ளன. எப்படி தமிழகம் தமிழர்களுக்கு சொந்தமானதோ அப்படியே ஈழமும் ஈழத் தமிழர்களுக்குச் சொந்தமான நாடு.

தமிழில் மருத்துவத்துறையை அறிமுகப்படுத்தியது ஈழம்தான். அயல்நாட்டு தமிழ் இலக்கியம் என்ற வகைப்பாட்டை முதன் முதலில் உருவாக்கியவர் மதுரைப் பல்கலைக்கழக பேராசிரியராக இருந்த தனிநாயகம் அடிகளார்தான். அவர் ஈழத்தில் யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். சென்னைப் பல்கலைக்கழக முதல் பட்டதாரி மாணவன் சி.வை. தாமோதரம்பிள்ளை. அவரும் ஈழத்தவரே.

ஈழத்திற்கு மிகவும் உறுதியான நெடிய வரலாறு உண்டு. வரலாற்றில் ஈழமும் தமிழகமும் மிகவும் நெருக்கமாக இருந்திருக்கிறது என்று அவர் குறிப்பிட்டார். (அ-2)


## மொழிபெயர்ப்பாளராக சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு அச்சுக்கூட வீதியைச் சேர்ந்த நல்லதம்பி சூரியகுமார் அண்மையில் யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் நீதவான் ஏ.ஏ.ஆனந்தராசா முன்னிலையில் சத்தியப்பிரமாண மொழிபெயர்ப்பாளராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

நீதியமைச்சினால் சத்தியப்பிரமாண மொழிபெயர்ப்பாளராக நியமிக்கப்பட்ட இவர் இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்தின் ஓய்வு பெற்ற ஆளணி உத்தியோகத்தரும் விநியோக உத்தியோகத்தரும் கலைமாணி பட்டதாரியுமாவார். (அ-5)



31 ஆவது முதலமைச்சர் மாநாடு பதுளை, பசறை, பொல்காதன்ன முகாமைத்துவ பயிற்சி நிலையத்தில் கடந்த 16 ஆம் திகதி ஆரம்பமாகியது. இதன்போது...

## "ரிஸானா நபீக் தேசத்தின் புதல்வி" நூல் வெளியீடு முதலாம் திகதி

காத்தான்குடி மீடியா போரத்தின் கன்னி வெளியீடான "ரிஸானா நபீக் தேசத்தின் புதல்வி" எனும் புத்தக வெளியீடு எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் இஸ்லாமிய கலாசார மண்டபத்தில் காத்தான்குடி மீடியா போரத்தின் செயலாளர் மௌலவி முஸ்தபா தலைமையில் நடைபெறவுள்ளது.

காத்தான்குடியில் இருந்து வெளிவரவுள்ள இந்தப் புத்தகத்தில் ரிஸானாவுக்கு மரண தண்டனை வழங்கப்பட்ட பின் ஊடகங்கள், பத்திரிகைகள், இணையத்தளங்கள் என்பவற்றில் வெளியான ஆக்கங்கள், கட்டுரைகள், அறிக்கைகள், செய்திகள் என்பவற்றை ஒரே பார்வையில் பார்க்கக்கூடியவாறு ஒன்றாக தொகுத்து வெளியிடப்படவுள்ளதாக காத்தான்குடி மீடியா போரத்தின் தலைவர் எம்.எஸ்.எம். நூர்தீன் தெரிவித்துள்ளார்.

இந்த வெளியீட்டு நிகழ்வில் உலமாக்கள், புத்திஜீவிகள், அரசியல்வாதிகள், ரிஸானாவின் குடும்பத்தினர் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

குறித்த இப் புத்தகத்தினால் பெறப்படும் சகல வருமானங்களும் ரிஸானா நபீக்கின் குடும்பத்தினருக்கு ஒப்படைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## உலக சனத்தொகையில் நான்கு பேரில் ஒருவருக்கு மனநோய் பாதிப்பு

(கொழும்பு)

உலக சனத்தொகையில் நான்கு பேரில் ஒருவர் மனநோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாக தேசிய மன சுகாதார கவுன்சிலின் பணிப்பாளரும் மனோதத்துவ நிபுணருமான டாக்டர் நிரோஷ மென்டிஸ் தெரிவித்துள்ளர்.

தேசிய மனசுகாதாரம் குறித்த பாடநெறிகளைத் தொடர்ந்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கையில் கடந்த காலங்களை விட மனநோயினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

மன அழுத்தம் காரணமாக மாணவர்கள் உட்பட பலர் மனநோயினால் பாதிக்கப்படுகின்றனர். பரீட்சை அண்மிக்கும் காலப்பகுதியில் கொழும்பில் பிரதான பாடசாலைகள் அமைந்திருக்கும் பகுதிகளில் உள்ள வைத்திசாலைகளில் மனோரீதியாகப் பாதிக்கப்படும் மாணவர்கள் அனுமதிக்கப்படும் விகிதம் அதிகரித்துள்ளது.

இறுக்கமான மனோநிலையே இதற்கான காரணமாக அமைந்துள்ளது. (அ-2)

# உலகில் அமைதியான நாடுகளில் ஒன்றாக இலங்கையும் திகழ்கிறது

## கோத்தா பெருமிதம்

உலகின் மிகவும் கடுமையான பயங்கரவாதிகளுடன் யுத்தம் நடைபெற்ற நாடு என்கின்ற அதேநேரம் யுத்தம் நிறைவடைந்து சில வருடங்களில் இலங்கை துரிதமான மாற்றங்களை கண்டிருக்கிறது. இன்று உலகில் மிக அமைதியான நாடுகளில் ஒன்றாக இலங்கையும் இருக்கிறது என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு தாமரைத் தடாகம் மஹிந்த ராஜபக்ஷ அரங்கில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற றோட்டரி கழகத்தின் 22 ஆவது மாவட்ட மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

நாட்டில் இன்று யுத்தம் நிறைவடைந்து சில வருடங்களில் இலங்கை துரிதமான மாற்றங்களைக் கண்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்து வருகிறது. பிராந்திய ரீதியிலும் உலகளாவிய ரீதியிலும் அங்கீகரிக்கப்பட்ட பல முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்துள்ளனர்.

ஏற்கனவே பொதுநலவாய பாராளுமன்ற சங்கத்தின் 58 ஆவது மாநாடு இங்கு நடைபெற்ற நிலையில் பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்களது உச்சி மாநாடு இவ்வருட இறுதியில் இங்கு நடைபெறவுள்ளது.

அதேபோல் ருவென்ரி-20 கிரிக்கெட் உலகக் கிண்ண போட்டிகள் கடந்த வருடம் நடைபெற்றன.

இலங்கையில் சமாதானமும் ஸ்திரத்தன்மையும் இருப்பதாக நம்பப்படுவதாலேயே இவையனைத்தும் இடம்பெறுகின்றன. முதலீடுகளை ஊக்குவிக்க பல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கணக்கியல், தகவல் தொழில்நுட்பம், பொறியியல் என பல்வேறு துறைகளிலும் சிறந்த துறைசார் நிபுணர்கள் வருடாந்தம் வெளியாகி வருகின்றனர்.

இதேநேரம் கொழும்புக்கு வெளி மாவட்டங்களில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். புதிய துறைகளிலான முதலீடுகளும் வர வேண்டியது அவசியம். நாட்டில் அனைவரும் சுபீட்சமான எதிர்காலத்தை அனுபவிக்கும் நிலைமைகள் உருவாக வேண்டும் என்றார். (அ-2)

## மாணவர்கள் மத்தியில் சுவாச நோய் தாக்கம்

### மருத்துவர்கள் எச்சரிக்கை

பாடசாலை மாணவர்கள் மத்தியில் சுவாச நோய் பரவி வருவதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். தொற்றா நோயாக உள்ள இது சுற்றாடல் மாசுபடுவதன் மூலம் சம்பந்தப்பட்டதாக கருதப்படுகிறது.

இந்நிலையில் குறித்த சுவாச நோய் காரணமாக பாரிய உடல் தீங்கு ஏற்படக் கூடும் என அவர்கள் எச்சரித்துள்ளனர்.

டீசல் வாகனங்களின் மாசு மற்றும் தொழிற்சாலை வாயுக்களின் வெளியேற்றம் என்பன இந்நோய்க்கு காரணமாக அமைந்துள்ளன.

குறித்த நோய் இறுதியில் ஆஸ்துமாவாக மாறும் அபாயம் உள்ளதாக மருத்துவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது மனதில் தூய்மை அதிகமாக இருந்தால், வலிமையும் அதிகமாக இருக்கும்.

-காந்திஜி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அமைச்சர் வாசுதேவவுக்கு ஓர் அன்பு மடல்

அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவுக்கு அன்பு வணக்கம். இந்த நாட்டில் இன ஒற்றுமை தொடர்பில் நல்ல கருத்துக்களை தெரிவிக்கின்ற சிங்களத் தலைவர்களில் தாங்களும் ஒருவர் என்பதை தமிழ் மக்கள் என்றும் மறந்ததில்லை.

எனினும் கடந்த காலங்களில் பாராளுமன்ற ஆசனத்தை தாங்கள் பெற்றுக் கொள்வதென்பது, இருபெரும் இனவாத கட்சிகளின் மத்தியில் சாத்தியமற்று போயிற்று.

முன்னைய காலங்களில் நீங்கள் பாராளுமன்றம் சென்றிருந்தால், தமிழர்களின் யதார்த்த நிலைமைகளை நிச்சயம் பாராளுமன்றில் தெரிவித்திருப்பீர்கள். பரவாயில்லை. அது நடைபெறாது போனாலும் தற்போது தாங்கள் பாராளுமன்ற உறுப்பினராக - அமைச்சராக இருக்கின்ற வகையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் தாங்கள் கடும் முயற்சி எடுப்பீர்கள் என்று நாம் நம்பியதுண்டு.

ஆனால், அதனை தங்களால் செய்யமுடியவில்லை. கடும் போக்கான அமைச்சராக நீங்கள் இல்லை. ஆயினும் பாராளுமன்ற உறுப்பினராக - அமைச்சராக நீங்கள் உங்களை வெளிக்காட்டிய போது, தமிழ் மக்கள் தொடர்பில் உங்களின் நிலைப்பாடுகள், மங்கி அல்லது மயங்கி போனது என்பதை நினைக்கும் போது, சிங்கள அரசியல்வாதிகளின் வழமை இதுதானோ என்று எண்ணத் தோன்றும்.

1958களில் தனிச் சிங்கள சட்டத்தை பாராளுமன்றத்தில் கொண்டுவந்தபோது; இருமொழி என்றால் ஒரு நாடு, ஒரு மொழி என்றால் இரு நாடு என்ற மகாதத்துவத்தை கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா கூறினார்.

ஒரு சிங்களவர் எத்துணை அற்புதமாக நிலைமையை விளக்கினார் என்று தமிழ் மக்கள் நினைத்தபோது, பேரினவாதம் என்பது சில சிங்களவர்களின் வெறியாட்டமே அன்றி அது இந்த நாட்டின் அனைத்துச் சிங்களவர்களினதும் நிலைப்பாடல்ல என்று தமிழ் மக்கள் எண்ணிக் கொண்டனர்.

ஆனால், மகாதத்துவம் பேசிய கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா அவர்கள் 1972களில் இந்த நாட்டின் அரசியல் அமைப்பை உருவாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட போது, தமிழ் மக்கள் பற்றி - அவர்களின் உரிமை பற்றி சிறிதும் சிந்தியாதவராகச் செயற்பட்ட போது சிங்களவர்கள் இப்படித்தான் என்ற முடிபை தமிழ் மக்கள் எடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டனர்.

இந்த துர்ப்பாக்கிய நிலைதான் துப்பாக்கி ஏந்துகின்ற துர்ப்பாக்கியத்தை உருவாக்கியது.

நிலைமை இதுவாக இருக்க, தமிழர்களுக்கு சமவுரிமை வழங்க சிங்களவர்கள் தயாராக வேண்டும் என்று தாங்கள் யாழ்ப்பாணத்தில் கூறியதை இந்த நாட்டின் ஜனாதிபதியிடம் அல்லது அமைச்சர் சம்பிக்கவிடம், அமைச்சர் விமல் வீரவன்சவிடம் கூறியிருந்தால் உங்கள் தொடர்பில் தமிழர்கள் பெருமைப்பட்டுக் கொள்வார்கள்.

ஐயா! ஒரு காலத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு சிங்களமக்களின் ஒத்துழைப்பு தேவைப்பட்டன என்பது உண்மைதான்.

ஆனால், இன்று நிலைமை அதுவல்ல. இந்த நாட்டின் ஜனாதிபதியோ அல்லது மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் கொண்ட அரசோ நினைத்தால் போதும் தமிழர்களுக்கான சமவுரிமை உடன் சாத்தியமாகும்.

ஆக, இந்த உண்மையை நீங்கள் சார்ந்துள்ள அரசுக்கு கூறுவதே பொருத்துடையதாகும். ஏற்றிடுக.

# முல்லை மாவட்டத்தின் சில பிரதேசசபைகளின் வேலைத்திட்டங்கள் காட்சிப்படுத்தப்படவில்லை

## மக்கள் விசனம்

(முல்லைத்தீவு)

கரைதுறைப்பற்று, துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச சபைகளினால் இவ்வாண்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள் எவையும் காட்சிப்படுத்தப்படாதது ஏன் என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

மீள்குடியேற்றத்தின் பின் நடைமுறைப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் எவையும் மேற்குறித்த பிரதேச சபைகளால் காட்சிப்படுத்தப்படவில்லை என அவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அதாவது கடந்த 2010, 2011, 2012 ஆண்டுகளில்செயற்படுத்தப்பட்ட வேலைத் திட்டங்கள் காட்சிப்படுத்தப்படவில்லை எனவும் இவ்வருடம் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வேலைத்திட்டங்கள் எவையும் காட்சிப்படுத்தப்படவில்லை எனவும் விசனம் தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு, பிரதேச சபைக்கு அபிவிருத்தி பணிக்கு இவ்வாண்டு ஒரு கோடியே 66 இலட்சம் ரூபா நிதி ஒதுக் கப்பட்டு புதுக்குடியிருப்பு பிரதேச சபை உப அலுவலகம், புதுக்குடியிருப்பு பொதுச் சந்தை ஆகியன புனரமைப்பு பாதுகாப்பு வேலி அமைத்தல், தெருவிளக்கு பொருத்தல், வீதிகள் புனரமைப்பு, பேருந்து நிலையம் புனரமைப்பு, பொது மயானம் புனரமைப்பு, வாகன தரிப்பிடம் புனரமைப்பு ஆகிய வேலைத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் மேற்குறித்த பிரதேச சபைகள் கடந்த ஆண்டும் சரி இவ்வாண்டும் சரி ஏன் வேலைத்திட்டங்களை காட்சிப்படுத்தவில்லைஎன மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனஅப்பகுதி மக்கள் வேண்டுகோள்விடுத்துள்ளனர். (அ-3,267)

# கட்டாரில் மரணதண்டனை வழங்கப்பட்ட இளைஞனுக்கு பணம் சேர்ப்பதில் நெருக்கடி!

(கொழும்பு)

கட்டாரில் மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர் வெங்கடாசலம் சுடேஸ்கரை மீட்பதற்காக கோரப்பட்டுள்ள 35 இலட்சம் ரூபாய் குருதிப் பணத்தை சேகரிப்பதில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிய மனித உரிமைகள் ஆணையகம் மற்றும் சுடேஸ்கரின் குடும்ப அங்கத்தவர்கள் தற்போது 28 இலட்சம் ரூபாயை சேகரித்துள்ளனர். மீதி 7 இலட்சம் ரூபாயை இந்தமாத இறுதிக்குள் சேகரித்து வழங்கவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணையகம் கூறியுள்ளது.

குறித்த தொகை இந்தமாத இறுதிக்குள் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு வழங்க வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பணிப்பெண் ரிசானா நபீக்கிற்கு ஏற்பட்ட நிலைமை வெங்கடாசலம் சுடேஸ்கருக்கு ஏற்படுவதற்கு இடமளிக்க முடியாதென்றும் ஆசிய மனிதவுரிமைகள் ஆணையகம் சுட்டிக் காட்டியுள்ளது.

எனினும் போதுமான நிதியை துரிதமாக சேகரிப்பதில் பாரிய சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் ஆணையகம் குறிப்பிட்டுள்ளது.

குறித்த இலங்கைத் தமிழர் கடந்த 2011ஆம் ஆண்டு கட்டாருக்குச் சென்று தொழில் தேடிக்கொண்டிருந்தபோது பழவகை வர்த்தக நிலையத்தில் சிற்றூழியராக தொழில் கிடைத்துள்ளது.

எனினும் அங்கு ஏற்பட்ட கைகலப்பில் சுடேஸ்கரின் தாக்குதலுக்கு உள்ளான இந்தியர் ஒருவர் மரணமானதாக தெரிவிக்கப்படுகிறது.

கட்டார் காவல் துறையினரால் கைது செய்யப்பட்ட அவர் 2012ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதி குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டது.

கட்டாரிலும் கூரிய வாளினால் சிரச்சேதம் செய்யப்பட்டே மரண தண்டனை நிறைவேற்றப்படுகின்றது.

இதே போன்றே சவுதி அரேபியாவிலும் இலங்கைப் பணிப்பெண் ரிசானா குழந்தை ஒன்றின் மரணத்திற்கு காரணமாக இருந்தார் எனக் குற்றம் சுமத்தப்பட்டு கடந்தமாதம் மரண தண்டனைக்கு உட்படுத்தப்பட்டார். (எ-8)

# சமுர்த்தி பயனாளிகள் தெரிவில் குளறுபடிகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சமுர்த்தி பயனாளிகள் தெரிவுகள் உரிய முறையில் பின்பற்றப்படவில்லையென அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலேயே சமுர்த்தி பயனாளிகள் தெரிவு மிகமோசமான நிலையில் இடம் பெற்றுள்ளது.

இதில்ஒன்றுஅல்லதுஇரண்டுபேரைக் கொண்ட வறுமைப்பட்ட குடும்பங்கள் சமுர்த்தி தெரிவில் இடம்பெறவில்லை.

அத்துடன் 3 இற்கு மேலுள்ள அங்கத்தவர்களைக்கொண்ட குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டபோதிலும் பொருளாதாரத்தில் உயர்ந்த நிலையிலுள்ளவர்களும் வெளிநாட்டு உதவியுள்ளவர்களுமே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மிகவும் வறிய பொருளாதாரத்தில் பின்னடைவு உள்ளவர்கள் தெரிவு செய்யப்படவில்லை.

எனவேஉரியதரப்பினர்இதனைக்கருத்திற்கொண்டு நியாயமான முறையில் சமுர்த்தி பயனாளிகள் தெரிவு இடம்பெற ஆவன செய்யுமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3,267)

## இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு


(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் மு.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு கடந்த 14ஆம் திகதி நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## மனம், உயிர், தெய்வநிலை



மனம், உயிர், தெய்வநிலை ஆகியவை மறைபொருட்கள். அவற்றை விஞ்ஞானத்தால் அறியமுடியாது. புலன்களைக்கொண்டு அறிவது விஞ்ஞானம். புலன்களுக்கு உபகருவிகள் துணையைக்கொண்டு அறிவது விஞ்ஞானம். அறிவைக்கொண்டு ஆராய்வது மெய்ஞ்ஞானம்.

உடலைப்பற்றி நிறைய அறிந்து வைத்திருக்கிறோம். மனதைப்பற்றியும் அறிய வேண்டும். இந்த ஆராய்ச்சி உயிரைப் பற்றி அறிவதில் கொண்டுபோய் விடும். உயிரைப் பற்றிய ஆராய்ச்சியின் முடிவு தன்னிலை விளக்கத்தில் முடியும். இந்த இடமே எல்லா ஆராய்ச்சிகளின் முடிவு. அருள்துறைக்கு உயிர் என்ற சொல்லை மையமாக வைத்து ஆன்மீகம் (ஆங்கிலத்தில்கூட... Spirit...Spiritualism) எனப்பெயர் வைத்திருக்கிறார்கள்.

தன்னை அறியாதவரை மனதிற்கு அமைதியில்லை. ஏனெனில் இந்தப் பிறவி எடுத்ததன் நோக்கமே தன்னை அறிவதற்காக எடுக்கப்பெற்றதே. தன்னை அறிய தத்துவ விளக்கங்கள் உதவியாகத்தான் எடுக்கும். ஆனால் தன் மூலத்தைத் தானே எட்டி உள்ளுணர்வாக அகக்காட்சியாக அறிய யோகமே துணைசெய்யும். அந்த யோகத்தை இக்காலத்திற்கேற்ப எளிமைப்படுத்தப்பெற்றதே எளியமுறை குண்டலினி யோகம் என்னும் மனவளக்கலை.

இதனை மாணவர்கள் பயில்வதால் அறிவுத் தெளிவும் கடமையுணர்வும் பெறலாம். படிப்புக்கும் நன்மை தரும். பிற்கால வாழ்க்கையின் உயர்வுக்கு இப்போதே அத்திவாரம் அமைத்ததாகும். படிப்புக்கோ, வேறு அன்றாடக் காரியங்களுக்கோ சிறிதும் இடையூறின்றி மனவளக்கலை பயிலலாம். இதற்கு ஒதுக்கிய சிறிது நேரம், படிக்க ஒதுக்கும் பெரிய நேரத்தையும் குறைக்க உதவும். மனம் செம்மையும் பிரகாசமும் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லஷ்கர்-இ-தொய்பா குண்டு தாக்குதலில் பாடசாலைச் சிறுமிகள் உட்பட 79 பேர் பலி

## உயிரிழப்பு அதிகரிக்கலாம் என அச்சம்



பாகிஸ்தானின் தென்மேற்கு பகுதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் பாடசாலைச் சிறுமிகள் உட்பட 79 பேர் வரை பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானின் தென்மேற்கு பகுதியில் எண்ணெய் மற்றும் எரிவாயு வளம் மிகுந்த பலுசிஸ்தான் மாகாணத்தின் தலைநகரான குவெட்டாவிலும் அதை சுற்றியுள்ள பகுதிகளிலும் ஷியா பிரிவினர் பெரும்பான்மையாக உள்ளனர். பெரும்பான்மையான இவர்கள் மீது சன்னி பிரிவினர் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் குவெட்டா அருகேயுள்ள ஹஷாரா நகரில் உள்ள சந்தையில் சக்தி வாய்ந்த குண்டு வெடித்தது.

இதில் இப்பகுதியில் இருந்த அடுக்குமாடி கட்டடம் முற்றிலும் இடிந்து தரைமட்டமானதுடன் கடைகள், வீடுகள் இடிந்தன. இதனால் அப்பகுதி முழுவதும் கடும் புகை மண்டலமாக காட்சியளித்தது.

இச்சம்பவத்தால் அங்கு பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது. குண்டு வெடிப்பு நடந்த இடம் சந்தைப் பகுதி என்பதால் ஏராளமானவர்கள் கூடியிருந்தனர். அவர்கள் அனைவரும் சிதறி ஓடினர். தொடக்கத்தில் குண்டு வெடிப்பில் பாடசாலைச் சிறுமிகள் உட்பட 42 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மேலும் 250 பேர் காயமடைந்தனர். அவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் மேலும் பலர் உயிரிழந்ததனால் தற்போது பலியானோர் எண்ணிக்கை 79 ஆக உயர்ந்துள்ளது.

கட்டட இடிபாடுகளில் இன்னும் ஏராளமானவர்கள் சிக்கியுள்ளதால் அவர்களை மீட்கும் பணி நடந்து வருகிறது. அநேகமாக அங்கு சிக்கியிருப்பவர்களில் பெரும்பாலானோர் உயிர் பிழைக்க வாய்ப்பு இல்லை என பொலிஸார் கூறியுள்ளனர். எனவே பலியானோர் எண்ணிக்கை மேலும் உயரும் அபாயமுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பலுசிஸ்தான் மாகாணத்தில் வாழும் ஷியா பிரிவினர் மீது சன்னி பிரிவை சேர்ந்த லஷ்கர்-இ-தொய்பா போராளிகள்தான் வெடிகுண்டுத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். தற்போது நடந்த குண்டு தாக்குதலிற்கும் அவர்கள் பொறுப்பேற்றுள்ளனர். இதையடுத்து குவெட்டா பகுதியில் 3 நாட்கள் துக்கம் அறிவித்துள்ளனர்.

இதேவேளை கடந்த மாதம் 10 ஆம் திகதி குவெட்டாவில் கும்பலாக சென்ற ஷியா பிரிவினர் மீது லஷ்கர்-இ-தொய்பா போராளிகள் வெடிகுண்டு வீசி தாக்குதல் நடத்தியதில் 92 பேர் பலியானதுடன் 121 பேர் காயமடைந்தமையும் கடந்த 2012 ஆம் ஆண்டில் மட்டும் அப்பகுதியில் 400 பேர் கொல்லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ-5)

# புதிய திருத்தந்தையின் தெரிவிற்கான ஒன்றுகூடல்

## எதிர்வரும் மார்ச் 15 இல்



திருத்தந்தை 16 ஆம் பெனடிக்கிற்குப் பதிலாக புதிய திருத்தந்தையை தெரிவு செய்வதற்கான கத்தோலிக்க ஆயர்களிற்கான ஒன்று கூடல் மார்ச் 15 ஆம் திகதிக்குள் ரோமில் நடைபெறும் என வத்திக்கான் அறிவித்துள்ளது.

எனினும் இத்தெரிவு போதுமான அளவு கர்தினால் எனப்படும் உயர் பதவியில் உள்ள அருட் பணியாளர்கள் ஒன்றுகூடினால் மட்டுமே நடைபெறும் எனவும் வத்திக்கான் குறிப்பிட்டுள்ளது.

இவ்விடயம்குறித்துவத்திக்கானில் உள்ள அருட்பணியாளர்கள் சார்பாக அருட்தந்தை பெர்டெரிக்கோ லொம்பார்டி தெரிவிக்கையில்,

இம்முறை திருத்தந்தை 16 ஆம் பெனடிக்டின் பதவி துறப்பு தனித்துவமான வரலாற்றில் அரிதான ஒன்றாக இருப்பதனால் புதியவரைத் தெரிவு செய்வதற்கான செயற்பாடுகளிலும் ஒன்று கூடலிலும் வித்தியாசமான நேரம் பிசகாத முறைகளையே கையாள வேண்டியிருக்கிறது என்று கூறினார்.

இதேவேளை புதிய திருத்தந்தை தெரிவும் பதவியேற்பும் விரைவாக நிகழும் வாய்ப்பு உள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் 28 ஆம் திகதியுடன் தாம் திருத்தந்தை பதவியிலிருந்து விலகுவதாக அண்மையில் திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ற் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

# பாரிஸில் ஏலத்திற்கு வரும் மாவீரனின் திருமண மோதிரம்



மாவீரன் நெப்போலியன் முதல் மனைவி ஜோஸ்பின்க்கு திருமண நிச்சயத்தின்போது அளித்த வைர மோதிரம் எதிர்வரும் மாதம் 24 ஆம் திகதி பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் ஏலம் விடப்படவுள்ளது.

வைரம் பதிக்கப்பட்ட இந்த தங்க மோதிரம் 12 அயிரம் யூரோ வரை ஏலம் போகும் என்று எதிர்பார்ப்பதாக ஒசெண்டா என்ற ஏல நிறுவனம் கூறியுள்ளது.

நெப்போலியன் பணப் பிரச்சினையில் இருந்தபோது இந்த மோதிரத்தை மனைவிக்கு வழங்கியுள்ளார். அதனால் இது அதிக வேலைப்பாடுகள் இல்லாத சாதாரண வைர மோதிரமாகும் என தெரிவிக்கப்படுகிறது.

அலெக்சாண்டர் டி பியுகர்னைஸ் என்ற செல்வந்தரின் மறைவுக்குப் பின்பு விதவையான ஜோஸ்பினை அவர் திருமணம் செய்து கொண்டார்.

இதன்போது இந்த மோதிரத்தை 1796 ஆம் ஆண்டு மார்ச் 8 ஆம் திகதி அவர்களின் நிச்சயதார்த்தத்தின்போது ஜோஸ்பினுக்கு நெப்போலியன் அணிவித்தார். மறுந[illegible] அவர்களின் திருமணம் நடந்தது. 1810 ஆம் ஆண்டு அவர்கள் இருவரும் பிரிந்தனர்.

எனினும் நெப்போலியன் இறக்கும் நிமிடம் வரை ஜோஸ்பினை மறக்கவில்லை என்று அவர் இறக்கும்போது உடனிருந்தவர்கள் கூறியுள்ளனர். (அ-5)

# தூக்கை இரத்துச் செய்யக்கோரி வீரப்பன் சகாக்கள் மேன்முறையீடு

மிதிவெடித் தாக்குதல் தொடர்பில் தமக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை இரத்து செய்யக் கோரி வீரப்பனின் கூட்டாளிகள் 4 பேரும் உச்சநீதிமன்றத்தில் நேற்று மேன்முறையீடு செய்துள்ளனர்.

வீரப்பனின் கூட்டாளிகள் மீசை மாதையன், ஞானபிரகாஷ், பிலவேந்திரன், சைமன் ஆகிய 4 பேரும் கர்நாடகா மாநிலம் பெல்காம் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் நான்கு பேருக்கும் நாளையே (இன்று) தூக்குத்தண்டனை நிறைவேற்றப்படலாம் என பரபரப்பு தகவல்கள் வெளியாகின.

இதனையடுத்து தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டு விடுமோ என்ற அச்சத்தில் நால்வரின் உறவினர்களும் தூக்கு தண்டனையை இரத்து செய்யக் கோரி உச்ச நீதிமன்றத்திலும் மனு தாக்கல் செய்தனர்.

மேலும் மனுவை உடனடியாக விசாரிக்க வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றத்தை கோரியிருந்தனர்.


எனினும் மனுவை உடனடியாக விசாரிக்க உச்சநீதிமன்றம் மறுத்ததோடு நாளையே (இன்று) தூக்கு நிறைவேற்றப்படுகிறது என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது என மனுதாரர்கள் சட்டத்தரனியிடம் நீதிபதி அல்டமாஸ் கபீர் கேள்வியெழுப்பினார்.

இதேவேளை வீரப்பன் கூட்டாளிகள் 4 பேரும் நாளை தூக்கிலிடப்படமாட்டார்கள் என்று சட்டத்தரணி காலின் கன்சால்வஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

வீரப்பன் கூட்டாளிகள் மீசை மாதையன், ஞானபிரகாஷ், பிலவேந்திரன், சைமன் ஆகிய நால்வரிற்கு விதிக்கப்பட்ட மரண தண்டனைக்கு எதிராக அளிக்கப்பட்ட கருணை மனுக்களை குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி கடந்த 11 ஆம் திகதி நிராகரித்ததைத் தொடர்ந்து இதை உறுதி செய்த கர்நாடகா சிறைத்துறை டிஜிபி கருணை மனு நிராகரிக்கப்பட்ட 4 பேருக்கும் 14 நாட்களில் தண்டனை நிறைவேற்றப்படும் என கடந்த 13 ஆம் திகதியன்றே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

# ஊழலுக்கு எதிரான போராட்டத்தில் இளைஞர்கள் பங்கேற்க வேண்டும்

(நகரி)



அன்னா ஹசாரே

சமூக சேவகர் அன்னா ஹசாரே ஊழலுக்கு எதிராக இயக்கம் தொடங்கி போராட்டம் நடத்தி வருவதோடு ஊழலை ஒழிக்க சட்டம் கொண்டு வரவேண்டும் என்றும் மத்திய அரசை வற்புறுத்தி வருகிறார்.

மேலும் ஊழலுக்கு எதிராக பொதுமக்களின் ஆதரவை திரட்ட நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்து வருகிறார்.

நேற்று ஆந்திர மாநிலத்துக்கு பயணம் மேற்கொண்ட ஹசாரே தெரிக்கையில்,

ஊழலுக்கு எதிராக பிரசாரம் செய்யவும் மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் நான் நாடு முழுவதும் சுற்றுப் பயணத்தை செய்து வருகிறேன்.

இதற்காக இன்று (நேற்று) ஐதராபாத் வந்துள்ளேன். இளைஞர்கள் நினைத்தால் ஊழலை ஒழிக்க முடியும். எனது ஊழலுக்கு எதிரான போராட்டத்தில் இளைஞர்கள் தீவிரமாக பங்கேற்க வேண்டும். ஊழல் இல்லாத சமுதாயத்தை இளைஞர்கள் உருவாக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

ஐதராபாத் வெஸ்லி கல்லூரி மைதானத்தில் நேற்று மாலை நடந்த பொதுக்கூட்டத்திலும் அன்னா ஹசாரே கலந்து கொண்டார். இதில் இளைஞர்கள் பெருமளவில் பங்கேற்றிருந்தனர். (அ-5)

# காஷ்மீரில் நிலநடுக்கம்

(ஸ்ரீநகர்)

காஷ்மீர் மாநிலத்தில் ஸ்ரீநகர் மற்றும் அதனையொட்டி உள்ள பகுதிகளில் நேற்று முன்தினம் 7.05 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட் டது. அப்போது வீடுகள் இலேசாக அதிர்ந்துள்ளன.

இதனால் வீடுகளில் இருந்தவர்கள் பீதியுடன் வெளியே ஓடி வந்தனர். நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 5.2 ஆக பதிவானது.

சிறிய நிலநடுக்கம் என்பதால் சேதம் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலநடுக்கம் ஆப்கானிஸ்தானின் இந்துகுஸ் மலைப் பகுதியை மையமாக கொண்டு உருவாகி இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-5)

# இளவயது இசைப்பயிற்சி மூளைவளர்ச்சிக்கு உதவும்

## கனடா ஆய்வுத்தகவல்

இளம் வயதில் இசை கற்பது மூளை வளர்ச்சிக்கு உதவும் என கனடாவில் மேற்கொள்ளப்பட்ட சமீபத்திய ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவில் கான்கார்டியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மூளையின் செயற்பாடு பற்றிய ஆய்வொன்றை மேற்கொண்டனர்.

இந்த ஆய்வில் இளம் வயதில் குறிப்பாக ஏழு வயதுக்கு முன்பு இசை கற்றவர்களும் இளம் வயதை கடந்த பின் இசை கற்க தொடங்கியவர்களும் கலந்து கொண்டனர்.

இவர்களுடன சிறிதளவு இசை கற்றவர்கள் அல்லது இசையே கற்காதவர்கள் ஒரு அணியாக பங்கேற்றனர்.

இவர்களுக்கு இடையே செயற்பாட்டு திறன் எவ்வாறு உள்ளது என ஆராயப்பட்டது.

இந்த ஆய்வில் கலந்து கொண்டவர்களில் ஏழு வயதுக்கு முன் இசைக் கருவிகளை கற்றவர்களின் மூளைகளில் செயற்பாட்டு திறன் சிறப்பாக இருப்பது தெரியவந்துள்ளது. இவர்கள் அனைவரும் ஒரே நேரத்தில் அச்சு பிசகாமல் இசை கருவிகளை வாசித்து பாராட்டு பெற்றனர்.

அதே சமயம் இளம் வயதை கடந்த பின் இசை கற்றவர்கள் மற்றும் இசையே கற்காதவர்களின் மூளைகளில் மாற்றம் ஏதும் ஏற்படவில்லை என்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர்.

இந்த ஆய்வின் மூலம் இளம் வயதில் இசை கற்பதால் மூளையின் செயற்பாடு சிறப்பாக அமையும் என கண்டறியப்பட்டுள்ளது. (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட்

# ஆறாவது முறையாக ஆஸி சம்பியன்




மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான மகளிர் உலகக் கிண்ண இறுதியாட்டத்தில் அவுஸ்திரேலிய அணி 114 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இவ் வெற்றியின் மூலம் மகளிர் உலகக் கிண்ணத்தை 6-வது முறையாக கைப்பற்றி சாதனை படைத்தது.

மும்பை பிராபோர்ன் அரங்கில் இப்போட்டி நேற்று பிற்பகல் 2.30 மணிக்கு தொடங்கியது.

ஐ.சி.சி மகளிர் உலகக் கிண்ண ஒருநாள் கிரிக்கெட் தொடர் இந்தியாவில் மும்பை மற்றும் கட்டாக் நகரங்களில் நடந்தன.

மொத்தம் 8 அணிகள் இரு பிரிவுகளாக லீக் சுற்றில் மோதின.

இந்த லீக் சுற்றின் முடிவில் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் வெளியேற்றப்பட்டன.

இவ்விரு அணிகளுக்கும் இடையில் 7-ம் இடத்துக்கான ஆட்டத்தில் இந்திய அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற பாகிஸ்தான் 8-ம் இடத்துக்கு தள்ளப்பட்டது.




லீக் சுற்றைத் தொடர்ந்து நடைபெற்ற சுப்பர் சிக்ஸ் தொடருக்கு அவுஸ்திரேலியா, மேற்கிந்தியத் தீவுகள், இங்கிலாந்து, நியூசிலாந்து, இலங்கை, தென்னாபிரிக்கா ஆகிய அணிகள் தகுதி பெற்றன.

சுப்பர் சிக்ஸ் சுற்றின் முடிவில் அவுஸ்திரேலியா, மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றன.

இறுதிப் போட்டிக்குத் தெரிவாகாத அணிகளான இங்கிலாந்து - நியூசிலாந்து அணிகளுக்கு இடையில் நடைபெற்ற 3-ம் இடத்துக்கான போட்டியில் இங்கிலாந்து அணி 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற,

5-ம் இடத்துக்காக இலங்கை - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையில் நடைபெற்ற போட்டியில் 88 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணி வெற்றி பெற்றது.

உலகக் கிண்ணம் யாருக்கு என்பதை தீர்மானிக்கும் இறுதியாட்டத்தில் 5 முறை சம்பியனான அவுஸ்திரேலிய அணியை (1978, 1982, 1988, 1997,2005) உலகக் கிண்ண வரலாற்றில் முதல்முறையாக இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி எதிர்கொண்டது.

இத் தொடரில் தோல்விகளைச் சந்தித்திராத ஆஸி மகளிர் அணியை மேற்கிந்தியத் தீவுகள் மகளிர் அணி கடைசி சுப்பர் சிக்ஸ் ஆட்டத்தில் 8 ஓட்டங்களால் மண்டியிட வைத்தது.



இத்தோல்விக்கு பழிதீர்ப்பதுடன், 6-வது முறையாக மகளிர்உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றும் திடசங்கற்பத்துடன் அவுஸ்திரேலிய மகளிர் அணி களமிறங்க, அதே நேரம் இளம் வீரங்கனைகளைக் கொண்ட மேற்கிந்திய தீவுகள் மகளிர் அணியும் கிண்ணத்தை வெல்ல வரிந்து கட்டிக் கொண்டு களமிறங்கியது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய மகளிர் அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தீர்மானித்தது.




அவ்வணிக்கு ஆரம்பத்தில் ஜெஸ் கமரூன் (75 ஓட்டங்கள்), ஹெய்ன்ஸ் (52) பெற்றுக் கொடுக்க இறுதிநேரத்தில் அணித் தலைவர் ஜோடி பீல்ட்ஸும், பெரியும் இணைந்து அதிரடியாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர்.

இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்த இருவரும் முறையே 36, 25 ஓட்டங்களை எடுத்தனர்.

இவர்களின் ஓட்டக் குவிப்பின் உதவியுடன் ஆஸி மகளிர் அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 259 ஓட்டங்களை எடுத்தது.

இதனையடுத்து 260 என்ற கடின இலக்கை நோக்கி களமிறங்கிய மேற்கிந்திய மகளிர் அணிக்கு அவுஸ்திரேலிய அணியின் பந்துவீச்சு சிக்கலை ஏற்படுத்தியது.




இதன்காரணமாக மேற்கிந்தியத் தீவுகளின் விக்கெட்டுக்கள் சீரான ஓட்ட இடைவெளிகளுக்குள் விழுந்தன. இந்நிலைமை தொடர்ந்ததன் காரணமாக மேற்கிந்திய மகளிர் அணிக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

இறுதியில் அவ்வணி 43.1 ஓவர்களில் 145 ஓட்டங்களைப் பெற்று கண்ணீருடன் வெளியேறியது.

அந்த அணியின் சார்பில் அதிகபட்சமாக கிஷானா நைட் 21, அணித்தலைவி மெரிசா 23, டொட்டின் 22, கேம்ப்பெல்லி 11 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஆஸி மகளிர் சார்பில் எலிசா பெரி மிகச்சிறப்பாக பந்துவீசி 19 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இந்த வெற்றியின் மூலம் மகளிர் உலகக் கிண்ணத்தை 6-வது முறையாக கைப்பற்றி ஆஸி மகளிர் அணி வரலாற்றுச் சாதனை படைத்தது.

இப்போட்டியின் ஆட்ட நாயகியாக அவுஸ்திரேலிய அணியின் ஜெசிக்கா கமரூன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தொடரின் நாயகியாக நியூசிலாந்தின் சுசி பேட்ஸ் தெரிவானார்.

## இங்கிலாந்துக்கு எதிராக நியூசிலாந்து அணி வெற்றி

நியூசிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும் நியூசிலாந்து அணிக்குமிடையிலான முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் நியூசிலாந்து அணி வெற்றி பெற்றுள்ளது.

ஹமில்ற்றனில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி களத்தடுப்பில் ஈடுபடத்தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 49.3 ஓவர்கள் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 258 ஓட்டங்களைப் பெற்றது.

259 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 48.5 ஓவர்களில் 7 விக்கட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

3 போட்டிகள் கொண்ட இத்தொடரில் நியூசிலாந்து அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## சிங்களம் மற்றும் முஸ்லிம்...

யில் கிழக்கு மாகாண முதலமைச்சுச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

கிண்ணியா ஜம்இய்யத் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க் ஹிதாயத்துல்லா மற்றும் சபையின் நிர்வாக சபை உறுப்பினர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். அங்கு முதலமைச்சர் தெரிவித்தாவது,

இந்த நாட்டில் 1300 ஆண்டுகளாக இருந்து வந்துள்ள சிங்களம் மற்றும் முஸ்லிம் இன நல்லுறவை சீர்குலைக்க பெரும்பான்மை சமூகத்தவர்களில் மிகச்சிறிய எண்ணிக்கையிலான பேரினவாதக் குழுக்களால் திட்டமிடப்பட்டு முஸ்லிம் விரோதச் செயல்கள் நடத்தப்படுகின்றன.

இதனை வழி நடத்தும் சில வெளிநாட்டு முஸ்லிம் விரோத சக்திகள் அக்குழுக்களுக்கு பணத்தை வழங்கி மீண்டும் பயங்கரவாதச் சூழ்நிலையை ஏற்படுத்த முனைகின்றன.

இது குறித்து முஸ்லிம் மக்கள் எச்சரிக்கையுடனும் நிதானத்துடனும் நடந்து கொள்வதோடு ஐவேளைத் தொழுகையில் ஈடுபட்டு பாதுகாப்பு வேண்டி அல்லாஹ்விடம் பிரார்த்திக்க வேண்டும்.

மக்களை அமைதி காக்கும்படி உலமா சபையினரும் கோர வேண்டும். சுதந்திர தினத்தில் கலந்துகொள்ள திருமலை வந்திருந்த ஜனாதிபதியிடம் இவ்விடயம் தொடர்பாக நான் நீண்ட நேரம் உரையாடினேன். ஜனாதிபதி அப்போது மிகத்தெளிவாக நாடு எல்லோருக்கும் சொந்தமானது. எவரும் அச்சப்படத் தேவையில்லை.

குறிப்பாக முஸ்லிம் மக்களையும் பள்ளிவாசல்களையும் பாதுகாப்பது எனது கடமையாகும் என்று என்னிடம் உறுதியாகச் சொன்னார். ஒற்றுமைக்கு உதாரணமாக மூன்று இன மக்களும் வாழுகின்ற திருகோணமலை மாவட்டத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார் என்றார். (எ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசியால் வாடிய பர்மியர்...

தாக உயிர் தப்பிய பர்மிய நாட்டவர்கள் தெரிவித்துள்ளதாக அவர்களைச் சந்தித்து கலந்துரையாடிய காலி மாளிகாவில பௌத்த பிக்கு அஸ்ஸஜி தேரர் தெரிவித்தார்.

காலி துறைமுகத்துக்கு கொண்டுவரப்பட்ட 32 பேரும் அவர்களின் உடல்நிலை காரணமாக கராப்பிட்டிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு கடற்பரப்பிலிருந்து 225 கிலோமீற்றர் கடல் மைல் தொலைவில் நேற்று முன்தினம் மீட்கப்பட்ட 38 வெளிநாட்டவர்களும் காலி துறைமுகத்திற்கு அழைத்துச் வரப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு கடற்பரப்பில் வழிதவறி தத்தளித்துக் கொண்டிருந்த வெளிநாட்டவர்கள் 38 பேர் இலங்கைக் கடற்படையினரின் 'சாகர' கப்பலால் நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்டனர்.

இவர்கள் சில நாட்களாக உணவு, குடிநீர் இல்லாமல் கடலில் தத்தளித்ததால் நோய் தன்மைகளை எதிர்நோக்கிய நிலையில் மீட்கப்பட்டதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்திருந்தார்.

குறித்த மியன்மார் பிரஜைகள் நேற்று முற்பகல் 10 மணியளவில் அழைத்து வரப்பட்டு, தற்போது காலி கராப்பிட்டிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கவலைக்கிடமான நிலையில் இருந்தவர்களின் உடல்நிலை தற்போது தேறி வருவதாகவும் மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் சந்திம சிறிதுங்க தெரிவித்தார்.

குறித்த மியன்மார் பிரஜைகள் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் 3 படகுகளில் 130 பேர் வரை அவுஸ்திரேலியா செல்லும் நோக்கில் பயணித்துள்ளனர்.

இதன்போது, இரண்டு படகுகள் விபத்துக்குள்ளாகியுள்ளன. எஞ்சியவர்களை இலங்கை கடற்படையினர் மீட்டுள்ளனர்.

குறித்த மியன்மார் பிரஜைகளை மாளிகாவில அஸ்ஸஜி என்ற பௌத்த பிக்கு அழைத்துச் சென்றுள்ள நிலையில் அவர் மியன்மார் மொழிப் பெயர்ப்பாளராகவும் செயற்படுகிறார்.

நீண்டகாலமாக மியன்மாரில் வசித்து தற்போது காலியில் உள்ள பௌத்த மத பீடத்தில் அவர் வசித்து வருகிறார். மியன்மார் தூதரகத்தின் வேண்டுகோளுக்கிணங்க அவர் மொழி பெயர்ப்பாளராகச் செயற்படுகிறார்.

மியன்மார் பிரஜைகளிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, தம்முடன் வந்த 98 பேர் உணவு, நீர் இன்றி உயிரிழந்ததாகத் தெரிவித்துள்ளனர். (எ-8)

# இராணுவ விசார...

குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாக இந்த விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது படையினர் மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களை மீறிச் செயற்பட்டார்களா? என்பது பற்றி இராணுவ நீதிமன்றம் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

எனினும், இந்த அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், மக்கள் இந்த அறிக்கையில் நம்பிக்கை கொள்ளவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சிக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவம் மற்றும் காவல்துறையினரின் நேர்மைத்தன்மை குறித்து அரசாங்கம் உறுதி வழங்கி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தக் குற்றச்செயல்கள் தொடர்பில் அரசாங்கமோ இராணுவமோ விசாரணை நடத்துவது பொருத்தமற்றது. குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சிவில் சமூகத்தினரின் பங்களிப்புடன் கூடிய பொறிமுறைமை ஒன்று உருவாக்கப்பட வேண்டும்

விசாரணை நடத்துவது குறித்து இலங்கை அரசாங்கம் போதிய கரிசனை காட்டத் தவறியுள்ளதாக நவநீதம்பிள்ளை வருத்தம் வெளியிட்டுள்ளார். (எ-8)

# தெல்லிப்பழை தாக்குதல்...

மான மாவை சேனாதிராஜா தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

தமது சொந்த இடங்கள் இராணுவத்தினரால் அபகரிக்கப்படுவதை எதிர்த்தும், மீள் குடியேற்றத்தை வலியுறுத்தியும் வலிகாமம் வடக்கு இடம்பெயர்ந்தோர் மீள்குடியமர்வுக் குழுவின் ஏற்பாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை ஆலய முன்றலில் உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெற்றது.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்திற்குள் அத்துமீறிப் பிரவேசித்த சீருடை அணியாத இராணுவத்தினரும், சீருடையுடன் வந்த இராணுவத்தினரும் மக்கள் மீதும், ஊடகவியலாளர் மீதும் மிலேச்சத்தனமான முறையில் தாக்குதல் நடத்தியுள்ளனர். யாழ்.குடாநாட்டில் இராணுவக் காட்டாட்சிதான் நடைபெறுகிறது என்பதற்கு இந்தச் சம்பவம் தகுந்த ஆதாரமாகும்.

இந்தச் சம்பவத்திற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத்தளபதி மகிந்த ஹத்துருசிங்கவுமே முழுப்பொறுப்பு.

ஏனெனில் இவர்கள் இருவரும்தான் இராணுவத்தினர் யாழில் வன்முறைகளில் ஈடுபடுவதில்லை என்று கூறிவருபவர்கள்.

ஆனால், வெள்ளியன்று தெல்லிப்பழையில் வன்முறையை மக்கள் மீது வலிந்து கட்டவிழ்த்து விட்டவர்கள் இராணுவத்தினரே.

இதனால் ஆத்திரமடைந்த மக்கள், சிவில் உடையில் வந்து, தம் மீது தாக்குதல் நடத்திய இராணுவத்தினர் நால்வரை மடக்கிப் பிடித்து நையப்புடைத்துள்ளனர்.

அத்துடன் அவர்களைக் கைது செய்யுமாறு மக்களும், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அங்கு நின்ற பொலிஸாரிடம் தெரிவித்த போதும் பொலிஸார் வேடிக்கை பார்த்துள்ளனர். கடமைக்கு ஒருவரை மட்டும் பொலிஸார் கைது செய்துள்ளனர். ஏனைய மூவரும் சீருடையுடன் நின்ற இராணுவத்தினருடன் தப்பிச்சென்றுள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் இராணுவத்தினர், பொலிஸார் ஆகியோரின் வன்முறைகளுக்கு மத்தியில் தமிழ் மக்கள் வாழ்கின்றனர் என்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

எனவே, தெல்லிப்பழையில் நடந்த சம்பவத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் சர்வதேசத்தின் கவனத்திற்கு கொண்டு செல்வோம்.

இவ்வாறு கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்தார். (எ-8)

# தாக்குதலுக்கு...

மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இதனைத் தெரிவித்துள்ளார். தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர்,

இது ஊடகவியலாளரைப் படுகொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சி. எனவே, அவர் உடனடியாகப் பாதுகாக்கப்பட வேண்டும். இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தினால் நான் கலக்கமடைந்துள்ளேன். ஏனென்றால், அவர் ஒரு ஊடகவியலாளர்.

அவர் பொறுப்புக்கூறல், நீதித்துறை விவகாரங்களில் இலங்கை அரசாங்கத்தை விமர்சிக்கும் செய்தித்தாள் ஒன்றில் பணியாற்றுபவர். இந்த விவகாரங்கள் என்னால் கவனிக்கப்படுபவை.

நீதிக்குப் புறம்பான படுகொலைகள், ஆட்கடத்தல்கள், இந்த வகையான நடத்தைகள், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்துக்கு உள்ள தடைகள் குறித்து ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு எனது கரிசனைகள் அடங்கிய அறிக் கையை சமர்ப்பிக்கவுள்ளேன்.

இந்தச் சம்பவத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் தொடர்புள்ளதா? என்று சரியான விசாரணைகளை மேற்கொள்ளாமல் எந்த முடிபுக்கும் வரமுடியாது.

அதேவேளை, அவருக்கு பிரத்தியேக பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். பொது மக்கள் நம்பும்படியான நம்பகமான விசாரணைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். (எ-8)

# மத போதர்...

காரணம் என்று கூறிய அந்த அமைப்பின் செயலாளர் ஒருவர், உலமாக்கள் சபையை தடைசெய்ய வேண்டும் என்றும் பேசியுள்ளார்.

முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் சிங்கள மக்களுக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக அங்கு பேசிய பௌத்த பிக்கு ஒருவர் உரையாற்றியுள்ளார். (எ-8)

# குளத்தில்...

சம்பவ தினத்தன்று முற்பகல் 11.30 மணியளவில் குறித்த சிறுவன் தன்னுடைய உறவினரான 13 வயதுடைய சிறுவன் ஒருவரை அழைத்துக் கொண்டு வீட்டிலிருந்து சிறுதொலைவில் உள்ள வேணாகுளம் எனும் குளத்திற்கு குளிப்பதற்காகச் சென்றுள்ளார்.

அப்போது குளத்தின் ஆழமான பகுதிக்கு நீந்திச் சென்ற சிறுவன் நீரினுள் மூழ்கியுள்ளான்.

இதனையடுத்து கரையிலில் நின்ற சிறுவன் கூக்குரல் போட சம்பவ இடத்திற்கு விரைந்த அயலவர்களின் உதவியுடன் குளத்தில் மூழ்கிய சிறுவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதையடுத்து அங்கு வருகைதந்த பொலிஸார் சிறுவனின் உடலை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்ததுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.

சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. (எ-5)

# அமைச்ச...

வுக்கு கொண்டுவந்து பிரபாகரனை கொன்றொழித்தல், முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை சிறையிலடைத்தமை மற்றும் பிரதம நீதியரசரான ஷிராணி பண்டாரநாயக்கவை பதவியிலிருந்து நீக்கியமை ஆகியவற்றை ஜனாதிபதியினால் செய்ய முடியுமாயின் தன்னுடைய அமைச்சரவையை ஏன்? 13 ஆக குறைக்கமுடியாது என்றும் அவர் வினவினார். (எ-8)

# அமெரிக்கா...

காசம் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையும் இந்த யோசனையில் தீவிரமாக வலியுறுத்தப்படவுள்ளது. (எ-8)

14ஆவது ஆண்டு
நினைவஞ்சலி

தோற்றம்
01
01
1922

மறைவு
23
02
1999



அமரர்
ஸ்ரீமான் சின்னையா நல்லையா
(வட்டாரம் 6, மண்டைதீவு)
திதி :- மாச மாத பூர்வபட்ச அட்டமி

எங்கள் இதயத்தில் தெய்வமாய் வீற்றிருக்கும் ஐயா!
என்றும் உங்களை நாம் மறவோம்

கோவில் வீதி, கொக்குவில் —குடும்பத்தினர்

இந்து நாகரிகம்
ப.ஜோதீஸ்வரன்
DAY CLASS
சனி,ஞாயிறு 9-10
DMI JAFFNA
(C-2460)

மணல்
விற்பனைக்குண்டு
கட்டிட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் சிறந்த மணல் மண் இப்போது உங்கள் இடத்திற்கே கொண்டு வந்து தரப்படும்.
4 டிரக்டர் - 21,000/-
தொடர்புகளுக்கு
தீபன்
0772694462
(C-2462)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
French மொழி கற்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இவ்அரிய சந்தர்ப்பத்தினை தவறவிடாதீர்கள். மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.
புதிய வகுப்புக்கள் மிகவிரைவில்.. T.P.021.222.8093
61, Kachcheri-Nallur Road, Jaffna
(றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)
(1762)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.02.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.